மலர் - 3 இதழ் - 08

தமிழணங்கு

(தமிழால் இணைவோம்)

இலக்கியம், சமயம், பண்பாட்டு பன்மொழி ஆய்விதழ்

பிப்ரவரி 2025

தனிச்சுற்றுக்கு மட்டும்

ஆசிரியர்: முனைவர் திருமதி செ. இராஜேஸ்வரி

இராவணன் கண்ட சிந்தாமணி மருத்துவம்
அண்ணாமலை சுகுமாரன்

குலதெய்வங்களும் வழிபாட்டு முறைகளும்
முனைவர் ச. சீனிவாசன்

புதைப்பிடங்கள்: தாமிரபரணி நாகரிகமும் சுமேரிய நாகரிகமும்
முனைவர் மெய். சித்ரா

காலதேவன் வழிபாடு
முனைவர் செ. இராஜேஸ்வரி

இனக்குழுக்கள்– பேரரசு & இறைக்கோட்பாடு
முனைவர் சிவ. இளங்கோ

பாரதியும் இதழ்ப்பணியும்
திரு.மா.சிவஞானம்

உளவியல் நோக்கில் கூனி
முனைவர் சு.வினோத்

மதுரகவி ஆழ்வார்
ஜனக்புரி சீனிவாசன்

இன்னும் பல...



அன்பளிப்பு ரூபாய்: 120/-

தமிழர் இலக்கிய சமய பண்பாட்டு ஆய்விதழ்

தமிழனங்கு

(தமிழராய் இணைவோம்)

மலர்-3 பிப்ரவரி – 2025 இதழ்-8

சிறப்பாசிரியர்
பொறிஞர் கவிஞர் முத்தமிழ் விரும்பி

நிறுவனர் & தலைமைப் பதிப்பாசிரியர்
முனைவர். திருமதி செ. இராஜேஸ்வரி

பொறுப்பாசிரியர்
முனைவர். சந்திரிகா சுப்பிரமணியன்

ஆசிரியர் குழு
கிங்ஸ்டன் ஜெகநாதன் (இந்தியா)
தேமொழி (அமெரிக்கா)
அன்பு ஜெயா (ஆஸ்திரேலியா)
மின்னச்சன் இங்கர்சால் (நோர்வே)
Dr. புதேரி தானப்பன் (டில்லி)

வடிவமைப்பு
C. சந்திர விமல் M.A., B.Ed

தனி இதழ் .....ரூ 120
அரையாண்டு சந்தா.....ரூ 600
ஆண்டு சந்தா.....ரூ 1200

Google Pay / Phone Pay மூலம் செலுத்த
+91 7010997639

Thamizhanangu

Printed & Published by
E. Satish Rajkumar (Advocate)
3/422, Thiruvalluvar Street,
Dinamani Nagar, Madurai,
Tamil Nadu 625 018.
Ph: +91 7871123226, +91 7010997639

கட்டுரைகள் அனுப்புவோர்

rajetamiljuly1@gmail.com
thamizhanangu1@gmail.com க்கு அனுப்பவும்

இவ்விதழில் இடம்பெற்றுள்ள கருத்துக்கள் அனைத்தும் கட்டுரையாளர்களின் கருத்துகளே ஆகும். அந்த கருத்துக்களுக்கும் இதழாசிரியருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

- இதழ் ஆசிரியர்

உள்ளடக்கம்

1. காலதேவன் வழிபாடு
- முனைவர் செ. இராஜேஸ்வரி

2. பெயரெச்சம் ஆய்வு II
- பேரா.கு. இராமகிருட்டினன்

3. குலதெய்வங்களும் வழிபாட்டு முறைகளும் : சிறுதெய்வங்களை முன்வைத்து...
- முனைவர் ச. சீனிவாசன்

4. இனக்குழுக்கள் – பேரரசு – இறைக்கோட்பாடு
- முனைவர் சிவ. இளங்கோ

5. பாரதியும் இதழ்ப்பணியும்
- திரு.மா. சிவஞானம்

6. இராவணன் கண்ட சிந்தாமணி மருத்துவம்
- அண்ணாமலை சுகுமாரன்

7. சோழர் கால ஓவியங்கள் – 9
- மாரிராஜன்

8. உளவியல் நோக்கில் கூனி
- முனைவர் சு.வினோத்

9. மதுரகவி ஆழ்வார்
- ஜனக்புரி சீனிவாசன்

10. *Gene Notes in Vengai Anchor – I*
- *Dr. C. Rajeswari*

11. தமிழ் அச்சுக் கலைத் தந்தை ஆண்டிரிக்கசு அடிகளார்
- முனைவர் மோ. மைக்கேல் பாரடே

12. திருக்குறள் அறிந்ததும் அறியாததும்
– மாரிராஜன்

13. புதைப்பிடங்கள் - தாமிரபரணி நாகரிகமும் சுமேரிய நாகரிகமும்
- முனைவர் மெய். சித்ரா

14. தவறின்றித் தமிழ் எழுதுவோம்
- டாக்டர் புதேரி தானப்பன்

15. எளிய முறையில் யாப்பறிவோம்
- நெருப்பலையார் இராம. இளங்கோவன்

காலதேவன் வழிபாடு

முனைவர் செ. இராஜேஸ்வரி,
எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர், பதிப்பாளர்.
தமிழக அரசின் சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருதாளர்.

வரலாற்றுக்கு முந்திய காலத்தில் உலகின் தென் பகுதியில் மனிதர்கள் நாகரிகமும் பண்பாடும் பெற்று வாழ்ந்த போது காலம் என்ற கோட்பாட்டை இரவு பகல் என்ற பொருளிலும் [சீனாவில் யின் யான் என்றும்] சூரிய சந்திரர் இணைந்த வடிவிலும் உருவப்படுத்தினர். காலம் நகர்ந்துகொண்டே இருக்கும் யாருக்காகவும் நிற்காது என்ற கருத்தியலை உணர்த்த சக்கரத்தை வரைந்தனர். வெயிலுக்கும் நிலவுக்கும் காற்றுக்கும் மழைக்கும் கடவுள் ஒருவன் இருக்கிறான் என்ற கற்பனை தெய்வங்கள் உருவான காலத்தில் மரணத்துக்கும் ஒரு கடவுள் உருவாக்கப்பட்டான். ஒவ்வொருவருக்கும் காலம் முடியும் போது அவரவர் செய்த பாவ புண்ணியங்களுக்கு ஏற்ப பலன் கிடைக்கும். அதனை வழங்குவோன் எமன் எனப்பட்டான். [எமன் என்றால் எம்முடையவன்; அவன் உனக்கு எனக்கு என்று பாரபட்சம் காட்டாதவன் எனப் பொருள் கொள்ளலாம். ஜப்பானில் எமனை சற்று ஒலி மாற்றி 'என்எம்' என்றனர். வட மொழியில் இவனை யமன் என்பர். இவனே நீதிபதி என்றும் இறப்பினைக் கொடுத்து அவரவர் காலத்தை முடித்து வைப்பவன் என்றும் அறியப்பட்டான். காலத்தை கணக்கிடுவோன் காலன்; மரணத்துக்குத் தூதாக வருபவன் தூதன் என்றும் காலக்கடவுள் இன்னார் இனியார் எனாது தர்மத்தின் படி செயல்படுவான் என்பதால் அவனே தர்மன் என்றும் புரிந்து கொள்ளப்பட்டான்; அவனை எமதர்மன் என்றும் தர்மராஜா என்றும் அழைத்தனர். ஆக எமன், காலன், கால சாமி, கால் தேவன், தூதன், எம தர்மன் என்று பல பெயர்களில் இவன் அழைக்கப்பட்டான்

முழு நிலா கொண்டாட்டங்கள்

மண்ணுக்குக் கீழே இருந்து வரும் பாம்பு இறந்து போன முன்னோராகக் கருதப்பட்டது. கருப்பு நிறமும் அமாவாசையும் இறந்தவர்களுக்கானது. மேலே இருந்து வரும் மழை தேவலோகத்தில் இருந்து வருகிறது. அதனை வருவிக்கும் அல்லது அருளும் தெய்வம் பூமாதேவி என்னும் மண்மகளைச் சூலுறச் செய்யும் இந்திரன் எனப்பட்டான். புதிய பிறப்புடன் தொடர்புடையவையும் மேலே இருந்து வருபவையும் வெண்மை நிறத்துடன் தொடர்புபடுத்தப்பட்டன. ஆணும் பெண்ணும் சேர்ந்து ஆடிப்பாடிக் களிக்கும் இரவு என்பது முழு நிலவின் ஒளி மிகுந்த இரவாக அமைந்தது. பங்குனி, சித்திரை, வைகாசி முழு நிலா

இரவுகள் ஓர் ஆண்டின் அதிக ஒளி பெற்ற இரவுகள் ஆகும். அவை இரவைப் பகலாக்கும் முழு நிலா காலங்களாகும். பங்குனி முழு நிலா [பங்குனி உத்திரம்] காமனுக்குரிய நாளாகவும் [காமன் பண்டிகைத் திருநாள்] திருமணத்துக்குரிய நாளாகவும் [கோயில்களின் திருக்கல்யாண நாள்] வைக்கப்பட்டது. சிவன் மற்றும் முருகன் கோயில்களில் நடக்கும் தெய்வத் திருமணங்கள் இதற்குச் சான்றாகும்.. சித்திரை முழு நிலா இந்திர விழாவுக்குரியதாயிற்று. ஆக வெண்மை என்பது உயர்வு, பிறப்பு, மேலோகம், சுக்கிலம் சுரோணிதம், மகிழ்ச்சி, கொண்டாட்டம் ஆகியவற்றின் குறியீடுகள் ஆயின.



பிறப்பும் இறப்பும்

வெண்மை - கருமை, இந்திரன் - எமன், பிறப்பு – இறப்பு என்ற இருமை எதிர்வுகள் [BINARY OPPOSITIONS] ஆதி மனிதனின் சமயத்திலும் தொன்மங்களிலும் இருந்து வந்தன. இவை தென் பகுதியைச் சேர்ந்தவர்கள் கடல்கோள்களால் வடக்கே நகர நகர அவர்கள் போய்த் தங்கிய இடங்களிலும் செழித்து வளர்ந்தன. பாகிஸ்தான் மாநிலங்களில் ஒன்றான சித்ரால் என்ற பகுதியில் கைபர் கனவாய் அருகே வாழும் கலஷா எனப்படும் பழைய இனம் இவ்விரு கடவுளரையும் வணங்கி வருகிறது. இவர்கள் ஐயாயிரம் பேர் மட்டுமே. 1989 இல் இங்கு வந்து ஆய்வுகள் மேற்கொண்ட ஜோசெல் எல்ஃபின்பின் என்பவர் இவர்கள் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் இங்குப் படைஎடுத்து வந்த

திராவிட இனத்தவர் என்கிறார். சர்வன் & ஜக்லவான் என்போர் கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் இங்கு வந்து குடியேறிய புலம் பெயர்ந்தோர் என்கின்றனர். திராவிடப் பூர்வ குடியினருடன் அலெக்சாண்டரின் வீரர்கள் தங்கிவிட்டதால் அவர்களின் கலப்பினமாக உருவாகிய மக்கள் இப்போது வசிக்கின்றனர் எனக் கருத இடமுண்டு. ஆனால் அலெக்சாண்டரின் படை வீரர்கள் இங்கு தங்கியதாக ரட்யார்டு கிப்ளிங் எழுதிய கதை வெறும் கற்பனை என்ற கருத்தும் நிலவுகிறது.

தெற்கில் இருந்து வடக்கே சென்ற இந்திரனும் எமனும்

இந்திரனை முழு முதல் ஆரியக் கடவுள் என்று முத்திரை இடாமல் அவன் தென்பகுதியைச் சேர்ந்த திராவிடர்களின் மழைக் கடவுள் என்றே புரிந்துகொள்ள வேண்டும். நெல் வேளாண்மையில் ஈடுபட்டிருந்த ஆண்டு முழுக்க தண்ணீர் தேவைப்பட்ட ஆற்றங்கரையில் வாழ்ந்த மருத நிலமக்கள் மழைக்காக உருவாக்கிய உருவகப்படுத்திய கடவுள் இந்திரன் ஆவான். திராவிடர்கள் இந்தியாவில் மலை மற்றும் கடல் சார்ந்த பகுதிகளில் வாழ்ந்ததற்கான சான்றாக அவ்விடங்களில் திராவிட மொழிகள் இன்றும் பேசப்படுவதால் அறிய முடிகிறது. இவர்கள் பிறப்பு இறப்பு என்ற அடிப்படையில் மனித வாழ்க்கையைப் புரிந்துகொண்டு இந்திரனையும் காலனையும் [எமனையும்] வணங்கி வந்தனர். இடையில் வந்து குடியேறிய வந்தேறிகள் இந்திரனையும் எமனையும் மற்றும் இங்கு வணங்கப்பட்டு வந்த பிற தெய்வங்களையும் தமக்கேற்ப ஊர் மாற்றி பேர் மாற்றி கதைகள் புனைந்து புதிய வடிவம் அளித்தனர்.

தென் பகுதியில் இரண்டு மூன்று முறை கடல்கோள் [சுனாமி] ஏற்பட்டதாக வரலாற்றுத் தகவல்கள் உள்ளன.. கடல்கோள் ஏற்பட்ட போது இங்கிருந்து மக்கள் நீந்திச் சென்று கரை ஏறியதாகவும் அதனால் தமது முன்னோர் கடல் மாதாவின் பிள்ளைகள் என்றும் சுமேரியர்களின் [இன்றைய ஈராக், சிரியா, இரானின் ஒரு பகுதி] கில்காமேஷ் புராணம் சொல்கிறது. இதனால் அங்கு வழங்கும் எபிரேயம், அரமே, போன்ற செமித்திய மொழிகளிலும் திராவிட

மொழிகளின் இயல்பைக் காணலாம். [எபிரேய மொழியில் தமிழில் இருப்பதைப் போன்ற வல்லொலி மெல்லொலி அமைப்பு, குற்றியலிகரம் குற்றியலுகரம், புள்ளி எழுத்துகள் போன்றவற்றைக் காண முடியும்]. அங்கும் பிறப்பு இறப்புக்கான கடவுள் உருவகங்கள் ஆரமபத்தில் பிரிந்திருந்து பின்னர் அவை இரண்டும் ஒன்றாக இணைக்கப்பட்டதைக் காணலாம்.

பவுத்தத்தில் தொல் தமிழர் கடவுளர்

பவுத்த சமயம் மூன்றாம் நூற்றாண்டிலேயே தமிழகம் வந்துவிட்டது. இங்கு அசோகா மாமன்னர் நாகப்பட்டினத்தில் புத்த விகாரைகளை [வழிபாட்டு தலம், மருத்துவ மனை, துறவிகளின் சங்கம், நுலகம், தற்காப்பு பயிற்சி பயிலகம் என எல்லாம் சேரந்தது] எழுப்பினார். பவுத்தர்கள் பாத வழிபாட்டை தோற்றுவித்த முன்னோடிகள் ஆவர். ஐந்தாம் நூற்றாண்டில் தோன்றிய பல்லவனேஸ்வரத்தில் பவுத்தர்களின் பாத வழிபாடு நடந்தற்கான அடையாளம் உள்ளது. தமிழகத்தில் இச்சமயம் ஏழாம் நூற்றாண்டு வரை செல்வாக்குடன் திகழ்ந்தது. கி.பி. 440இல் பிறந்த போதி தர்மர் சீனாவுக்கு சென்று பவுத்த சமயத்தைப் பரப்பினார். அதன்பின்பு பவுத்தம் அங்கிருந்து ஜப்பான் கொரியா முதலிய நாடுகளுக்குச் சென்றது. பவுத்த துறவிகளைத் தர்க்கத்தில் வென்ற சங்கரர் இந்திரர் சரஸ்வதி என்ற வெற்றிப்பட்டத்தை பெற்றார். அதன் பிறகு அவர் உருவாக்கிய காஞ்சி சங்கர மடத்தில் பீடாதிபதிகள் இந்திர சரஸ்வதி பட்டத்தோடு புதுப் பெயர் பெற்றனர். சிவன் கோயிலில் இந்திரன் விலக்கப்பட்டான்.

பவுத்த சமயம் தமிழகத்துக்கு வந்த காலத்தில் இங்குப் புதிதாகப் பரவிய இடத்தில் அது வரை அப்பகுதியில் வழிபட்டு வந்த தெய்வங்களைத் தமதாக்கிக் கொண்டது. இந்திரன் எமன் மற்றும் பெண் தெய்வங்கள் பவுத்த சாயலில் புதிய பெயர் மாற்றம் பெற்றனர். இந்திரன் தேவராஜா எனப்பட்டான். இந்திரனை சக்ரா, சக்கா, சாக்கா, என்று பவுத்தர்கள் அழைத்தனர். இதனால் இந்திரனை வணக்கும் பவுத்தர்களை சாக்கியர் என்பாட்டனர். அவர்களது சடங்குகள் சாங்கியம் எனப்பட்டன. கவுதம புத்தரை சாத்தன் [சாஸ்தா] என்றனர். இந்திரன் செல்வாக்குடைய தெய்வம் என்பதால் புதிய சமயம் அவனை தன்னுள் ஐக்கியப்படுத்திக் கொண்டது. புத்தரின் ஒரு பக்கம் இந்திரனும் மறு பக்கம் பிரமனும் இருத்தப்பட்டனர். பிரம்மன், சரஸ்வதி, எமன், குபேரன், வருணன் ஆகியோர் புத்த சமயக் கடவுள்கள் ஆயினர்.

பவுத்த சமயம் பெண் தெய்வ வழிபாட்டையும் உடலை யோக சாதனமாகப் பயன்படுத்தும் முறையையும் கற்றுத்தந்தது. இறப்புக்குப் பிந்திய வாழ்வை வலியுறுத்தியது. அதனால் இன்றும் ஒருவர் இறந்து போனால் அவர் சொர்க்கத்துக்குப் போவதற்காக பவுத்த துறவிகளிடம் பணம் கொடுத்து சீட்டுப் பெறும் முறை இருக்கின்றது. குறுந்தொகைத் தலைவி [292] இரவுக் குறி

வந்திருக்கும் தன் தலைவனைக் காணப் போக முடியாமல் தவித்தபடி, இன்னும் உறங்காமல் இருக்கும் தன் தாயை நினைத்து 'அவள் பெண் கொலை செய்த நன்னன் போன, மீண்டு வர முடியாத கீழான நரகுக்குச் செல்வாள்' என்று மகள் சபிக்கிறாள். பாடல் எழுதப்பட்ட காலத்தில் தமிழகத்தில் நரகங்களின் நம்பிக்கை மற்றும் எண்ணிக்கை அதிகரித்திருந்த நிலையை இப்பாடல் உணர்த்துகிறது. ஜப்பானில் மீண்டு வர கூடிய நரகம், வர இயலாத நரகம் என்று இரு வகை நரகங்கள் இருப்பதாக பவுத்த சமயத்தில் ஓர் நம்பிக்கை உள்ளது.

எமதர்மன் வழிபாடு

எமன் தர்மதேவன் எனப்பட்டதால் அவனது கோயில்கள் தர்மராஜா கோயில்கள் எனப்பட்டன. இந்திரனுக்கு உரிய கோயில்கள் தேவராஜா கோயில்கள் எனப்பட்டன. மயிலை. சீனி. வேங்கடசாமி தனது பவுத்தமும் தமிழும் என்ற நூலில் தர்மராஜா கோயில்கள் புத்தர் கோயில்கள் என்கிறார். தாரா தேவி கோயில் பிற்காலத்தில் திரவுபதி கோயில்கள் ஆயின என்கிறார். திரவுபதி சமேத தர்மராஜா கோயில்கள் இன்றும் தாராபுரம் முதலான பல ஊர்களில் இருக்கின்றன. மாமல்லபுரத்தில் உள்ள பாண்டவர் ரதம் தர்மராஜா கோயில் ஆகும். எமனுக்கு கோயில் எழுப்பிய இடங்களில் அவனுடன் காலன், தூதன் ஆகியோரும் இடம் பெற்றனர். எமதர்ம வழிபாடு தமிழகத்தில் பக்தி இயக்கத்துக்கு பிறகு எருமை மீதமர்ந்து வரும் கரிய கொடிய தோற்றமுடைய கடவுளாக உருமாறியது.

காலசாமி கோயில்

எம தர்மனுக்கு முன்பு அதன் அடையாளமாக ஒரு தூண் மட்டுமே நட்டு வைத்து அக்காலத்தில் வணங்கினர். உருவ வழிபாடு செய்யவில்லை. இன்றும் தென்காசி தாலுகாவில் வல்லம் என்ற ஊரில் ஆதி கோயிலாக காலசாமி கோயில் இருக்கிறது. மதுரை மாவட்டத்தில் டி. கல்லுப்பட்டி சுப்புலாபுரம் அருகில் நேரக் கோயில் என்ற பெயரில் காலக் கடவுள் கோயில் உண்டு. இவ்விரண்டு இடத்திலும் கீழே அகலமாகவும் மேலே குறுகலாகவும் செல்லும் ஐந்தடி உயரத் தூண் உண்டு. அதன் மேல் பகுதி கூம்பாக இல்லை; தட்டையாக இருக்கும். காலம் நகர்வதைக் குறிக்கும் வகையில் இத்தூணில் சூரிய சந்திரர் உருவம் பொறித்திருப்பதைக் காணலாம். இதுவே ஆதி வடிவம் ஆகும். பின்னர் உருவம் வரைந்தும் சிற்பம் செய்தும் வழிபட்டனர்.

குலசாமியாக விளங்கும் எமதர்மர்

எமதர்மரை வணங்குவோர்தம் பிள்ளைகளுக்கு தர்மர், தர்மராஜா, ஏமராஜா, ராஜ- எனத் தொடங்கும் பிற பெயர்களைச் சூட்டுவது மரபு. ஸ்ரீவில்லிபுத்தூரில் மூன்று இடங்களில் ஏமராஜா கோயில்கள் உண்டு. பெரிய கோயில், நாடார்களின் குலதெய்வமாக கம்மாபட்டி கருப்பட்டி ஊரணி அருகில் இருக்கும் கோயிலும்,

சென்னா குளம் புதுப்பட்டியில் கோனார்களின் குலதெய்வமாக ஒரு கோயிலும் உள்ளன. பெரிய கோயிலுக்குள் எமனுக்குத் தனியாக கோயில் உண்டு. [இந்தக் கோயிலில் பணியாரம் வேகும் சூடான எண்ணெய்க்குள் வெறும் கையை விட்டு அரித்து எடுக்கும் அதிசயம் ஆண்டுதோறும் நடக்கும். ஒரு பாட்டி விரதமிருந்து இதைச் செய்வார்.] நாடார்கள் கோயிலில் ஆவணி மாதம் கடைசி வெள்ளியன்று ஆண்டு பூஜை நடத்தப்படும். அப்போது பூப்பந்தல், கரும்பு பந்தல் போட்டு வணங்குவர். இவர்கள் உடன்குடியில் இருந்து வடக்கே இடம் பெயர்ந்தவர்கள். உடன்குடியில் இருந்து அழகிய பாண்டியபுரம் வந்து அங்கிருந்து ஸ்ரீவில்லிபுத்தூர் வந்தனர். அவ்வாறு வந்த ஏழு குடும்பங்கள் இன்று ஐநூறு தலைக்கட்டுகளாக வளர்ந்துவிட்டன. எனவே இங்கு குடும்பங்கள் பெருகச் செய்த பிச்சமுத்து ஐயாவுக்கும் உள்ளே சிலை உண்டு. எமன், காலன் தூதன், ஐயனார், வன்னியராஜா, வெண்ணாங்கிழவி என்ற ஆறு பேருக்கும் இங்குக் கோயில் உண்டு. வெண்ணாங்கிழவிக்கு மட்டும் முறம், காதோலை, கருகமணி, பிச்சிப் பூ வைத்து வழிபடுகின்றனர். மற்ற தெய்வங்களுக்கு எந்தப் பூவும் சாற்றலாம்.

பூ பந்தல் நேர்ச்சை

பூ பந்தல் முதலான பூ தொடர்பான நேர்ச்சைகள் பவுத்தர்கள் சித்தர்களாக காடு மலைகளுக்குள் போய் ஒளிந்து மறைந்து வாழத் தொடங்கிய பிறகு ஏற்பட்டதாகும். மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் எல்லாம் வல்ல சித்தருக்கு பூப்பந்தல் நேர்ச்சை நடைபெறுவது உண்டு. சைவ வைணவ சமயங்கள் செல்வாக்குப் பெற்ற காலத்தில் அவர்கள் பவுத்தர்களையும் சமணர்களையும் கடுமையாகத் தண்டித்து அவமானப்படுத்தி உயிர்க்கொலையும் செய்தனர். இதனால் பலர் மேற்குத் தொடர்ச்சி மலைகளில் போய் மறைந்து வாழத் தொடங்கினர். இவர்கள் மிகச் சிறந்த காலக் கணிதர்களாக விளங்கினர். விண்மீன்களையும் கோள்களையும் வெறும் கண்ணால் நோக்கி எதிர்கால நிகழ்வுகளைக் கணித்துக் கூறினர். அவர்களில் பலர் இரசவாதம், ஜோதிடம், மருத்துவம் போன்றவற்றில் சான்றோர்களாகி சித்தர்கள் எனப்பட்டனர். வேறு சிலர் களரி, சிலம்பம், வர்மம், குங்ஃபூ, கராத்தே [பெயர்கள் பிற்காலத்தவை] போன்ற தற்காப்புக் கலைகளில் தேர்ச்சி பெற்று பெற்று ஆசான்களை உருவாக்கினர். இவர்களின் பாடல்களில் சிவன், முருகன் என்ற பெயர்கள் இடம்பெற்றாலும் அவை புராணக் கடவுளர்களாக இல்லாமல் தத்துவக் கோட்பாடுகளாக விளங்கின.

புத்தமும் சித்தமும்

ஜப்பானுக்கு பவுத்தம் பரவிய போது அங்கு எழுதப்பட்ட பவுத்த நூல்களின் எழுத்து வடிவம் சித்தம் எனப்பட்டது. சித் என்றால் அறிவு. அறிஞர்கள்

எழுதியவை என்ற பொருளில் அந்த எழுத்து வடிவம் சித்தம் எனப்பட்டது. இங்கிருந்து சென்ற போதிதர்மர் போன்றோர் பரிபாஷையில் எழுதப் பயன்படுத்திய எழுத்துமுறையை சித்தம் என்றிருக்கலாம். ஏறத்தாழ ஐந்தாம் நூற்றாண்டு வரை இந்தியாவிலும் சித்தம் என்ற எழுத்து முறை இருந்தது. சித்தம் எழுத்து முறையைப் பயன்படுத்தியவர்கள் இங்கு சித்தர் எனப்பட்டனர். பக்தி இயக்க காலத்தின் போது இவர்கள் பரி பாஷையில் நூல்களை எழுதினர். இந்நூல்கள் சித்தர் இலக்கியம் ஆயிற்று. [இது குறித்து மேலும் ஆராய்ச்சி தேவைப்படுகிறது] ஜப்பானில் கியோத்தோவில் இநோஜியில் உள்ள எமன் கோயிலை என்ம கோயில் என்று அழைக்கின்றனர். ஜப்பானில் ன், ம் ஆகிய இரண்டு ஒலிகளின் கலவையாக ஒரு மெய்யெழுத்து உள்ளது. மொழியியலில் NASALAISED ENDING என்று சொல்வதற்கு நிகரானது இந்த 'ன்ம்' என்ற மூக்கொலி வடிவம். இது மகர ஒலி போல ஈரிதழ் ஒலியாக முற்றுப் பெறாது. எனவே 'என்ம்' என்ற ஒலியுடன் எமன் அங்கு அழைக்கப்படுகிறான்.

காலனும் காலபைரவனும்

காலம் என்ற கோட்பாட்டை ஒவ்வொரு மதமும் ஒவ்வொரு வகையில் ஏற்றுக்கொண்டது. சைவ சமய எழுச்சிக் காலத்தில் தமிழகத்தில் பெருங்கோயில்கள் கட்டப்பட்ட சமயத்தில் காலனை சிவனின் ஒரு வடிவாகக் காலபைரவர் என்ற பெயரில் தென் கிழக்கு மூலையில் தனிச் சந்நிதியில் வைத்தனர். . நாய் காலத்தைக் குறிக்கும் குறியீடாகவும் கால பைரவரின் வாகனமாகவும் இடம் பெற்றது. [ஜெயமோகன் கதை ஒன்றில் அடிக்கடி நாய் வந்து போவதைப் பற்றி அவரிடம் கேட்ட போது அவர் நாய் காலத்தின் குறியீடு என்றார்]. காலனை வழிபடுவோர் காலசாமியை வணங்குவோர் தமது பிள்ளைகளுக்குக் காலசாமி, காலம்மாள் என்று பெயர் சூட்டுவர். ஆனால் காலம் என்ற தத்துவத்தை கால பைரவராக ஏற்றுக்கொண்ட சைவ சமயம் தமது மதத்தினருக்கு பைரவன் என்று பெயர் சூட்டும். வைணவம் காலம் அல்லது காலசாமியை சுழலும் சக்கரமாக ஏற்றுக்கொண்டது. பெருமாளின் பெரிய திருவடியாக சக்கரத்தாழ்வார் என்ற பெயரிலும் பெருமாளின் ஆயுதமாக சுதர்சனம் என்ற பெயரிலும் வைணவம் காலசாமியை ஏற்றுக்கொண்டது. திருமோகூரில் சக்கரத்தின் மீது இரண்டு

கால்களையும் அகல வைத்து சர்க்கஸில் ஒற்றைச் சக்கரத்தைச் சுற்றிக்கொண்டு வருபவர் போல சக்கரத்தாழ்வாரின் ஒரு புடைப்புச் சிற்பம் பழுதுபட்ட நிலையில் இருப்பதைக் காணலாம். காலச் சுழற்சியை சுட்டிக் காட்டும் சிற்பமைதிகளில் இதுவும் ஒன்று. ஆதிமனிதனின் காலம் பற்றிய கருத்தாக்கம் சமயங்களின் வாயிலாக எமன் என்றும் சக்கரத்தாழ்வார் என்றும் வளர்ந்தது. காலம் என்பது சுழன்றுகொண்டே இருக்கும் என்பதைக் குறிக்கும் வகையில் இச்சக்கரத்தாழ்வார் சிற்பம் அமைந்துள்ளது.

எமதர்மனும் புத்த தர்மமும்

எமன் [தர்மன்], காலன் என்ற கருத்தாக்கங்கள் தர்மச்சக்கரமாக பவுத்தத்தில் இடம்பெற்றது. இதனைத் தூய தமிழில் அறவாழி என்றும் அழைத்தனர். திருக்குறளில் 'அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார்க் கல்லால், பிறவாழி நீந்தல் அரிது' என்ற கடவுள் வாழ்த்துப் பாடல் புத்தரைக் குறிக்கிறது என்பதற்கு இந்த அறவாழி என்ற சொல்லை எடுத்துக்காட்டுவார். பவுத்தம் தம்ம பதம் என்ற நூல் மூலமாக தர்மத்தை விளக்கியது. அவர்களின் முன்று கோட்பாடுகளுள் [புத்தம் சரணம் கச்சாமி, சங்கம் சரணம் கச்சாமி, தர்மம் சரணம் கச்சாமி] தர்மமும் ஒன்றாகும். இந்து சமயத்தில் சிவ, விஷ்ணு புராணங்கள் எழுதப்பட்ட காலத்தில் சக்கரம் வைணவத்தில் சக்கரத்தாழ்வாராக சமஸ்கிருதத்தில் சுதர்சன் என்ற பெயரில் இடம்பெறலாயிற்று. காலம் இரவு பகல் என்று மாறி மாறி சுழன்று வருவது போல சக்கரமும் சுழன்றுகொண்டே இருக்கும். இதுவும் ஒரு உருவகம்.

காலி, காளி மற்றும் காலன், காளன் ஆகியவற்றுக்குள் வேறுபாடு இல்லை. காளன் எனப்படுவான் இந்திரனின் உதவியாளன் அவன் இந்திராணியை மீட்க உதவினான் என்று புராணக் கதையும் உள்ளது. திபெத்தில் மகா காலன் பெருந்தெய்வமாக வணங்கப்படுகிறான் சைவ வைணவ எழுச்சிக்குப் பிறகு எமனின் பணியை சிவனும் கிருஷ்ணனும் புரிவதாகவும் புதிய கருத்தாக்கங்கள் தோன்றின. சைவ சமயத்தில் சிவனின் பணி அழித்தல் ஆகும். அதுவே எமனின் பணியும் ஆகும். வைணவத்தில் கிருஷ்ணன் எல்லா உயிர்களும் தன்னில் வந்து அடங்கும் என்றதனால் அதுவும் ஏறத்தாழ எமனின் பணியை எடுத்துக்கொண்டதாகக் கொள்ளப்படும்.

இந்து சமயத்தில் எமதர்மன்

மச்ச,கருட, விஷ்ணு புராணங்களில் எமனை யமன் என்பர். அவனைப் பற்றிய கதைகள் புராணங்களில் நிறைய உண்டு. எமனின் தந்தை சூரியன்; தாய் சந்தியா அல்லது சரண்யா [அந்திப்பொழுது]; இவள் விஸ்வகர்மாவின் மகள் ஆவாள். யமனுடன் பிறந்த இரட்டை சகோதரி யமி ஆவாள். எமனுக்கு நிறைய மனைவியர் உண்டு. ஐயோ என்பவள் நாட்டுப்புற நம்பிக்கையில்

காணப்படுபவள். ஐயோ தவிர ஹேமமாலா, விஜயா, சுசிலா என்று மூன்று மனைவியர் உள்ளதாக புராணங்கள் சொல்கின்றன. யமனின் மனைவி பெயர் ஊர்மிளா என்று மகாபாரதம் சொல்கிறது. மேலும் தர்மர் யமனுக்கு பிறந்தவர் என்று இறப்பையும் தர்மத்தையும் இணைத்துக ஒரு குடும்பமாக்கியது. தாகத்தால் தவித்து தண்ணீர் தேடி வந்த போது நீர்நிலையைக் காவல் காத்த பூதம் ஒன்று, தான் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொன்னால் மட்டுமே தண்ணீர் தருவேன் என்று சொல்லி பதில் சொல்லாத நால்வரையும் கொன்றுவிடும். அதன் பிறகு தர்மர் வந்து அனைத்துக் கேள்விகளுக்கும் சரியாகப் பதில் சொல்வார். அப்போது பூதம் தான் எமன் என்ற உண்மையை அவருக்கு உணர்த்தும். அந்தக் எமனோடு நடக்கும் நீண்ட உரையாடல் தத்துவ விசாரமாக இருக்கும். கடோபநிடதத்தில் எமன் நசிகேதனுக்கு மரணம் மற்றும் மரணத்துக்குப் பிந்தைய வாழ்வு பற்றி உபதேசிக்கிறான். இவ்வாறு மரணத்தின் முலம் வாழவின் மாற்றவியலா உண்மைகளை எமன் பிறருக்கு உணர்த்தும் ஞானி ஆகிறான்.

காலசாமி கோவில், வல்லம், தென்காசி (பட உதவி பொதிகை குடும்பன்)

தமிழகத்தில் எமதர்மனுக்கு கோயில்கள்

சைவ எழுச்சியின் போது சமண பவுத்த கோயில்களின் கடவுளர் நீக்கப்பட்டு அங்கு சிவனுக்கு இடமளிக்கப்பட்டது. ஏற்கெனவே இருந்த இந்திரன் எமன் பிரம்மன் போன்ற கடவுளர் சிவனால் பாவ விமோசனம் பெற்றதாகக் கதைகள் புனையப்பட்டு பரப்பப்பட்டன. திருச்சி தஞ்சை மாவட்டங்களில் பவுத்தம் பரவிச் செல்வாக்குப் பெற்றிருந்ததை அங்குள்ள கோயில்களின் இறைவன் பெயர்களின் வாயிலாகக் காணலாம். அங்கு இந்திரனுக்குக் கட்டப்பட்டிருந்த

கோயில்கள் பின்னர் சிவன் கோயில்களாக மாற்றப்பட்டன. தல புராணங்கள் வாயிலாக இந்திரன் சாபம் தீர்த்த கதையைக் கற்பித்தனர். ஆனாலும் அங்குள்ள சிவன் இந்திரனின் பெயரால் கண்ணாயிர நாதர் என்று புதுப்பெயர் சூட்டப்பட்டார். இது போல திருக்கடையூர் சிவபெருமான், காலனை வதம் செய்த காலசம்ஹார மூர்த்தியாகக் காட்சி அளிக்கிறார். இது பழைய காலதேவனின் கோயில் ஆகும். திருச்சிற்றமபலம் என்ற தலத்தில் தனது தவத்தைக் குலைத்த மன்மதனை எரித்து சிவன் பஸ்பமாக்கினார். அங்கு எமனுக்கு தனிச்சன்னிதி உண்டு. அவனுக்கே முதல் பூஜை நடைபெறும். அது பழைய எமன் கோயிலாக இருந்து பின்னர் சிவபெருமானுக்கு இடம் அளித்தது. இங்குள்ள தீர்த்தம் எம தீர்த்தம் எனப்படும். அதில் பெண்கள் நீராடுவதில்லை. பாமக்குடி அருகே எமனேஸ்வரம் என்ற தலத்தில் சிவபெருமான் அனுக்கிரக மூர்த்தியாக எழுந்தருளி உள்ளார். இங்கு எமனுக்கு சிவன் அனுக்கிரகம் செய்ததாக தல புராணம் கூறுகிறது.. இங்குல்ல தீர்த்தத்துக்குப் பெயர் எம தீர்த்தம்.. இங்கு நாய் இல்லாத பைரவரை தரிசிக்கலாம். இதுவும் எமனுக்குரிய பழைய கோயில் ஆகும்.

மார்க்கண்டேயனை அவன் ஆயுளைப் பறிக்க வேண்டிய நாளன்று பாசக் கயிறை வீசி எமன் பிடிக்க முனைந்த போது அவன் சிவலிங்கத்தைக் கட்டிபிடித்ததால் கயிறு லிங்கத்தின் மீதும் சுற்றியது. இதனால் எமனை சிவபெருமான் சபித்தார். இக்கதை எமனை விட பெரிய கடவுள் சிவன் என்ற கருத்தை மக்கள் மனதில் ஆழமாகப் பதித்தது. இது போன்ற கதைகள் எமனின் முக்கியத்துவத்தை குறைக்க உதவின. ஆயினும் நாட்டார் வழக்கில் எமதர்மனை குலதெய்வமாக வழிபடும் நிலை தொடர்ந்தது.

தென்கிழக்கு நாடுகளில் எமன் வழிபாடு

திபெத் நாட்டில் வஜ்ராயன் பவுத்தம் பின்பற்றபப்டுகிறது. இங்கு எமனை *GSINRJE* என்ற பெயரால் அழைப்பர். அழிவைத் தருபவன் என்பதால் யமாந்தகன் அல்லது யமாந்தக வஜ்ர பைரவன் என்றும் அழைக்கப்படுகிறான். இந்த வஜ்ரபைரவன் அசுர முகமும் காலுக்குக் கீழே ஒருவனைப் போட்டு மிதிக்கும் உருவத் தோற்றத்துடனும் இருப்பான். கம்போடியாவில் உள்ள அங்கோர்வாட் கோயிலிலும் இதே உருவ அமைப்புடன் எமனைக் காணலாம். சீனாவில் உள்ள ஏராளமான் கோயில்களில் எமனுக்குரிய சந்நிதி அல்லது சிலை இருப்பதைக் காணமுடியும். ஜப்பானில் எமனை என்ம தென் என்று அழைக்கின்றனர். என்ம என்றால் எமன்; தென் என்றால் தெய்வம். என்ம ஓ, என்ம தாயி ஓ என்றும் அழைப்பதுண்டு. தாயி என்றால் பெரிய என்பது பொருள். [தாயி புத்சு என்றால் பெரிய புத்தர்]. எமன் ஒரு பெருங்கடவுள் என்பதையே இச்சொற்கள் குறிக்கின்றன. எமன் பற்றிய தகவல் அங்குப் பழைய நூல்களில் காணக்

கிடைக்கின்றன.. எமன் அங்கும் பாவங்களுக்குத் தண்டனை தரும் நீதிபதியாகப் போற்றப்படுகிறான்.

பவுத்த சமயத்தில் நரகங்கள்



பவுத்த சமயம் மரணத்துக்கு பிந்தைய வாழ்வு குறித்து அதிகம் போதித்தது. இறந்த பின்பு உயிர்கள் நரகத்தில் அனுபவிக்கும் தணடனைகள் குறித்தும் விளக்கின. அடுக்கடுக்கான நரகங்கள் இருப்பதாக அச்சுறுத்தின. நரகங்களின் பொறுப்பாளனாக காவலனாக எமதர்மன் இருந்தான். அவன் தர்மத்தின் வழியில் ஆத்மாக்களைத் தண்டிப்பான். ஜப்பானில் புண்ணியாத்மாக்கள் சொர்க்கம் புகும். பாவாத்மாக்கள் குறைவாகப் பாவம் செய்திருந்தால் மேய்தோ *[meido]* எனப்படும் நரகத்துக்குப் போகும் அங்கு சில காலம் தண்டனை அனுபவித்துவிட்டுப் பின்பு வெளியேறும். நிறைய பாவம் செய்த ஆத்மாக்கள் ஜிகோகு *[jigoku]* என்ற நரகத்துக்கு போய் அங்கேயே கிடந்து உழலும்; அதற்கு விடுதலையே கிடையாது. கொரியாவில் நரகத்தை ஜியோக் *[jiok]* என்றும் வியதனாமில் *dia nguc* என்றும் அழைக்கின்றனர். *dia nguc* என்றால் வியத்னாமிய மொழியில் பூமிச் சிறை என்று பொருள்.

நிறைவு

பிறப்பு *[வழமை]* மற்றும் இறப்பு *[அழிவு]* கடவுளரான இந்திரனும் எமனும் தொல்தமிழர் வாழ்வில் வழிபட்டு வந்த ஆதி கடவுளர் ஆவர். திராவிடர் வாழ்ந்த இடங்களில் எல்லாம் இக்கடவுளர் வழிபாடு இருந்தது ஆரியர் வரவுக்கு பின்னர் இவற்றிற்குப் புதிய வடிவமும் செயற்பாடும் கொண்ட புனைகதைகள் உருவாயின. இந்திரனும் எமனும் கொடியவராகச் சித்திரிக்கப்பட்டனர். இருப்பினும் பழமை மாறாத, மறவாத நாட்டுப்புற மக்கள் தமது குல தெய்வமாக எமனை வணங்கி வருகின்றனர். தவறு செய்தால் கடவுள் தண்டிப்பார் என்ற அச்சத்துடன் மட்டுமே தெய்வ வழிபாடு நடைபெறுகின்றது.

பெயரெச்சம் ஆய்வு II

பேரா.கு.இராமகிருட்டினன்,
முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்,
தெ,இ,மொ,துறைத்தலைவர்,
பஞ்சாபு பல்கலைக்கழகம்,
சண்டிகர்-160014

பெயருக்கு முன்பாக வந்து பெயரை விளக்குவது பெயரெச்சம் என்று அறிவோம். இது மூன்று காலங்களிலும் வெவ்வேறாக வரும் எ.டு.: வந்த ஆள், வருகின்ற ஆள், வரும் ஆள். பொதுவாக இறந்த காலத்திலும் நிகழ்காலத்திலும் பெயரெச்சம் அகரத்தில் முடியும் ஆனால் காலம் கரந்த பெயரெச்சமான வினைத்தொகை முக்காலத்துக்கும் பொதுவானது. எ.டு: செய் தொழில் (இது செய்த தொழில், செய்கின்ற தொழில்,செய்யும் தொழில் என்ற மூன்றுகாலத்துக்கும் பொது.),

பெயரெச்சம் உடன்பாட்டுப் பெயரெச்சம் ,எதிர்மறைப் பெயரெச்சம் என்று இருவகைப்படும். எ.டு: செய்த தொழில்,-- செய்யாத தொழில்

பொதுவாகப் பெயரெச்சத்தை அடுத்து வல்லொற்று மிகாது. ஆனால்,ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சமாக இருந்தால் அதையடுத்து வரும் பெயர் வல்லொற்றில் தொடங்குமானால் அவ் வல்லொற்று மிகும். எ.டு:., காணாக்காட்சி, உண்ணாச்சாப்பாடு, செய்யாத்தொழில், பாடாப்பாட்டு..

திருக்குறள் படிக்கும் பொழுது சில தொடர்கள் இவ்விலக்கணத்துக்கு வேறுபட்டு வருவதைக் கண்டேன். வேறு இலக்கியங்களிலும் இவ்வாறு வருவதைக்கண்டேன்... பொதுவாகக் 'கால்', 'கடை', கண்' வரும்பொழுது இவ்வேறுபாட்டைக் கண்டேன். அறிஞர் பெருமக்களோடு பகிர்ந்துகொள்ள விழைகிறேன். உற்றக்கால்(குறள் 1080),பெற்றக்கால்(1270),உக்கக்கால்(1270), இயைந்தக்கால்(489), விட்டக்கால் (695), ஒலித்தக்கால் (763), உற்றக்கடை(372), நின்றக்கடை(1019), அறிந்தக் கடைத்தும் (637). எய்தியக்கண்ணும் (354),கொண்டக்கால்(கலித்தொகை)

ஆனால் ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் வரும்போது இலக்கணத்துக்கு ஏற்ப வல்லொற்று மிகுவதைக் காண்கிறேன். எ.டு.:கொள்ளாக்கடை (1195), இலாக்கடை (1059),போற்றாக்கடை (315), அகலாக்கடை(478),ஆற்றாக்கடை,(469), கழாஅக்கால்(840), இயையாக்கடை (230),

மேலும், இரண்டாம் வேற்றுமைத் தொகையில் வல்லொற்று மிகாது என்பர் அறிஞர்கள். ஆனால், திருக்குறளில் வேறுபடுவதைக் காண்கிறேன்.

எ.டு: உணர்வார்ப்பெறின் (334,709), பகைவர்ப் பெறின்(869), பெற்றிலார்ப் பேணிக்கொளல் (442),பிரிந்தார்ப் பொருத்தலும் (633).



உற்றக்கால்-வந்தடைந்த காலத்தில்,

உக்கக்கால்-பொருந்தினால்,

இயைந்தக்கால்-காலம்வாய்க்குமானால்,

விட்டக்கால்-விட்டுச்சொன்னபோது,

ஒலித்தக்கால்-ஒலித்தாலும்,

நின்றக்கடை-நிலைபெற்றால்,

அறிந்தகடைத்தும்--அறிந்தபோதிலும்,

எய்தியக்கண்ணும்--முற்றப்பெற்றபோதிலும்,

போற்றாக்கடை--காப்பாற்றாவிட்டால்,

அகலாக்கடை--விரிவுபடாவிட்டால்,

உணர்வார்ப்பெறின்—உணர்வாரைப்பெற்றால்,

பகைவர்ப்பெறின்--பகைவரைப்பெற்றால்

பெயரெச்சத்தை அடுத்துக் கால், கடை, கண் என வருபவை (நன்.302,இவ்விருபத்தெட்டும் இடப்பொருள் உருபு.) பெயர்ச்சொற்கள் அல்ல, ஏழாம் வேற்றுமை உருபுகள்ஆகும், ஒரு சொல் நீர்மைத்து. ஆதலின் இரட்டித்தன என்று தெரிகிறோம்..பெயரெச்சத்தை அடுத்துப் பெயர்ச்சொல் வந்தால் வல்லொற்று மிகாது என்பதுமறிகிறோம்.

''உணர்வார்ப் பெறின் போன்ற இடங்களில் ஒற்று மிகுந்து வருவதற்குக் காரணம் இரண்டாம் வேற்றுமைத் தொகையில் நிலைமொழி உயர்திணை யாயின் ஒற்று மிகும் என்பது சிறப்பு விதி.''-என்றோரறிஞர் கூறுகிறார்.. நன்னூலின் 255 ஆவது நூற்பா,இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சிக்குச் சிறப்பு விதி கூறுகிறது.

அதில்,, ''உயர்திணை யிடத்து விரிந்தும் தொக்கும்'''' என்றுங்கூறுகிறது..அதற்குக் காண்டிகை உரை, 'நம்பியைக் கொணர்ந்தான்-- உயர்திணையிடத்து விரிந்தது, மகன்+பெற்றாள்=மகற்பெற்றாள்—உயர்திணை யிடத்துத் தொக்கது' என விளக்குகிறது. ஆனால்,அவர் பார், அறிஞர் காண் என்பன இயல்பாயும்,அவரைப் பார், என்றும் அறிஞரைக் காண் என்றும் விரிந்தும் வருதலைக் காணலாம். -

மேற்குறிப்பிட்டுள்ள பெயரெச்சத்தில் ஒற்றுமிகுத்த சொற்களான ...

உற்றக்கால்
உற்றக்கடை
எய்தியக்கண்
...போன்றவை

செயின் எனும் வாய்பாட்டு எதிர்காலத் தெரிநிலை வினையெச்சங்களாம்.

செயின் என்னும் இந்த வாய்பாடானது பல வடிவங்களில் வரும். அவையாவன

எய்தின் நன்று

எய்தினால் நன்று

எய்தியக்கண் நன்று

எய்தியக்கால் நன்று

எய்தியக்கடை நன்று

எய்தியவழி நன்று

எய்தியவிடத்து நன்று



இவை அனைத்தும் ஒருசொல் நீர்மையன.

எய்திய + கண் என்றோ,

எய்திய + கால் என்றோ இருசொல்லாய்ப் பிரித்தற் கூடாது.

இதைப்போன்றே 'நன்றி யொருவர்க்குச் செய்தக்கால்' என்ற மூதுரைச் செய்யுளையும் காண்க.

இன்றளவில் கொடுந்தமிழில் உள்ள செஞ்சாக்கா, அடிச்சாக்கா என்ற வடிவங்கள் இவ்வகையின் நீட்சியாம்.

எய்தியக்கண் என்பதில்

எய்து - பகுதி,

கண் - தெரிநிலை வினையெச்ச விகுதியாகும்

(கண் - இங்கு ஏழாம் வேற்றுமை உருபன்று, இணைந்தது வினைச்சொல்லில் என்பதால்).

கண் - தெரிநிலை வினையெச்ச விகுதி.

இதேபோல் மற்றவற்றிற்கும் கொள்க.

'செயின் எனும் வாய்பாட்டு எதிர்காலத் தெரிநிலை வினையெச்சங்களாம்".---நன். பகுபத, விகுதியால் விளக்கமும் பெற்றேன்..

வினைச் சொற்கள் வினையெச்ச விகுதிகள் பெறும்போது அவை ஏவல்/ வினையாக்க அடிப்படைச் சொல்லாகவும், கடை, கண்,வழி, இடத்து முதலிய விகுதிகள் இணையும்போது அவை பெயரெச்சமாவும் இருப்பதை அறியலாம். எ.டு. ஓடி,போய்.....செய்தக்கடை,செய்தக்கண், செய்தவழி, செய்தவிடத்து.

மேலும், இரண்டாம் வேற்றுமைத் தொகையில் வல்லொற்று மிகாது என்பர் அறிஞர்கள். ஆனால், திருக்குறளில் வேறுபடுவதைக் காண்கிறேன்.

எ.டு.: உணர்வார்ப் பெறின் (334,709), பகைவர்ப் பெறின்(860), பெற்றிலார்ப் பேணிக்கொளல் (440),பிரிந்தார்ப் பொருத்தலும் (63).

" உயர்திணை மருங்கின் ஒழியாது வருதலும் " (தொல் . எழுத்து .157)

என்ற விதி இத்தொட ரில் நெகிழ்ந்துள்ளது என்று இலக்கண வல்லார் கூறுவர் .

சங்கப் பாக்களிலும் இத்தகைய நெகிழ்வைக் காணலாம் .

" மழவர் ஓட்டிய .....நெடுவேள் ஆவி ."

(அகம்)

இகழ்வார் பொறுத்தல்

இகழ்வார்ப் பொறுத்தல்

இரண்டிற்கும் பொருள் வேறுபாடு உண்டு .

முன்னதில் ' இகழ்வார் ' - எழுவாய்

பின்னதில் இகழ்வார்ப் - இரண்டாம் வேற்றுமைத் தொகை

பெயரெச்சத்தை அடுத்துக் கால்,கடை,கண் என வருபவை பெயர்ச்சொற்கள் அல்ல; ஏழாம் வேற்றுமை உருபுகள் ஆகும்.(தெரிநிலை வினையெச்ச விகுதி என்பாரும் உளர்). ஒரு சொல் நீர்மைத்து ஆதலின் இரட்டித்தன என்று தெரிகிறோம்..பெயரெச்சத்தை அடுத்துப் பெயர்ச்சொல் வந்தால் வல்லொற்று மிகாது.

குலதெய்வங்களும் வழிபாட்டு முறைகளும் : சிறுதெய்வங்களை முன்வைத்து...

முனைவர் ச. சீனிவாசன்
(தமிழக அரசின் சிறந்த நூல் மற்றும் நூலாசிரியர் விருதாளர்)
பேராசிரியர் & தலைவர்
தமிழ்த்துறை, ஸ்ரீ வெங்கடேஸ்வரா கல்லூரி
(தில்லிப் பல்கலைக்கழகம்)
புது தில்லி-110 021, இந்தியா.

மின்னஞ்சல் : drseenivasan@gmail.com

இயற்கை வழிபாடு முதல் குலதெய்வ வழிபாடு வரை

'ஆதிகாலத்தில் இயற்கையைச்சார்ந்து வாழ்ந்த மனிதன் பின்னர் அதனை நம்பி வாழ்ந்தான். இயற்கை மீது கொண்ட நம்பிக்கையின் விளைவாக ஏற்பட்ட நன்மைகளின் பயனாக இயற்கையை வணங்க ஆரம்பித்தான். மனிதனின் ஆவி வழிபாடு அவனது முன்னோர்களின் இறப்பிலிருந்து தொடங்கியது.

பின்னர் விலங்கு மற்றும் பறவை இனங்களைத் தங்கள் குலக்குறிகளாகக் கொண்டு வழிபடத் தொடங்கினான். தொடர்ந்து இயற்கை கடந்த ஆற்றல்கள் கொண்ட பொருட்களுக்கு அதீத ஆற்றல் இருப்பதாக நம்பி அவற்றை வழிபட்டான். பின்னர் இறந்தவர்களுக்கு நடுகல் நட்டு முன்னோர் வழிபாட்டைத் தொடங்கினான். இயற்கையாக இறந்த முன்னோர்களை அக்குடும்ப உறுப்பினர்கள் நினைவுகூர்ந்து வழிபடுவது முன்னோர் வழிபாடாக நீடித்தது. முன்னோர் வழிபாடு நாளடைவில் குலதெய்வ (Clan Deities) வழிபாடாக மாறியது.

குலதெய்வ வழிபாடு சிறு தெய்வ வழிபாட்டின் ஒரு கூறாகும். தமிழ் நாட்டின் பெருவாரியான மக்கள் சிறுதெய்வங்களை வழிபடுகின்றவர்களாக இருக்கின்றனர். இயற்கையாலன்றி பல்வேறு சமூக, பொருளாதார, அரசியல், கலாச்சார காரணங்களால் திடீரென்று இறந்தவரை (தற்கொலை, போர், கொலை, விபத்து போன்றவற்றால் இறந்தவரை) தெய்வமாக வழிபடுவதுதான் குலதெய்வ வழிபாடு என்று வரையறுக்கிறார் மாற்கு. தமிழர்கள் வழிபடும் குலதெய்வங்கள் பெரும்பாலும் கொலையால் தோன்றியவை என்று நாட்டுப்புறவியல் அறிஞர்கள் கருதுகின்றனர்.

சிறுதெய்வங்களிலிருந்து பெருந்தெய்வங்களுக்கு...

சிறுதெய்வங்களின் அடையாளங்களாக, வழிபாட்டு முறைகளாகக் கீழ்க்கண்டவற்றை நாட்டுப்புறவியல் அறிஞர் சு. சக்திவேல் முன்வைக்கிறார். அவை : சிறுதெய்வங்கள் பிறப்பு, இறப்பு உள்ளவை. குறிப்பிட்ட ஆற்றல் கொண்டவை. சிறுதெய்வக் கோவில்களுக்குப் பெரும்பாலும் பிராமணர் அல்லாதோர் பூசாரிகளாக இருப்பர். பாமர மக்கள் மட்டுமே வழிபடக்கூடிய இக்கோவில்களில் உயிர்ப்பலி நிச்சயம் உண்டு. சிறுதெய்வங்களில் சைவ, வைணவ வேறுபாடு இல்லை. அசைவப் பொருட்கள் படையலுக்குப் பயன்படுத்தப்படும். சிறுதெய்வங்கள் மக்களால் உண்டாக்கப்பட்டு மக்களால் பேணப்படுபவை. மாடங்கள், கல், மரம், புற்று இவைகளில் உறையும் சிறுதெய்வங்கள் கொடூர உருவமுடையவை. சிறுதெய்வங்கள் இவ்வுலகில் வாழ்வதாகக் கருதப்படுகின்றன. சிறு மரபைச் *(Little Tradition)* சார்ந்ததும் கிராம வாழ்க்கையோடு உறவு கொண்டதும் ஆகும் என்கிறார் சக்திவேல்.

பழந்தமிழரின் வழிபாட்டு மரபு

பழந்தமிழர்கள் சில வழிபாட்டு மரபைப் பின்பற்றினர். இருப்பினும், அவர்களிடத்தில் சிறுதெய்வம்-பெருந்தெய்வம் என்ற பாகுபாடு காணப்படவில்லை. இருப்பினும், இப்போதைய சிறுதெய்வ வழிபாட்டு மரபுகளை ஒத்த இயற்கை வழிபாடு, கொற்றவை வழிபாடு, நடுகல் வழிபாடு, காவல்தெய்வ வழிபாடு முதலான வழிபாட்டு முறைகளும், சிவ வழிபாடு, திருமால் வழிபாடு, முருக வழிபாடு, இந்திர வழிபாடு, வருணன் வழிபாடு முதலான பெருந்தெய்வ வழிபாட்டு மரபுகளை ஒத்த முறைகளும் பழந்தமிழர்

பண்பாட்டில் கலந்திருந்தன. பழந்தமிழரின் நடுகல் வழிபாட்டிலிருந்தே குலதெய்வ வழிபாடு உருவாகியிருக்கலாம் என்று கருதலாம்.

நாட்டுப்புறத் தெய்வங்களின் வகைகள்

சிறியவர்கள் பெரியவர்கள் ஆவது எப்படி இயல்பானதோ அதுபோலச், சிறுதெய்வங்களிலிருந்தே பெருந்தெய்வங்கள் உருப்பெற்றிருக்க வேண்டும். சமூகத்தில், மனிதனில் உயர்வு - தாழ்வு இருப்பதைப் போலவே அவன் பின்பற்றும் வழிபாட்டு முறையிலும் ஏற்றத் தாழ்வு இருப்பது இயல்பானதுதான். சிறுதெய்வங்கள் அடித்தட்டு மக்களாலும், பெருந்தெய்வங்கள் மேல்த்தட்டு மக்களாலும் வழிபடப்பட்டு வருகின்றன.

'சிறுதெய்வங்கள் எனச் சுட்டப்படுவனவற்றின் அடிப்படையான அடையாளங்கள் அவற்றைப் பிராமணர் பூசிப்பதில்லை என்பதும், அவை ரத்தப்பலி பெறுவன என்பதும்தான். சிறுதெய்வ வழிபாட்டிற்குரிய மக்கள் அனைவரும் புலால் உண்ணும் சதியினரே. எனவே இரத்தபலி இக்கோயில்களில் தவறாது இடம்பெறுகிறது' (1997 : பக். 112) எனச் சிறுதெய்வங்களின் இலக்கணத்தை வரையறுக்கிறார் தொ. பரமசிவன். பெருந்தெய்வங்கள் யாவும் 'நிறுவன சமயம்' என்ற கட்டமைப்பிற்கு உட்பட்டவையாகும். சிவபெருமான், முருகன், விநாயகர் போன்ற சைவத் தெய்வங்களையும், பெருமாள், பாலாஜி, கண்ணன், ராமர் போன்ற வைணவத் தெய்வங்களையும் பெருந்தெய்வங்கள் என்று குறிப்பிடுகிறோம். சுருங்கக் கூறின் நிறுவனதெய்வங்களுக்குள் அடங்கும் சைவ மற்றும் வைணவத் தெய்வங்களைப் பெருந்தெய்வங்கள் என்றும், அவை அல்லாதவற்றைச் சிறுதெய்வங்கள் என்றும் கொள்ளலாம்.

சமூக விலக்கத்துக்கு ஆட்பட்டுள்ள ஒடுக்கப்பட்ட மக்கள் வழிபடும் (சிறு) தெய்வங்களின் அரசியல் - பொருளாதார - பண்பாட்டு - வழிபாட்டு முறைகளுக்கும் மேல்த்தட்டு மக்கள் வழிபடும் (பெரு) தெய்வங்களின் அரசியல் - பொருளாதார-பண்பாட்டு - வழிபாட்டு முறைகளுக்கும் பெருத்த வேறுபாடு உள்ளது. பெருந்தெய்வ வழிபாடு என்பது குறிப்பிட்ட இலக்கணம் மற்றும் வரையறைகளுக்கு உட்பட்டது. மாறாகச் சிறுதெய்வ வழிபாடு எவ்வித வரையறைகளுக்கும் உட்படாதது. எண்ணிலடங்காத சடங்கு முறைகளைக் கொண்டது. சிறுதெய்வங்கள் பிறப்பு - இறப்பு உடையவை. இவற்றின் இருப்பிடங்கள் கிராமம், காடு, மலைப்பகுதிகள் ஆகும்.

மரத்தடி, குளம், கண்மாய், ஏரி, ஆற்றங்கரை ஆகிய இடங்களிலும் அமைந்திருக்கும். சிறுதெய்வங்களில் ஆண்தெய்வங்கள் கிழக்குத் திசை நோக்கியும், பெண் தெய்வங்கள் வடக்குத் திசை நோக்கியுமே இருப்பதைக் காணமுடிகிறது. ஆண் தெய்வங்கள் நிலைகொண்டிருக்கும் கோவில்களுக்குச்

சிவப்பு மற்றும் வெள்ளை நிறங்களும், பெண் தெய்வங்கள் வீற்றிருக்கும் கோவில்களுக்குப் பச்சை மற்றும் மஞ்சள் நிறங்களும் பயன்படுத்தப்படுவது வழக்கமாக உள்ளது. கிராமத்துப் பாமர மக்களால் வழிபடப்படுபவை. உயிர்ப் பலியிட்டுச் சிறுதெய்வங்கள் வழிபடப்படுகின்றன. உள்ளூர் சாமியாடிகள் மற்றும் அம்மனாடிகளே பூசாரிகளாக இருப்பர். சிறுதெய்வங்கள் குறித்த செவிவழிச் செய்திகளும் நாட்டார் பாடல்களும் சிறுதெய்வங்களுக்கு உண்டு. சிறுதெய்வ வழிபாடு நாட்டுப்புற மக்களின் நம்பிக்கையையும், முன்னோர்கள் பின்பற்றிய முறையியலையும் சார்ந்ததாகும்.

நாட்டுப்புறத் தெய்வங்களை ஆண் தெய்வங்கள் , பெண் தெய்வங்கள், சாதித் தெய்வங்கள், சமாதித் தெய்வங்கள், மாலைத் தெய்வங்கள் (தீயில் பாய்ந்து தெய்வமானவர்கள்) என ஐந்து வகைகளாகப் பகுக்கலாம். இவற்றில் சக்கம்மாதேவி, பொம்மத்தா (கம்பளத்து நாயக்கர்), செளடம்மாள் (தேவாங்கர்), வண்டுமலையன் (செங்குந்த முதலியார்), பத்திரகாளி (நாடார்) சாதித் தெய்வங்களாக வரையறுக்கிறார் சு.சக்திவேல். இச்சாதித் தெய்வங்கள் அந்தந்த வட்டாரங்களில் பெரும்பாலும் பிரபலமாக அறியப்பட்டவை, எழுத்திலக்கியங்களில் பதியப்பட்டவை.

குலதெய்வங்களாக அறியப்பட்டவை. நாட்டுப்புறங்களில் வழிபடப்படும் தெய்வங்கள் என்பவை வீட்டுத்தெய்வம், குலதெய்வம், இனத்தெய்வம், ஊர்த்தெய்வம், வெகுசனத் தெய்வம், ஆண் தெய்வம், பெண் தெய்வம், தாய்த் தெய்வம், கன்னித்தெய்வம், முதன்மைத் தெய்வம், துணைமைத் தெய்வம் எனப் பலவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன. இத்தெய்வங்களை வணங்கும் முறை 'நாட்டார் தெய்வ வழிபாட்டு முறை' என்று வழங்கப்படுகிறது.

குலதெய்வங்கள் : சில விளக்கங்கள்

கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பது தமிழர்களின் நம்பிக்கை. 'குலம் தெரியாமல் போனாலும், குலதெய்வம் தெரியாமல் போகக் கூடாது' 'குருவை மறந்தாலும் குலதெய்வத்தை மறக்கக் கூடாது' 'குலதெய்வத்தை வணங்கினால் கோடி நன்மை உண்டு' என்ற பழமொழிகள் தமிழர் நாட்டார் வழக்காற்றியலில் நடைமுறையில் உள்ளன.

மனிதராகப் பிறப்பெடுத்துத் தெய்வமாக மாறியவர்களையே குலதெய்வம் என்று கூறுகிறார்கள். அதாவது மனிதப்பிறவியினராகிய நம் முன்னோர்கள் தான் நமக்குக் குலதெய்வங்கள். நமது முன்னோர்களாக இருந்தவர்கள் தெய்வங்களாக மாறிப் புண்ணிய ஆத்மாக்களான நிலையையே குலதெய்வம் என்ற சொல் குறிக்கிறது. மாண்டு போனவர்களின் தூய ஆத்மாவுக்கு ஆற்றல் அதிகம் என்று கருதப்பட்டதன் அடிப்படையில் குலதெய்வ வழிபாடு தோன்றியிருக்க வேண்டும். தந்தைவழி முன்னோர்கள் வழிபட்டு வந்த தெய்வமே ஒருவரது குலதெய்வமாகும். அல்லது, நம் முன்னோர்களையே பரம்பரை பரம்பரையாக நாம் தெய்வங்களாக ஏற்றுக் கொள்வதும் குலதெய்வத்திற்குள் அடங்கும். உங்கள் தலைமுறை வணங்கும் தெய்வம் மட்டுமே குலதெய்வம் ஆகாது. உங்கள் தந்தை, தாத்தா, பாட்டனார், அவரது பாட்டனார் என்று பல தலைமுறையினர் வணங்கிவந்த தெய்வங்களையே குலதெய்வம் என்ற சொல் குறிக்கிறது. குலத்தினை ஆபத்துக்களிலிருந்து காப்பது குலதெய்வம் ஆகும். ஆக, 'குலத்தில் தோன்றியதே குலதெய்வம்' ஆகும். குலதெய்வம் என்பது, ' ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் வழிபடும் தெய்வம்' (சுப்ரமணியன்.பா.ரா.(ப.ஆ) 2000 : 331) என்று க்ரியா தற்காலத் தமிழ் அகராதியும், ' ஒரு குலத்தார் பரம்பரை பரம்பரையாக

வழிபட்டு வரும் கடவுள்' (வாயாபுரிப்பிள்ளை. எஸ். 1982 : பக். 1622) தமிழ்ப் பேரகராதியும் குறிப்பிடுவது இங்கு எண்ணிப் பார்க்கத்தக்கது.

குலதெய்வம் என்பது பெரும்பாலும் சிறுதெய்வமாகவே கருதப்படுகிறது. தெய்வங்களில் மிகவும் சக்தி வாய்ந்ததாகக் குலதெய்வம் திகழ்கிறது. குலதெய்வத்தின் சக்தி அளவிட முடியாதது என்றும் கூடக் கணிக்கப்படுகிறது. காதணி, பூப்பு மற்றும் திருமண அழைப்பிதழ்களில் குலதெய்வத்தின் பெயரைத் தவறாமல் அச்சிடுவது தமிழர்களிடத்தில் இன்றும் வழக்கமாக உள்ளது. ஒவ்வொரு சமூகம், இனத்திற்குக் குறிப்பிட்ட தெய்வம் குலதெய்வமாக இருக்கும். இதனைக் குடும்ப தெய்வம் என்றும் அழைக்கலாம். ஒவ்வொரு குடும்பத்திற்கும் குலதெய்வ வழிபாடு என்பது மிகவும் அவசியமான ஒன்றாகும். குலதெய்வங்கள் மனிதப் பிறவிகளை அவர்களது கர்மவினைகளிலிருந்து காக்கும் வல்லமை பெற்றவை என்பதே இதற்குக் காரணமாகச் சொல்லப்படுகிறது. கர்ம வினைகள் என்பது, மனிதப் பிறவி எடுக்கும் ஆணாகட்டும் பெண்ணாகட்டும் அவர்களுக்கு யார் தாய்-தகப்பனாக அமையவேண்டும், எந்த இடத்தில் பிறக்க வேண்டும், என்ன தொழில் செய்ய வேண்டும் , எவ்வளவு சம்பாதிக்க வேண்டும், யார் கணவன் / மனைவியாக வரவேண்டும், யார் பிள்ளைகளாகப் பிறக்க வேண்டும் என்பதெல்லாம் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டதாகும்.

ஒவ்வொரு மனிதப் பிறவிக்கும் கர்ம வினைகள் என்பது உண்டு. அவை அவனது வாழ்வில் தொடர்ந்து வந்துகொண்டே இருக்கும் ஒரு செயல்பாடாகும். முன்னோர்கள் செய்த கர்ம வினைகள் அவர்களது அடுத்தடுத்தத் தலைமுறைகளைத் தொட்டுத் தொடரும் தன்மை கொண்டவை. நாம் ஒவ்வொருவரும் அவரவர்களுக்கான கர்மவினைக் கேடுகளை அனுபவித்தே ஆகவேண்டும். கர்மவினைகளின் தாக்கத்திலிருந்து விடுதலை பெறவே அனைவரும் விரும்புவோம். குலதெய்வ வழிபாட்டின் மூலம் கர்மவினைகளின் தாக்கத்திலிருந்து தப்பித்துக்கொள்ளலாம். தமிழ் நாடு மட்டுமல்லாமல் உலகின் பல நாடுகளிலும் குலதெய்வ வழிபாடு இன்றும் பின்பற்றப்படுகிறது. தமிழ் நாட்டில் பெருந்தெய்வ வழிபாட்டிற்கு இணையாகக் குலதெய்வ வழிபாடு நடைபெறுவதாக சமூகவியல் அறிஞர்கள் கண்டறிந்துள்ளனர்.

குலதெய்வ வழிபாட்டின் முக்கியம்

தமிழகக் கிராமப்புறங்களில் குலதெய்வ வழிபாடு என்பது அவர்களின் வாழ்க்கையோடு ஒன்றிய ஒன்றாக உள்ளது. குலதெய்வ வழிபாடு கிராம மக்களை நெறிப்படுத்துவதாகவும், ஒற்றுமைப்படுத்துவதாகவும் நம்பப்படுகிறது. 'தங்களுக்கான அனைத்து நலன்களையும் அள்ளித்தரும் சக்தி

படைத்தவை குலதெய்வங்கள்' என்று மக்கள் நம்புகின்றனர். குடும்ப சுபகாரியங்களில் முன்னோர் மற்றும் குலதெய்வ வழிபாட்டிற்கு மக்கள் அதிக முக்கியத்துவம் அளிக்கின்றனர். ஒருவரது குலத்தை வழிவழியாகப் பாதுகாத்துத் தலைமுறைகளைத் தழைக்கச் செய்யும் சக்தி குலதெய்வங்களுக்கு மட்டுமே உண்டு. குலதெய்வ வழிபாட்டின் வலிமையும், குறிக்கோளும் அதுவே. 'நாம் நினைக்கும் அல்லது நினைப்பதற்கு முன்பே நமக்குத் தேவையான நலன்களைச் செய்யும் இயல்பு உடையவை குலதெய்வங்கள்' என்கிறார் சூர்யகுமார். நாம் பல தெய்வங்களை வணங்கினாலும் குலதெய்வங்கள் வழிதான் நமக்கான அனைத்து நலன்களும் கிடைக்கும் என்பதை மகான்கள் ஆன்ம வழிகளின் மூலம் கண்டுணர்ந்து சொல்லியுள்ளனர். குலதெய்வங்கள் வேறு, இஷ்ட தெய்வங்கள் வேறு. குலதெய்வத்தைத் தொடர்ந்து வழிபடுகின்றவர்களுக்கு அவர்கள் வேண்டும் வரங்களெல்லாம் கிடைக்கும். குலதெய்வத்தை வழிபட்டபிறகு இஷ்டதெய்வம் உட்பட பெருந்தெய்வங்களை வழிபடுவதில் தவறில்லை. குலதெய்வ வழிபாடு என்பது 'முன்னோர் வழிபாடு' என்றும், 'மூதாதையர் வழிபாடு' 'வாழ்ந்து மறைந்தோரை நினைவு கூர்தல்' என்றும் வழங்கப்படுகிறது. முன்னோர் அல்லது மூதாதையர் வழிபாட்டின் முக்கியத்துவத்தை,

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை *(திருக்குறள்-43)*

என்று திருவள்ளுவர் எடுத்தியம்புகிறார்.

குலதெய்வங்களை வழிபடும் முறை

இத்தனை சிறப்புகள் வாய்ந்த குலதெய்வங்களை மாதம் ஒருமுறையோ அல்லது ஆறு மாதங்களுக்கு ஒருமுறையோ அல்லது குறைந்தபட்சம் ஆண்டிற்கு ஒருமுறையாவது நேரில் சென்று தரிசித்து வழிபட்டு வந்தால் குலம் தழைக்கும், வம்சம் விருத்தியாகும், செல்வம் செழிக்கும். குலதெய்வத்தை வணங்கத் தவறினால், 'குலதெய்வக் குற்றம்' ஏற்படும் என்ற நம்பிக்கையும் மக்கள் மத்தியில் நிலவுகிறது. நோய், தோல்வி, தொழில் நஷ்டம், நிம்மதியின்மை ஆகியவற்றிற்கு ஆட்படுவோம் என்ற அச்சமும் உள்ளது. அபிஷேகம், தரிசனம், வழிபாடு, பூசை, படையல் இவற்றிற்கு அப்பாற்பட்டுக் குலதெய்வக் கோவிலுக்காக மாதந்தோறும் நன்கொடை அளிப்பதும், மாதச் சம்பளத்தில் சிறு தொகையை ஒதுக்கி வைப்பதும், கொடை நாளில் அன்னதானம் மற்றும் தான தருமங்கள் செய்வதும் குலதெய்வத்தைக் குளிரச் செய்யும் வழிமுறைகளாகும்.

பெண்களுக்கு இரண்டு குலதெய்வங்கள் உண்டு. ஒன்று பிறந்த வீட்டுக் குலதெய்வம் இன்னொன்று புகுந்த வீட்டுக் குலதெய்வம். பெண்கள் திருமணத்திற்குப் பின் பிறந்த வீட்டுக் குலதெய்வத்தைத் தொடர்ந்து

வணங்கிவரும் பட்சத்தில் புகுந்த வீட்டுக் கஷ்டங்களிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம். 'குலதெய்வம் எது என்று தெரியாதவர்கள் பங்குனி உத்திரத்தன்று, திருநெல்வேலி மாவட்டம் பாபநாசம் அருகிலுள்ள சொரிமுத்து அய்யனார் கோவிலுக்குச் சென்று வழிபடலாம். அப்படி வழிபடுவதால் சொரிமுத்து அய்யனார் உங்களின் குலதெய்வத்திடம் சொல்லி, உங்களுக்கு ஏற்பட்டுள்ள குலதெய்வ தோஷத்தை நீக்குவார். அதுமட்டுமல்ல தொடர்ந்து சொரிமுத்து அய்யனாரை வணங்கி வந்தால் உங்களின் குலதெய்வம் எது என்பதை உங்களின் கனவிலோ அல்லது யாராவது ஒரு நபர் மூலமாகவோ சொரிமுத்து அய்யனார் காண்பித்துக் கொடுப்பார். இது இன்றும் பலரது வாழ்வில் நடந்து வரும் அற்புதமாகும். ஆண்டுதோறும் பங்குனி உத்திரத்தன்று சொரிமுத்து அய்யனார் கோவிலுக்கு லட்சக்கணக்கான பக்தர்கள் வந்து வழிபட்டுச் செல்வதை இன்றும் காண முடியும்' என்கிறார் சிதம்பரம் ஆலய அர்ச்சகர் எம். சிவராமன்.

பங்குனி மாதப் பவுர்ணமியும் குலதெய்வ வழிபாடும் :

குலதெய்வ வழிபாட்டிற்கும், பங்குனி உத்திரத்திற்கும், பங்குனி மாதத்தில் வரும் பவுர்ணமிக்கும் அறிவியல்பூர்வமான சக்தி இருப்பதாக ஆன்மீக அறிஞர்கள் கணித்துள்ளனர். 'சூரியன் தன் முழு வலிமையுடன் சந்திரனைப் பார்க்கும் பவுர்ணமி நாளில் சூரிய ஒளியால் பகல் பொழுதும், சந்திர ஒளியால் இரவுப் பொழுதும் பிரகாசமாகவும், வெளிச்சமாகவும் இருக்கும் போது மனிதர்களின் பூஜைகள், வழிபாடுகள், தான தருமங்கள் பல மடங்காகிப் புண்ணிய பலன் மிகுதியாகும்' என்று ஆன்மிக வல்லுனர்கள் கூறுகின்றனர்.

ஒவ்வொரு மாதமும் பவுர்ணமி வருவது என்பது வழக்கமான நிகழ்வாகும். ஆனால், பங்குனி மாதத்தில் வரும் பவுர்ணமிக்குத் தனிச்சிறப்பு உண்டு. பங்குனி உத்திரத்திற்கு அதிக மகிமைகள் உண்டு என்று ஆன்மிகம் கூறுகிறது. 'பங்குனி உத்திரம்' என்பது பவுர்ணமியும், உத்திர நட்சத்திரமும் இணைந்து வரும் ஒரு அபூர்வ நாளாகும். ஆண்டில் வரும் அத்தனை பவுர்ணமிகளை விட பங்குனியில் தோன்றும் பவுர்ணமி நிலவு அளவில் மிகப் பெரியதாகவும் பிரகாசமானதாகவும் தோன்றும். உத்திர நட்சத்திரமும் சந்திரனும் ஒரே நேர்கோட்டில் சந்திக்கும் போது இந்த அபூர்வம் நிகழும் என்று கூறப்படுகிறது. 'பங்குனி உத்திரம்' பெருவாரியான இந்துக்களால் கொண்டாடப்படும் திருநாளாகும். இந்நாளை இந்துக்கள் புனித நாளாகக் கொண்டாடி வருகின்றனர். தமிழர்களின் விரத நாட்களில் மிக முக்கியமான ஒன்றாகப் பங்குனி உத்திரம் திகழ்கிறது. பொதுவாக மக்களின் விரத நாட்கள் எல்லாம் பவுர்ணமி நாளை ஒட்டியே அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. அன்றைய தினத்தில் குலதெய்வங்களை வழிபட்டால் குடும்பம் விருத்தி அடையும் என்ற நம்பிக்கை மக்கள் மத்தியில் நிலவுகிறது. குலதெய்வங்கள் காவல் தெய்வங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

ஆண்டுதோறும் வரும் பல சுபதினங்களில் மக்கள் குலதெய்வக் கோவில்களுக்குச் சென்று வழிபட்டு வந்தாலும் பங்குனி உத்திர நாளன்று குலதெய்வங்களை வழிபடுவதால் குடும்ப விருத்திக்கான நல்ல பலன்களைத் தருவதாகக் கருதப்படுகிறது. பங்குனி மாதத்தில் வரும் பவுர்ணமி நாளன்று குடும்பத்துடன் நேரில் சென்று குலதெய்வங்களை வழிபட்டு வருவதை மக்கள் வழக்கமாகக் கொண்டுள்ளனர். ஒருவர் வழிவழியாக, பரம்பரை பரம்பரையாக ஒரு தெய்வத்தை வழிபட்டுக்கொண்டே வருவதுதான் குலதெய்வ வழிபாடு ஆகும். தலைமுறைகள் கடந்தும் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிற வழிபாடுதான் குலதெய்வ வழிபாடாக இன்றும் நிலைத்து நிற்கிறது.

ஒருவரது பிறவியில் அவர் நிகழ்த்தும் வழிபாடுகளில் மிகவும் முக்கியமான வழிபாடாகக் குலதெய்வ வழிபாடு அமைகிறது. ஆலய வழிபாடு, ஹோமம், யாகம் ஆகியவற்றிற்கு முன்னோடியாக, சக்தி வாய்ந்ததாகக் குலதெய்வ வழிபாடு திகழ்வதாக நம்பப்படுகிறது. 'பங்குனி உத்திரத் திருநாளில் குலதெய்வத்தை வணங்கினால் குடும்பத்தில் நிலவிவரும் சிக்கல்கள் நீங்கும்' என ஜெயபாலன் கூறுகிறார்.

முடிவுரை

குலதெய்வக் குற்றம், குலதெய்வக் கோபம், குலதெய்வத் தோஷம் இருந்தால் குலதெய்வம் நம் வீட்டிற்குள் சஞ்சரிக்காமல் போகலாம். காரணமற்ற காரியத் தடைகள், உறவுகளில் ஒற்றுமை இல்லாமை, குடும்ப அமைதி இல்லாமை,

திருமணம் மற்றும் வீடுகட்டுதலில் முட்டுக்கட்டை முதலான தடைகள் தொடர்ந்துகொண்டே இருக்கும். பங்குனி உத்திரப் பவுர்ணமி வழிபாடு செய்தால் இத்தடைகள் நீங்கிக் குலதெய்வம் நம் வீட்டிற்குள் குடிகொள்ளும். 'குலதெய்வக் கோவிலில் நல்லெண்ணெய் தீபமிட்டு வழிபட்டால் கோடி நன்மை தரும்' என்பதில் மக்கள் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டுள்ளனர். குலதெய்வத்தைக் குடும்பத்துடன் சென்று வழிபட வேண்டும். வேண்டுதலையும் வேண்டியது கிடைத்த பிறகு அதைக் குலதெய்வக் கோவிலுக்கு நேரடியாகச் சென்றுதான் நிறைவேற்ற வேண்டும். இவையெல்லாம் குலதெய்வ வழிபாட்டிற்கான வழிமுறைகளாகும். குலதெய்வங்களைப் பூஜைகள், அபிஷேகங்கள் செய்து பொங்கல் இட்டு குடும்பத்தோடு ஒற்றுமையாக வழிபட்டால் புண்ணிய பலன்களோடு முன்னோர்களது ஆசியும் கிடைக்கும் என்பது தமிழக மக்களின் ஆணித்தரமான நம்பிக்கை. கணவன் - மனைவி மற்றும் குடும்பச் சிக்கல்களுக்குச் சமாதான முறையில் தீர்வு கண்ட பின்னர் இருபக்கச் சொந்தங்களுடன் குலதெய்வக் கோவிலுக்கு நேரில் போய் வழிபட்டு வருமாறு குடும்ப நல ஆலோசகர் சகுந்தலா கோபிநாத் அறிவுறுத்துகிறார். அவரவர் குலசாமிகளைத் தவறாமல் வணங்குங்கள், வழிபடுங்கள், நலம் பெற்று வாழுங்கள்.

****

துணைநூல் பட்டியல்

1. சண்முகசுந்தரம்.சு. 2011. நெல்லை நாட்டுப்புறத் தெய்வங்கள் : வழிபாடும் பண்பாடும், சென்னை : காவ்யா

2. ----------. 2024. நம்ம குலசாமிகள், சென்னை: காவ்யா.

3. சிவசுப்பிரமணியன் ஆ. 2024. ஆணவக் கொலைச் சாமிகளும் பெருமிதக் கொலை அம்மன்களும், நாகர்கோவில்: காலச்சுவடு.

4. தருமராஜன். டி. (தொ.ஆ.) 2020. சனங்களின் சாமிகள், நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம், தூய சவேரியார் கல்லூரி, பாளையம்கோட்டை.

5. பெருமாள். அ.கா. 2005. சனங்களின் சாமி கதை, சென்னை: யுனைடெட் ரைட்டெர்ஸ்.

6. ராஜேஸ்வரி. செ. 2024. சாமிகளின் சரித்திரம், மதுரை: சந்திரோதயம் பதிப்பகம்.

7. விவேகானந்தன்.சிவ. 2024. பிரம்மசக்தியம்மை: கதைப்பாடல்களும் வழிபாடும், சென்னை : காவ்யா.

இனக்குழுக்கள் – பேரரசு – இறைக்கோட்பாடு



முனைவர் சிவ. இளங்கோ
எழுத்தாளர். வரலாற்று ஆய்வாளர், புதுச்சேரி

பெருவெடிப்பு நிகழ்ந்து பேரண்டங்கள் தோன்றிய காலம் ஆயிரத்து நானூறு கோடி ஆண்டுகள் என்றும், அதிலிருந்து சூரியக்குடும்பம் தோன்றி நானுற்றைம்பது கோடி ஆண்டுகள் ஆகின்றன என்றும், தற்கால அறிவியல் கூறுகிறது. நாம் வாழும் பூமியில் உயிரினங்கள் உருவான காலம் 380 கோடி ஆண்டுகள் என்பதும், அதன் பரிணாம வளர்ச்சியில் மாந்த (மனித) இனம் உருவான (கற்) காலம் 25 இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பு என்பதும் தற்கால அறிவியல் கோட்பாடுகளே. ஒரு குழுவாக, (கூட்டுக் குடும்பமாக) வாழ்கின்ற குரங்குகளின் சமூக இயல்புதான், மாந்த இனத்தில் இனக் குழுக்களாக வளர்ச்சி நிலை பெற்றது. தனித் தனிக் குழுவாக இருந்து தங்களுக்குள் தாக்கி அழிந்த நிலைமாறி, இனக் குழுக்களுக்குள் இணக்கமான சூழ்நிலை ஏற்பட்டபோது பெரிய சமூக அமைப்புகளும், அதன் பாதுகாப்பு கருதி அரசுகளும் தோற்றுவிக்கப்பட்டன. இதன் பரிணாமமாகப் பேரரசுகளையும், அதன் பரிணாமமாகச் சிற்றரசுகளையும் கூறலாம்.

மனிதன் இனக்குழுக்களாக வாழ்ந்திருந்த காலத்தில் ஒரு குழுவிற்கு ஒரு தலைவனே இருந்தான். அவனுடைய எண்ணம், செயல்களுக் கெல்லாம் அக்குழு கட்டுப்பட்டது. இயற்கை, அதன் சீற்றங்கள், விலங்குகள் போன்றவைகளுக்கு இனக்குழு மனிதன் அச்சப்பட்டானே தவிர, அவனுடைய எண்ணங்களில் நேரில் காணாத, அல்லது இல்லாத ஒன்றைப்பற்றிய கோட்பாடுகள் ஏதும் இல்லை. படைத்தவன், படைக்கப்பட்டவன் போன்ற சிந்தனையே இல்லாத காலத்திலும் முன்னோர் வழிபாடு மட்டுமே இனக்குழுக்களிடம் இருந்தது.

இறந்துபோன தம் முன்னோர்கள் திரும்பி வருவார்கள் என்பதும், அப்படி வரவில்லையாயினும் எங்காவது இருந்து தம்மைக் காப்பார்கள் என்பதும் பெரும்பான்மையான இனக் குழுக்களின் நம்பிக்கையாக இருந்ததால், முன்னோர்கள் வழிபாட்டில் அனைவருமே ஒன்றி ஈடுபட்டனர். இறந்தும் எங்காவது இருப்பார்கள் என்ற இனக்குழு காலத்து நம்பிக்கைதான் இன்றைய இறைக்கோட்பாடுகளின் அடித்தளம்.

இனக்குழுக்களாக இருந்து, அரசு, சிற்றரசு, பேரரசுகளான வளர்ச்சி நிலையில் அரசனே முழு வல்லமை உள்ளவனாக இருந்தான். இறுதி முடிவு, தண்டனை, அதன் நிறைவேற்றம், போர் ஆகியவை அரசனுக்குக் கேள்வியற்ற அதிகாரங்களாக இருந்தன. முன்னோர் வழிபாடுகளை ஏற்பதற்கும், தலைமை வகிப்பதற்கும் உரியவன் அரசனே என்பதும் தலைமையின் இறையாண்மையை உறுதிப்படுத்தின. இதனால் இனக்குழுத் தலைவர்களின் ஆளுமை அரசரால் கட்டுப்படுத்தப்பட்ட நிலையில், இயல்பாக எதிர் எண்ணங்கள் தோன்றின. அவை அரசருக்கு எதிரான ஒரு தலைமையைத் தேடின. அரசாங்கம் என்ற வலுவான அமைப்பு அரசனுக்குப் பக்கபலமாக இருந்ததால் அரசனை நேரடியாக எதிர்ப்பதென்பது பழைய இனக் குழுத் தலைவர்களால் முடியாத செயலானது. எனவே, அரசனுக்கு எதிரான ஒரு தலைமை என்பது அரசனை விடவும் வல்லமை பொருந்தியதாக ஏற்படுத்தப்பட வேண்டுமென்ற எதிர்ப்புணர்வில் உருவான எண்ணமே தேவன், தெய்வம், கடவுள், இறைவன் ஆகிய சிந்தனைகள். இப்படி உருவாக்கப்பட்ட தேவனுக்கு முழு வல்லமை கட்டமைக்கப்பட்டது. இயற்கைச் சீற்றங்களெல்லாம் கூட தேவனின் கோபமே என்பதான பரப்புரைகள் தொடங்கி தேவனுக்கு ஓர் இருப்பிடம், அதாவது ஆலயம் தேவை என்ற அளவில் அரசு எதிர்ப்பு நிலைகொண்ட பின்னர், அதுவே அரசனை எதிர்க்கும் புரட்சியாக வலுப்பெற்றது.



உலகம் முழுவதும் எந்த அரசனும் தேவன் என்கிற கோட்பாட்டை ஏற்கவில்லை. தனக்கிணையாக இன்னொருவன் உருவாக்கப்படுவதையே விரும்பாத அரசன், கற்பிதமாக உருவாக்கப்பட்ட எதிரியையும் அவ் எதிரி தன்னை விட வல்லவனாக சித்தரிக்கப் படுவதையும் ஏற்றதாகச் சரித்திரமில்லை. அப்படி ஏற்பதென்பது தன் முழு அதிகாரத்தையும், வல்லமையையும் கூறு போடுவதாக ஆகிவிடும் என்பதே அரச நிலை. இந்த வகையில், உலகின் அனைத்து அரசர்களும் தேவ மறுப்பாளர்களாகவே இருந்தனர்.

காலச் சூழல் வாழ்விடத்தையும், சமுதாயத்தையும் மாற்றுவதைப் போல சமூக எண்ணங்களையும் மாற்றவல்லது. தற்செயலாக ஏற்படும் நிகழ்வுகள், இயற்கையின் வல்லமை, அதன் சீற்றங்களால் ஏற்பட்ட பேரழிவுகள், தேவன் என்ற கோட்பாட்டை வளர்த்துக் கொண்டே வந்தன. அரச எதிர்ப்பாளர்கள் அதைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டே வந்தனர். அதை ஏற்றுக் கொள்ளும் மனம் படைத்த யாரோ ஓர் அரசன், குறிப்பாக ஒரு யூத மன்னன் தேவனுக்கு இடம் கொடுத்தான். தேவாலயம் உருவாக்கப்பட்டது. உண்மைகள்புதைபொருட்களாகஆக்கப் பட்டு, நம்பிக்கைகளைஅடித்தளமாகக் கொண்டு ஆலயங்கள் பெருகின. மக்களைக் காப்பாற்றுதல் என்ற உண்மை நெறிக்காகத் தோற்றுவிக்கப்பட்ட அரசும், அரசாங்கமும் நம்பிக்கை வழியில் நடைபோட வேண்டியவை களாக ஆக்கப்பட்டு விட்டன. நம்பிக்கையால் கட்டுப்படுத்தப்பட்ட அரசர்கள் மிக எளிமையாக சமய நெறிகளுக்கு ஆற்றுப்படுத்தப் பட்டனர். இயற்கைக்கு மாறுபட்ட பலதிறச் செயற்கை முறைகளைக் கைக்கொள்ளும் கட்டாயம் அரசுகளுக்கு ஏற்பட்டது. இன்றைக்கு அரசாங்கமும், அரசியலும், சமுதாயமும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ, மாற்றுப்பாதை ஏதுமின்றி மதவழிச் செல்பவையாக ஆக்கப்பட்டுவிட்டன.

அரசன், அரசாங்கம், அரசனுக்கு எதிராகக் கட்டமைக்கப்பட்ட தேவன், ஆலயங்கள் இவையெல்லாம் இன்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கும் முற்பட்டவை. உலகில் இறை நம்பிக்கையோடு கட்டமைக்கப்பட்ட மதங்களில் மிகப் பழமையானது யூத மதம். இனக்குழு, அரசு, பேரரசு ஆகியவை தலைவனுக்கோ அல்லது அரசனுக்கோ கட்டுப்பட்டவை அல்ல, அவை தேவனுக்குக் கட்டுப்பட்டவை என இயற்கைக்கு மாறுபட்ட ஒரு மார்க்கச் சிந்தனையை முன்வைத்து அதைச் செயலாக்கியது யூதமதம். பிற்காலங்களில் அதனுடைய செயல்பாட்டு முறைகளால் கிளைத்த சிந்தனை மாற்றங்கள் வழி அதனின்றும் வேறுவேறு சமயங்கள் பிரிந்து தனி மார்க்கம் காணும் நிலை ஏற்பட்டது. அன்பும், கருணையும் போதித்த சமயங்கள்தான் சமயப் போர்களுக்கும் வித்திட்டன. பலகோடி உயிர்களைப் பலிவாங்கியும், சித்ரவதை செய்ததுமான நிகழ்வுகள் சமயத் தலைவர்களாலேயே நிகழ்த்தப்பட்டன. அறம் என்றால் என்னவென்று உணராத சமயங்களாகவே அவை இருந்தன, இருக்கின்றன.

இயற்கையில் நிகழும் உள்ளது சிறத்தல் (பரிணாம வளர்ச்சி) என்னும் நிகழ்வினால் ஓரறிவு உயிர் தொடங்கி ஆறறிவு உயிர் வரை சிறப்பினை அடைகின்றன. விலங்கினமாக இருந்த மனிதன் ஆறறிவு பெற்றபின்னர் வாழ்வியலை உற்றுநோக்கினான். மனிதனின் சிந்தனைப் போக்கின் வளர்ச்சியில் துன்பம் மற்றும் துக்கத்திலிருந்து விடுதலை பெறுவது என்பதுதான் அறத்தின்

தோற்றுவாய். துக்க விடுதலை என்பது அவரவர் செய்கையைப் பொறுத்தே அமைவது. இதையெல்லாம் விளங்கிக் கொள்ள மெய்யறிவு வேண்டும். மெய்யறிவு புலனடக்கம் சார்ந்தது. புலனடக்கம் ஒழுக்கத்தின் உயர்நிலை. ஒழுக்கத்தின் உயர்நிலையே அறம். இந்த அறச் சிந்தனையை முதன்முதலில் உலகிற்கு வழங்கியது தமிழ்ச் சமணமாக இருக்கலாம் என்று தோன்றுகிறது. அறத்தை ஆதி பகவன் என்று திருவள்ளுவர் அடையாளப் படுத்தி, ஆதிபகவனுக்குத் தமிழ்க் கோயில் அமைத்த பெருமைக்குரியவர் ஆனார். உலகமெங்கும் கொலை, களவு, ஊன், கள் உண்ணல் என்று அனுமதித்தும், அனுபவித்தும் வந்த சமயங்களுக்கிடையில் அறச்சிந்தனையை வளர்த்தெடுத்து 'வினையின் நீங்கி விளங்கிய அறிவனாக' அறியப்பட்ட ஆதிபகவன் தான் ஆதிநாதர் என்பதும் சங்க இலக்கியக் கோட்பாடுகளில் ஒன்று.

இறைக்கோட்பாடு இல்லாமல் மெய்யியல் கோட்பாடுகளை முன் வைத்து அறநெறியைச் சமயச் சிந்தனை மரபாகக் கட்டமைத்ததில் மிகப் பழமையானது சிந்துவெளி மரபு. அசைவற்ற ஒன்று ஐந்தொழில் (ஐம்புலனடக்கம்) புரியாது என்பது சமணக் கோட்பாடு. இதில் கவனிக்கப்பட வேண்டியது சமயம் – மதம் ஆகியவற்றிற் கிடையிலான வேறுபாட்டைத்தான். சிந்து நதியும் அதன் சமவெளி நாகரிகமுமே இந்தியா என்ற பெயருக்கான அடிப்படையாகப் (சிந்துநதி - இந்துநதி) பல வரலாற்றாசிரியர்களால் சொல்லப் படுகிறது. இந்தியாவைப் பொறுத்தவரை இயற்கையோடு இயைந்த வாழ்வு, இனக்குழுக்கள் ஆகியவை அரசு அமைந்த காலங்களில் வாழ்வியல் நெறிகளோடும் அறநெறிகளோடும் கற்பிக்கப்பட்டும், கடைப்பிடிக்கப்பட்டும் வந்தன. அப்படிக் கற்பித்தவர்கள் அதை ஓர் அமைப்பாக, சங்கமாக, பள்ளியாக, ஒரு பாதையாகக் கட்டமைத்த

போதில் அதைச் சமயம் என்றும், அச்சமயத்தின் கோட்பாட்டை அல்லது மெய்யியலை வடிவமைத் தவர்கள் சமயத் தலைவர்கள் என்றும் அழைக்கப்பட்டனர். இந்த உலகம், உயிர்கள் எல்லாம் இயற்கைப் பொருள்களால் உருவானவை என்ற ஒரு கோட்பாடுதான் தொடக்கநிலை. அவையெல்லாம் யாரோ ஒருவரால் உருவாக்கப்பட்டவை என்ற கோட்பாடு அடுத்த நிலை.

'உலக உருவாக்கம் இயற்கைப் பொருள்' என்ற பொருள் முதல் கோட்பாட்டு மரபு வழியாகத் தோன்றியவையும், அவற்றிலிருந்து பிரிந்து நின்றவையும் சமயங்களாகவே இருந்தன. இறைக் கோட்பாடு உருவாகி, அதற்கொரு உருவம், அதற்கான வழிபாட்டு முறை, சடங்குகள், அதைப்பற்றிய தொன்மக் கதைகள், புராணங்கள், சாத்திரங்கள் எல்லாம் உருவாக்கப்பட்ட பின்னர் அவை மதங்களாக அறியப்பட்டன. இன்று எல்லாமே மதங்களாக ஆக்கப்பட்டுவிட்டாலும், இவை அனைத்துமே சமயங்களாக மொழியப்பட்ட காலம் நெடுங்கணக்கைக் கொண்டது.



இறைக் கோட்பாட்டை முன்வைத்தவர்கள் அனைவருமே மனிதர்கள் தான். ஆனால் அப்படிச் சொன்னால் இறைவனை உருவாக்கியவன் மனிதனே என்ற உண்மை எளிதினில் விளங்கப்பட்டுவிடும் என்பதனாலேயே, இறைக் கோட்பாட்டைச் சொன்னவர்கள் தேவர்களுக்கு இணையான ஞானிகள் (ரிஷிகள்) என்றும், அவர்கள் மொழிந்த கோட்பாடுகள் வேதங்கள் என்றும், இவற்றுக்குக் காலங்கள் இல்லை என்றும், இதன் மொழி தேவனால்

மொழியப்பட்டதென்றும் கட்டமைக்கப்பட்டு, அதைக் காலங் காலமாய் யாரும் அறியாமல் காத்து நின்று, இறை நம்பிக்கையை ஏற்றுக் கொள்ளுமளவில் அதனை மறைமுகமாகக் குறிப்பிட்டும், பரப்பியும் வந்தார்கள். அதாவது, பொருளை (இயற்கையை) மறை (வேதம்) ஆக்கி, அதை மறைபொருளாக ஆக்கி வைத்துவிட்டார்கள். இம்மறை மொழிகளின் உண்மையைத் தேடுவதே மெய்ஞ்ஞானம் என்றும், அதைத் தேடுவோரே அதை அடைய முடியுமென்றும், தேவநெறி, வேதம், சாத்திரம், மனுதர்மம் இவை அனைத்தும் பிரம்மம் என்ற ஒன்றே என்றும், அதற்குத் தாங்கள் மட்டுமே உரியவர்கள் என்றும், தங்களையும், நிகழ்வுகளையும் தாங்களே கட்டமைத்துக் கொண்டார்கள். உண்மையும், வரலாறும் புதைபொருள்கள் ஆகிப் போயின. கட்டமைக்கப்பட்ட புராணமும், சாத்திரமும் கடவுள் நெறியாகிப்போயின.

மனித வர்க்கத்தின் கண்கள் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக மறைக்கப்பட்டே வந்திருப்பதாக மனிதவியல் அறிவியலாளர்கள் தற்போது அபாய அறிவிப்புபோல் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அது மனித வர்க்கத்தின் அத்தனைக் காதுகளுக்கும் போய்ச் சேராமல் மதபோதனைகள் தடுத்துக் கொண்டிருக்கின்றன. கடவுள் என்ற இல்லாத கதையைப் பக்தி என்னும் கயிற்றினால் கோர்த்துக் கண்களும் கட்டப்பட்ட நிலையில் உண்மை என்பது மேலும் மேலும் மண்மூடப்பட்டு புதை பொருளாக அழுத்தத்தில் போய்க்கொண்டே இருக்கிறது. எல்லோருக்கும் தெரிகிறது பொய்யும் புனைவுகளுமே இவ்வுலகத்தில் அதிகாரமாகவும், மேல்நிலையாகவும் உலவிக் கொண்டிருக்கின்றன என்று. ஆனாலும் உண்மையை ஏற்றுக்கொள்ள விடாமல் தடுக்கும் அந்தக் கனத்த, ஊடுருவிப் பார்க்க வல்ல போர்வை உலகத்தின்மீது போர்த்தப்படுவதையே எல்லோரும் விரும்பி ஏற்கின்றனர். இதில் விதிவிலக்கானவை மனித இனம் தவிர்த்த பிற உயிரினங்கள்தான். மனித இனத்தில் குழந்தை களையும் அவ்விதிவிலக்கில் சேர்க்கலாம்.

ஒரு புகழ்பெற்ற தலைவருடைய காலத்திற்குப் பின்னர், அவரை வழிகாட்டியாக ஏற்றுக் கொண்டு செயல்படுபவரை அவரைப் போலவே இவர் என்று அடையாளப்படுத்தும் வழக்கம் மக்களிடம் காலங்காலமாக எடுபட்டுக் கொண்டே வந்திருக்கிறது. இதே நிலைதான் அந்தணர் என்ற சமூக மதிப்புக்குரிய ஒரு பட்டப் பெயருக்கும் நடந்து வந்திருக்கிறது. இந்தியா முழுமையும் இருந்த அக்காலச் சமயங்களுள் கடவுளையும், ஆன்மாவையும் கணக்கில் எடுத்துக்கொள்ளாத சமயங்களாகச் சமணம், பௌத்தம், ஆசீவகம் இருந்தன (சார்வாகம், சாங்கியம் போன்ற தத்துவங்களும் இருந்தன).

இச்சமயங்கள் போதித்த கோட்பாடுகளில் ஊறித் திளைத்து, அதைச் சிறிதும் வழுவாமல் அதாவது, ஓராடை உடுத்துதல், மயிரைக் கையால் களைதல்,

ஒருவேளை உணவு, அதையும் பிச்சையெடுத்துண்ணல், அதற்குப் பாத்திரமும் வைத்திருக்காமை, கள்ளுண்ணாமை, புலால் உண்ணாமை, பெண்வழிச் சேராமை, பாறையில் படுத்துறங்குதல், கல்வி, மருத்துவம் எனப் பலவகையிலும் மக்களுக்குத் தொண்டு புரிதல், இன்னும் பலவாகத் தங்கள் வாழ்க்கையைப் பிறருக்காகவே மாற்றியமைத்து வாழப் பழகிக் கொண்டவர்களையே அறவோர், துறவோர், தாபதர் என்று அக்காலங்களில் அழைத்தனர். அதிலும் ஒரு சிறு உயிருக்கும், தான் அறியாமல் கூட தீங்கு விளைவிக்காத அறவோரை அந்தணர் என்று சமூக உயர்நிலையில் வைத்துப் போற்றி வந்தனர். ஓரறிவு முதலான எவ்வுயிரையும் கொல்ல நினையாமலும், மற்று எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகக் கூடிய ஒரு மனிதரைத்தான் அறவோராக ஏற்று அவரை அந்தணர் என்று சிறப்புச் செய்தனர். இதனையே திருவள்ளுவரும் தெளிவாக விளக்கி யுள்ளார். அப்படிப்பட்ட அந்தணர்கள் சமண, பௌத்த, ஆசீவகம் போன்ற முற்காலச் சமயத்தைச் சேர்ந்தவர்களாகத்தான் இருந்து வந்தனர். வைதிகச் சமயத்தினர் குதிரை, மாடு உண்பவர்களாக அறியப்பட்டவர்கள். எவ்வுயிரையும் வேள்வி என்ற பெயரில் நெருப்பிலிட்டு வாட்டுபவர்கள். ஆரியமல்லாத சமயங்களாக இருந்த சைவம், வைணவம், சௌரவம், சாக்தேயம், கானாபத்யம், கௌமாரம் போன்ற சமயங்களில் கூட பெரும்பான்மையும் புலால் உண்பவர் களாகவும், இல்லறத்தாராகவும் இருந்து வந்தவர்கள். அவர்களிலும் புலான் மறுத்தவர்கள் இருந்தாலும், எவ்வுயிர்க்கும் தீங்கு நேரா வாழ்வைத் தங்கள் வாழ்விலக்காகக் கொண்டிருந்தவர்களும் இருந்து வந்துள்ளனர்.

ஆனால் இப்படி எவ்வுயிரையும் மதித்துப், பிறருக்காக வாழும் அந்தணர்கள் சமூகத்தில் பெற்றிருந்த மதிப்பும், செல்வாக்கும்தான் சமயச் சண்டைகளின் அடிப்படைக் காரணமாயிற்று. இது அதிகாரப் பற்றை நோக்கியே எப்போதும் செயல்படும் வைதிகத்தின் சிந்தனை வளர்ச்சியாக உருப்பெற்று, சமணம், பௌத்தம், ஆசீவகம் போன்ற சமயங்கள் செல்வாக் கிழந்த காலத்தில் அவற்றின் உண்மையான அந்தணர்களாகப் போற்றப்பட்ட இடத்தில் வைதிகப் பிராமணியம் சிறிது சிறிதாக உள்நுழைந்தது. இதற்கு இடம் கொடுத்ததும் இயற்கையை முழுமையாக நம்பிய சமணம், பௌத்தம், ஆசீவகம் ஆகிய சமயங்கள்தாம். இச்சமயங்களின் மூலவர்களான மகாவீரர், புத்தர், மற்கலிகோசாலர் ஆகியோரின் காலத்திற்குப் பின்பு இவர்களின் சீடர்களாகவும், வழித்தோன்றல்களாகவும் வைதீகப் பிராமணர்கள் தங்களை வரித்துக் கொண்டனர்.

சமண, பௌத்த, சாங்கிய, ஆசீவகக் கோட்பாடுகளை உட்செரித்து, கள்ளுண்ணாமை, ஊன் உண்ணாமை போன்றவற்றைச் சிரமப்பட்டுக் கடைப்பிடித்து, இச்சமயங்களின் உயர்ந்த கோட்பாடுகளை வைதிகத்

தத்துவத்தில் ஏற்றி அதையே வேதமாகவும், இறையாகவும் வேற்று மொழிகளில் எழுதியும் வைத்து, அவையே அரச தர்மத்துக்கும் மேலான தர்மம் என்றும், அவற்றின் விளக்கங்களையே மனுதர்மம், சாத்திரம் என்றும் கூறி அவற்றைக் கடவுள் மொழிந்ததாகக் கூறி மன்னர்களையும் மயங்கவைத்த மதகுருக்களாகத் தங்களைத் தாங்களே உருவாக்கிக் கொண்டனர் வைதிகர்கள்.



அந்தணர், பார்ப்பனர் என்ற அறிவார்ந்த சமயத் தலைவர்களின் பட்டங்களை ஆரிய வைதிகப் பிராமணர்கள் தங்கள் பட்டங்களாகக் கூறிக் கொண்டாடினர். மன்னர் எவ்வழி மக்களும் அவ்வழி அல்லவா? மன்னனிடம் பரிசில் பெற வரும் தமிழ்ப் புலவர்களும், இசைப் பாணர்களும் மதகுருக்களையும் போற்றிப் பாடினால்தான் பிழைக்க முடியும் என்ற நிலையில் ஆரியப் பண்பாடும், ஆரிய மொழியும் தமிழோடு கலந்து ஒட்டி உறவாடி ஆரியமே உயர்ந்தது என்ற மனோபாவ அரசியல் இந்தியாவை ஆட்கொண்டது. இன்றும் ஆண்டு வருகிறது. முன்னோர் வழிபாடாக இருந்த மரபு, மூடநம்பிக்கை வழிபாடாக மாற்றப்பட்டதை ஏற்றுக் கொண்டதனால் வந்த வினைதான் இன்றைய தமிழினம் சார்ந்த மொழி, பண்பாடு, வரலாறு ஆகியவற்றின் அழித்தொழிப்பை முன்னெடுக்கும் ஆரிய முழக்கம்.

பாரதியும் இதழ்ப்பணியும்



திரு. மா. சிவஞானம்

உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை மற்றும் தமிழாய்வு மையம்
அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி.

சுதேசமித்திரன் (1904 - 1906) (சென்னை)

- *தமிழ் மக்கள் அனைவருக்கும் தேசியக் கருத்துக்களைத் தெரியப்படுத்திட வேண்டும் என்ற நோக்கில் 1882-ம் ஆண்டு சுதேசமித்திரன் என்ற பெயரில் ஜி.சுப்பிரமணிய ஐயர் தமிழில் நாளிதழ் ஒன்றினைத் தொடங்கினார்.*
- *சென்னை மகாஜன சங்கத்தின் தீவிர உறுப்பினர், சீர்திருத்த பணிகளை விதைத்த முதல் தேசியவாதி எனப் பல பெருமைகளுக்குரிய ஐயரை, பாரதி சந்தித்தது இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றிற்கு ஒரு திருப்பு முனையாகும்.*
- *சுதேசமித்திரன் எட்டுப் பக்கங்களைக் கொண்ட இதழாக வெளிவந்தது. இவ்விதழ் 19 அங்குல நீளமும் 12 அங்குல அகலமும் கொண்டதாகத் தொடக்க காலத்தில் வெளிவந்தது. அந்தக் காலத்தில் விளம்பரங்களின் ஆதரவின் பேரில்தான் பத்திரிகை துறையினை நடத்த முடிந்தது. அதற்குச் சுதேசமித்திரனும் விதி விலக்கல்ல.*
- *முதல் இரண்டு பக்கங்கள் விளம்பரங்களைக் கொண்டு வெளிவந்தது.*







- *இந்திய மொழி பத்திரிகைகள் மிகவும் கஷ்டப்பட்டுத்தான் செய்திகளைச் சேகரித்து வெளியிட்டன. ஆங்கிலப் பத்திரிகைகளில் வெளிவரும் செய்திகளையெல்லாம் ஒன்று திரட்டி அவற்றைத் தமிழில் மொழிபெயர்த்து*

மறுநாள் காலை செய்தியாக வெளியிட்டு வந்த காலத்தில்தான் சுதேசமித்திரன் அலுவலகத்திற்குப் பாரதி வந்து சேர்ந்தார்.

- பாரதிக்குத் துணை ஆசிரியர் பதவி வழங்கப்பட்டது. ஆங்கிலச் செய்திகளைத் தமிழில் மொழிபெயர்த்து ஆசிரியரின் பார்வைக்கு அனுப்பும் பணி பாரதிக்கு முதலில் வழங்கப்பட்டது.
- 1904-ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இந்தப் பணியில் தன்னை இணைத்து கொண்ட பாரதி, சில மாதங்கள் கழித்த பின்னரே தன் மனைவி செல்லம்மாளைச் சென்னைக்கு அழைத்து வந்தார்.
- பாரதி விளையாட்டாகவே விவேகானந்தர் பிரசங்கங்கள், அரவிந்தர் பேச்சுகள், காங்கிரஸ் மஹாசபை தலைமை உரைகள் முதலியவற்றை அசல் தமிழில் எழுதப்பட்டவை போல் மொழிபெயர்த்துள்ளார் எனப் பாரதியின் ஆரம்ப கால சுதேசமித்திரன் பணியைப் பற்றி வ.ரா கூறியுள்ளார்.
- சுதேசமித்திரன் பத்திரிகை 1882-ம் ஆண்டு தோன்றியிருந்தாலும், இந்திய தேசிய காங்கிரஸ் சபை தோன்றுவதற்கு முன்பே வெளிவந்து கொண்டிருந்த தேசியப் பத்திரிகை என்பதால், 'காங்கிரசுக்கு முன்னரே தோன்றிய தமிழ்ப் பத்திரிகை' என்று முதல் பக்கத்தில் எழுதப்பட்டு வெளிவரும்.
- சுதேசமித்திரனின் தலையங்கங்களில் பெரும்பாலும் இந்தியச் செய்திகளே இடம்பெற்று வந்தன. இதற்குக் காரணம் ஐயரின் தெளிவான முடிவே ஆகும். இதனைப் பாரதியும் ஆரம்பத்தில் புரிந்துக் கொண்டதால் தலையங்கம் தொடர்பான செய்திகளில் ஆசிரியருக்கும், துணை ஆசிரியருக்கும் ஆரம்ப நாட்களில் எந்தவொரு மனத்தாங்கலும் ஏற்படவில்லை.
- சுதேசமித்திரன் எப்போதுமே மிதவாதப் போக்கினைக் கொணடிருக்கும் பத்திரிகையாகவே வெளிவந்து கொண்டிருந்தது.
- ஏறக்குறைய இரண்டாண்டுக்கும் மேலாகத் துணை ஆசிரியராகப் பணியாற்றி வந்த பாரதி தன் மனதில் அசைபோட்டு வந்த தீவிரவாத தேசியவாதத்திற்கு அனுமதி கிடைக்காத நிலையில், பல கட்டுரைகளை எழுதி வந்தார்.
- பாரதியின் முதல் கட்டுரையானது முழுப் பெயருடன் சுதேசமித்திரனில் 1905-ம் ஆண்டு ஏப்ரல் 29-ம் நாள் 'கருணை' என்ற தலைப்பில் வெளியானது.
- கருணை என்ற தலைப்பில் இந்தக் கட்டுரையானது, சென்னை பிரசிடென்சிக் கல்லூரி தமிழ்ச் சங்கத்தின் சார்பாக மாணவர்களிடம் பாரதி ஆற்றிய உரையிலிருந்து தொகுக்கப்பட்ட சமய கருத்துகள் அடங்கிய தத்துவக் கட்டுரையாகும்.
- உலக மக்கள் 'கருணை'யை எவ்வாறு புரிந்துள்ளனர் என்பதனைப் பல எடுத்துக்காட்டுகளுடன் பாரதி விளக்குகின்றார். பாரதியின் முதல் மேடைப்பேச்சும் இதுவே ஆகும்.

- பாரதியின் பெயரில் பிரசுரமான முதல் தேசியப்பாடல் 'வாங்கமே வாழிய' *(Hail Bengal)* என்ற தலைப்பில் சுதேசமித்திரனில், 1905-ம் ஆண்டு செப்டம்பர் 15-ம் நாள் வெளியிடப்பட்டது.
- பிரிட்டிஷாரின் 'பிரித்தாளும் கொள்கை' *(Divide and Rule)* யின்படி இந்திய மக்களிடையே நிலவி வந்த ஒற்றுமை, மத அடிப்படையில் கர்ஸான் பிரபுவால் வங்கத்தை இரண்டாகப் பிரித்தபோது பிளவுண்டுப் போனது.
- பாரதியின் மனதில் தேங்கியிருந்த தேசியவாதம் அவரையும், பத்திரிகை கொண்டிருக்கும் கொள்கைகளையும் மீறி வெளியிடப்பட்டது.
- மெரினா கடற்கரையில் ஜி.சுப்பிரமணிய ஐயரின் தலைமையில் நடைபெற்ற சுதேசி கடற்கரை மாநாட்டில் பாடிய 'வங்கமே வாழிய!' என்ற பாடல், பாரதியின் முதல் அரசியல் பிரவேசம் என்றே கூறலாம்.
- 'வங்கமே வாழிய' என்ற பாடலைத் தொடர்ந்து அதே ஆண்டில் பாரதி தேசியப் பாதையில் தொடர்ந்து பல பாடல்களை இயற்றி அதில் சிலவற்றைச் சுதேசமித்திரனில் வெளியிட்டார். காலத்தின் தேவையை மனதில் கொண்டு எழுதியப் பாடல்களில் 'எங்கள் நாடு' தனித்துவம் பெற்றது.
- ஆட்சியில் நலிந்துப் போனது பற்றி இந்தியத் தாயின் புதல்வர்களுக்குச் சுட்டிக்காட்டவும், தேசத்தின் பெருமைகளை நினைவூட்டவும், மக்களது மகிமையினை எடுத்துக்காட்டவும், இகழ்ச்சிகளைத் 'தூ' வென தள்ளி இது 'எங்கள் நாடு' எனத் தாய்திரு நாட்டின் நிலை குறித்த கவலை அடங்கியத் தொகுப்பினை 1905-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 24-ம் நாள் சுதேசமித்திரனில் வெளியிட்டார்.
- வங்கம் பிரிக்கப்பட்டு, இந்திய மக்களிடையே நிலவி வந்த ஒற்றுமையைக் கலைத்ததும், இங்கிலாந்து நாட்டு வேல்ஸ் இளவரசர் இந்தியாவிற்கு விஜயம் செய்வதை ஆதரித்து பல பத்திரிகைகளும், புலவர்களும் வாழ்த்துப்பா பிரசுரித்து கொண்டிருந்த வேளையில், 'வேல்ஸ் இளவரசருக்குப் பாரத கண்டத்தாய் நல்வரவு கூறுதல்' என்ற தலைப்பில் பாடல் ஒன்றினை எழுதி, அதை சுதேசமித்திரன் இதழில் 1906-ம் ஆண்டு ஜனவரி 29-ம் நாள் வெளியிட்டார் பாரதி.
- 1906-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24-ம் நாள் வெளியான சுதேசமித்திரன் இதழில் பாரதி, 'வந்தே மாதரம்' என்ற தலைப்பில் தேசியப் பாடல் ஒன்றினை வெளியிட்டார். இந்தப் பாடல் பல முறை சுதேசமித்திரன் இதழ்களிலும், சக்ரவர்த்தினி இதழிலும் வெளியிடப்பட்டது. இது பங்கிம் சந்திர சட்டர்ஜியின் வந்தே மாதரப் பாடலை மொழிபெயர்த்த பின் எழுதிய பாடலாகும். பாரதி, 'வந்தே மாதரம்' என்ற தலைப்பில் இயற்றிய முதல் தேசபக்தி பாடல் இதுவே ஆகும்.

- *1905-ம் ஆண்டு நடந்த காசி காங்கிரஸ் மகாசபை கூட்டத்தில் கலந்து கொண்ட சென்னை சுதேசிகளில் பாரதியும் ஒருவர். ஜி.சுப்பிரமணிய ஐயரிடம் தனக்கு ஏற்பட்ட அறிவு சார்ந்த பேரீடுபாடு பாரதியைக் காசிக்கு இட்டு சென்றது. காங்கிரஸ் மகாசபை கூட்டத்தில் கலந்துகொள்ளும் வாய்ப்பு பாரதிக்கு ஏற்பட்டது. பாரதி கலந்துகொண்ட முதல் காங்கிரஸ் மாநாடும் இதுதான்.*
- *இந்த மாநாட்டில்தான் 'சுதேசி, அன்னிய பொருட்கள் புறக்கணிப்பு, தேசியக் கல்வி' ஆகிய இம்மூன்று திட்டங்களும் கொண்டு வரத் தீர்மானிக்கப்பட்டன.*
- *'சுதேசிய தேசியவாதம்' என்ற புதியக் கொள்கையையும் கொண்டு வந்து அன்னியருக்கு நாம் எப்போதும் அடிமையில்லை என்ற உணர்வினை மக்களுக்கு உணர்த்த வேண்டும் என்று திலகரும், விபின் சந்திரபாலர் போன்றவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்கத் தேசம் முழுவதும் 'சுயராஜ்ய காற்று' வீசத் தொடங்கியது. வ.உ.சிதம்பரம்பிள்ளை அவர்கள் 'சுதேசிக்கப்பல் கம்பெனி'யைத் துவக்குவதில் முனைப்புடன் செயல்படலாயினர்.*
- *பாரதி தனக்குள்ள ஒரே ஆயுதம் 'பத்திரிகை' என்பதனைப் புரிந்துக் கொண்டார். காசி மாநாட்டில் பாரதி சந்தித்த நிவேதிதா தேவியின் அருளால், 'என்னே கொடுமை' என்ற தலைப்பில் சுதேசமித்திரன் இதழில், 1906-ம் ஆண்டு ஏப்ரல் 4-ம் நாள் பிரசுரிக்கப்பட்டது.*
- *'என்னே கொடுமை' என்ற தலைப்பில் சுதேசமித்திரன் இதழில் பாடல் வெளியிட்டதற்குக் கிடைத்த வரவேற்பினைக் கண்ட பாரதி அடுத்த இதழில், ஏப்ரல் 11-ம் நாள் வெளியான பதிப்பில் பாரதத் தாயின் பெருமையினைத் தொடர்ந்து வெளியிட்டார். 'என் தாய்நாட்டின் முன்னாட் பெருமையும் இந்நாட் சிறுமையும்' என்ற தலைப்பில் இப்பாடல் வெளியாயின.*
- *தேசத்தின் பெருமைகள் அனைத்தும் அன்னியர்களது வருக்கைக்குப் பின்னர் எவ்வாறு சரிந்தது எனவும், அதனால் சிறுமை கண்டுவிட்ட தாய்நாட்டின் புனிதத்தைக் காப்பது நமது கடமை என மக்களுக்கு அறைகூவல் விடும் நோக்கில், இப்பாடலின் முடிவில் 'இன்னும் வரும்' என எழுதியிருக்கிறார். ஆனால் சுதேசமித்திரனின் அடுத்தடுத்த இதழ்களில் இப்பாடலின் தொடர்ச்சி வெளியிடப்படவில்லை.*
- *சுதேசமித்திரன் பத்திரிகையில் பாரதியின் பல படைப்புகள் வெளிப்பட்ட போதிலும் 1906-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குப் பின்னால் பாரதி எழுதி கொண்டு வந்த தேசபக்தி பாடல்கள், கட்டுரைகள் பலவற்றை அவரால் பிரசுரிக்க முடியாமல் போயின.*

- சுதேசமித்திரன் தேசிய வாரப் பத்திரிகை தான். ஆனால், தீவிரவாத போக்குகளை நேரடியாக ஆதரிக்க முன்வராத மிதவாத காங்கிரஸ் கருத்துகொண்ட பத்திரிகையாகத்தான் ஜி.சுப்பிரமணிய ஐயரது வழிக் காட்டுதலுக்கு உட்பட்டு தீவிரவாத கருத்துக்களை அப்படியே ஏற்றுக்கொண்டு வெளியிடும் நிலையில் இருக்கவில்லை.
- பாரதி சில சமயங்களில் புனைப்பெயரில் கூட எழுதத் தொடங்கினார். 1906-ம் ஆண்டு மே மாதம் முதல் ஐயருக்கும், பாரதிக்குமிடையே கொள்கையளவில் லேசான விரிசல் ஏற்பட்டது.

சக்ரவர்த்தினி (1905 -1907) (சென்னை)

- சுதேசமித்திரன் அலுவலகத்தில் பாரதி பணியாற்றிக் கொண்டிருக்கும் நேரத்தில் அதே அலுவலகத்தைக் காரியாலயமாகக் கொண்டு சக்ரவர்த்தினி என்னும் மாத இதழ் 1905-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் வெளிவர ஆரம்பித்தது.
- பாரதி சக்ரவர்த்தினியின் பொறுப்பாசிரியராகப் பணியாற்றி வருந்திருக்கிறார் என்பதை அவ்விதழ்களில் வெளியான ஆதாரங்களைக் கொண்டு அணுக முடியும்.
- துணை ஆசிரியராகச் சுதேசமித்திரனில் தனது கருத்துக்களை வெளியிட இயலாத பாரதி, சக்ரவர்த்தினியை நன்கு பயன்படுத்திக் கொண்டார். சுதேசமித்திரனுக்காக மொழிபெயர்த்து வைத்திருந்த சில கட்டுரைகள், கவிதைகள் அதில் வெளிவர இயலாத காரணத்தினால், சக்ரவர்த்தினியில் வெளியிட்டார்.
- சக்ரவர்த்தினி மாத இதழ் முற்றிலுமாகப் 'பெண் முன்னேற்றம்' பற்றி பேச வேண்டும் என்ற நோக்கில் கொண்டு வரப்பட்ட பத்திரிகை. ஆனால் இந்த இதழில் பாரதியின் சமீபத்திய மொழிபெயர்ப்பான 'வந்தே மாதரம், பக்கிம் சந்திர சட்டர்ஜியின் வங்காள மொழிப் பாடல்' சுதேசமித்திரனில் வராமல், சக்ரவர்த்தினியில் 1905-ம் ஆண்டு நவம்பர் இதழில் வெளிவந்தது.
- சக்ரவர்த்தினி இதழை நடத்தியவர் பி.வைத்தியநாத ஐயர் ஆவார். சக்ரவர்த்தினி என்ற தலைப்பு விக்டோரியா மகாராணியைக் குறிப்பதாகப் பலர் கருதுவர்.
- இதழின் தனிப்பிரதி ஒன்றுக்கு 3 அணாவாகவும், 32 பக்கங்களைக் கொண்டு வெளிவந்தது. இதழின் அளவு 24x16 செ.மீ. 1905-ம் ஆகஸ்ட் முதல் பாரதி பொறுப்பாசிரியராகப் பணியாற்றி விட்டு, 1907-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் சக்ரவர்த்தினியை விட்டு விலகினார்.



- இவ்விதழில் 'நமது பத்திரிகை' என்ற தலைப்பில் பெண்கள் நிலை மற்றும் அபிவிருத்தி குறித்து முதன் முதலாகக் கட்டுரை எழுதினார்.
- காங்கிரஸ் பேரியக்கத்தின் தூண்களில் ஒருவரான தாதாபாய் நவுரோஜியின் வாழ்க்கை வரலாற்றையும், அவரது தேசிய ஈடுபாட்டினையும், சென்னை மாகாண பெண்கள் அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியத்தினை வலியுறுத்தி செப்டம்பர் மாத இதழில், 'தாதாபாய் நவுரோஜி' என்ற தலைப்பில் வெளியிட்டார்.
- பாரதியின் முதல் மொழிபெயர்ப்புப் பாடல் எனக் கருதப்படும் 'வந்தே மாதரம்' பாடல் சக்ரவர்த்தினியில் 1905-ம் ஆண்டு நவம்பர் இதழில் பிரசுரமானது. இத்துடன் ஆங்கில மொழிபெயர்ப்புப் பாடலும் வெளியானது.
- பாரதியின் பெயரினைச் சென்னை மாகாணமெங்கும் பிரபலப்படுத்திய பாடலாகக் கருதப்படுகிறது. இதே பாடல் 1905-ம் ஆண்டு டிசம்பர் 28-ம் நாள் சுதேசமித்திரன் இதழிலும் 1906-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் 20-ம் தேதி இந்தியா பத்திரிகையில் மீண்டும் பிரசுரிக்கப்பட்டது.
- இந்தியாவில் வாழும் பெண்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளையும் அவர்களுக்குச் சுதந்திரத்தைத் தேடிக் கொடுப்பதும் இந்தியர்களின் கடமை என்பதனை வலியுறுத்தும் முகமாக 1906-ம் ஆண்டு ஜீன் மாதம் 'மாதர்களின் சுதந்திரங்கள்' என்ற தலைப்பில் கட்டுரையினை வெளியிட்டார்.
- இவ்விதழில் பாரதி, குழந்தை மணம், சதி, வரதட்சணை, கைம்பெண் கொடுமை ஆகியவற்றை எதிர்த்தும், பெண்கல்வி, பெண்ணுரிமை, பெண் விடுதலை ஆகியவற்றை வலியுறுத்தியும் கட்டுரைகளை எழுதினார்.
- 1906-ம் ஆண்டு அக்டோபர் இதழில் எம்.எஸ்.நடேசய்யரது பெயரினை ஆசிரியராகச் சக்ரவர்த்தினியில் காணமுடிகிறது.

இந்தியா (1906 - 1907) (சென்னை)

- *சுதேசியச் சிந்தனைகளை மக்களுக்கு எழுதிப் பிரசுரிக்க வேண்டும் என்ற பாரதியின் கனவினை நனவாக்கத் தோன்றியதுதான். 1906-ம் ஆண்டு மே மாதம் 9-ம் தேதி முதல் இப்பத்திரிகை வெளிவரத் துவங்கியது.*
- *1906-ம் ஆண்டு செப்டம்பர் மாத இறுதியில் சுதேசமித்திரன் பத்திரிகையினின்று விலகிய பாரதி இந்தியா இதழில் தன்னை முழுமையான ஆசிரியராக இணைத்துக் கொண்டார்.*
- *வெளிநாட்டு இந்தியப் பத்திரிகைகளில் வெளியான கட்டுரைகள் அனைத்தையும் தமிழில் மொழிபெயர்த்து சுதேசமித்திரன் மற்றும் சக்ரவர்த்தினி மாத இதழிலும் பாரதி பதிப்பித்து வந்தாலும் முழுமையான ஈடுபாட்டுடன் தனது மனக்கண்ணில் தோன்றும் ஆங்கிலேய எதிர்ப்புக் கட்டுரைகளைப் பதிப்பிக்க முடியாதச் சூழல் ஏற்பட்டது.*
- *இந்தச் சூழ்நிலையில்தான் பாரதியின் நீண்ட நாள் கனவாகயிருந்த 'கருத்து சுதந்திரமிக்கத் தமிழ் தேசிய இதழ்' இந்தியா என்ற பெயரில் வெளிவந்தது.*
- *துவக்கத்தில் பாரதியால் எழுதப்பட்டு இந்தியா பத்திரிகையில் வெளியான படைப்புகளில் 'பாரதி தான் ஆசிரியர்' எனக் குறிப்பிடாமல் இருந்திருக்கிறது. அதனால் சில கட்டுரைகளைப் புனைப்பெயர்களில் எழுதி வந்துள்ளார்.*

- இந்தியா பத்திரிகையில், 1906-ம் ஆண்டு ஜீலை மாதம் 7-ம் தேதி இதழிலிருந்துதான் அரசியல் கட்டுரைகள் முறையாக வெளிவரத் தொடங்கியது. அவ்விதழில் 'இவ்வார விஷயங்கள்' (Topics of the Week) என்ற பகுதியில், 'காங்கிரஸ்' என்ற தலைப்பில் கட்டுரைகளை எழுதினார்.
- 1906-ம் ஆண்டு ஜீலை 14-ம் தேதி வெளியான இந்தியா தலையங்கத்திலும், 'காங்கிரஸ் முறைமைகளின் சீர்திருத்தம்' (The Reform in Congress Methods) என்னும் கட்டுரையிலும் பாரதியின் பெயர் ஆசிரியராக இடம்பெறவில்லை.
- பாரதியின் பெயரினைக் கட்டுரை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த முதல் கட்டுரை 1906-ம் ஆண்டு நவம்பர் 17-ம் தேதி வெளியான இதழில் வந்த 'தாதாபாய் நவுரோஜியின் ராஜதந்திர கோட்பாடுகள்' என்ற கட்டுரை இடம் பெற்றிருக்கிறது.
- 1906-ம் ஆண்டு அக்டோபர் வரை சுதேசமித்திரன் இதழில் பணியாற்றிவிட்டு நவம்பர் மாதம் முதல் இந்தியாவிற்கு வந்து சேர்ந்த பின்னர் தான் தனது பெயரைப் போட்டு வந்தது.
- இந்தியா பத்திரிகையில் பாரதி துவக்கத்திலிருந்து எழுதி வந்திருப்பினும், தனது பெயரினை நேரடியாக ஆசிரியர் எனக் குறிப்பிடாமல் பல புனைப்பெயர்கள் கொண்டு எழுதி வந்திருக்கிறார். ஷெல்லிதாசன், சக்திதாசன், தேசபக்தன் மற்றும் வேதாந்தி போன்ற பல பெயர்களில் பாரதியின் கட்டுரைகளும் கவிதைகளும் வெளிவந்தது.
- முதன் முதலாக 'வேதாந்தி' என்ற புனைப்பெயரில் கட்டுரை ஆசிரியராகத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். 1906-ம் ஆண்டு ஆகஸ்ட் 4-ம் நாள் இதழில் சுவாமி அபேதானந்தர் பற்றிய பாடல் வெளிவந்தது. அப்பாடல் வரிகளின் இறுதியில் பாடல் ஆசிரியர் என்னுமிடத்தில் 'வேதாந்தி' என்ற பெயர் இடம்பெற்றுள்ளது.
- விவேகபானு என்ற இதழில் இந்தியா பற்றிய மதிப்புரையை நவம்பர் 24-ம் நாள் வெளியிட்டது. இதன் மதிப்புரையில் இந்தியா இதழின் ஆசிரியர் பாரதி என்பதுடன் 'பாலபாரதா சொஸைட்டி' என்ற அமைப்பின் பொறுப்பாளரும் ஆவார் என்று பாரதியை அறிமுகம் செய்து வைத்தது.
- இந்தியா இதழ் துவக்கத்தில் வார இதழாகத்தான் வெளியிடப்பட்டுள்ளது. ஆரம்ப நாட்களில் இந்தியா இதழ்கள் ஒவ்வொரு புதன் கிழமைகளில் வெளிவரும் என்ற செய்தியோடு வெளிவந்தாலும், பின்னர் இவ்வறிவிப்பு மாற்றப்பட்டது.
- 1906-ம் ஆண்டு மே 9-ம் நாள் முதல் பிரதி வெளியானபோது அவ்விதழின் அமைப்பு 16 பக்கங்களைக் கொண்டதாகவும் 'அரைகிரௌன்' (38 செ.மீ x 26 செ.மீ) அளவில் வெளியிடப்பட்டுள்ளது.

- *1906-ம் ஆண்டு மே முதல் 1908-ம் ஆண்டு ஆகஸ்ட் வரை சென்னையிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த காலகட்டங்களில், இதழின் மேற்புறத்தில் எந்தவொரு அடைமொழியினைக் கொண்டும் வெளிவரவில்லை.*
- *பாண்டிச்சேரியிலிருந்து 1908-ம் ஆண்டு அக்டோபர் முதல் வெளியான இதழ்களின் மேல்புறத்தில் 'சுதந்திரம்-சமத்துவம்-சகோதரத்துவம்' (Liberte-Eqalite-Fraternite) என்று தமிழிலும், பிரெஞ்சு மொழியிலும் அச்சிடப்பட்டிருக்கிறது. பதிப்பக ஆண்டினைக் குறிப்பிடுகையில் ஆங்கில மாதம் மற்றும் நாட்களுடன் தமிழ் ஆண்டு, மாதங்களையும் சேர்த்து வெளியிட்டு வந்தது.*
- *இதழ்களின் அட்டையில் சிந்தனைகளைத் தூண்டிவிடும் கருத்துப் படங்கள் (Cartoons) வெளியிடும் மேற்கத்திய பாணியைத் தமிழ் இதழியல் வரலாற்றிற்குப் பாரதி அறிமுகம் செய்து வைக்கிறார். கேலிச் சித்திரங்களுக்குக் கீழ்ப்புறம் கருத்துப் படத்திற்கான விளக்கக் குறிப்புகளையும் வெளியிட்டுப் புதுமை படைத்தார் பாரதி.*
- *சென்னையிலிருந்து வெளியான இந்தியா இதழ்கள் 1906 முதல் 1908 வரை அதிகமான கருத்துப் படங்களை வெளியிடவில்லை. 1908-ம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் பாண்டிச்சேரியிலிருந்து வெளிவந்த இந்தியா இதழ்களில் கருத்துப் படங்களை அதிகமாகக் காணமுடிகின்றது.*

- *1906-ம் ஆண்டு செப்டம்பர் 29-ம் நாள் 'பசு சித்திரம்' என்ற தலைப்பில் வெளியான இந்தியா இதழ், பாரதியின் தேசிய நோக்குப் பார்வைக்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.*

- *1907-ம் ஆண்டு மார்ச் 3-ம் தேதி 'சூரியனைக் கண்டு நாய்கள் குரைத்தல்' என்ற தலைப்பில், பிரிட்டிஷ் ஆதரவு இந்தியப் பத்திரிகைகளை எதிர்த்துக் கருத்துப் படங்களை வெளியிட்டார்.*
- *வ.உ.சிதம்பரம்பிள்ளையின் 'சுதேசி நீராவிக் கப்பல் கம்பெனி'க்கு ஆதராவாக 1907-ம் ஆண்டு 'சுதேசிக் கப்பல் வந்தே மாதரக் கொடியுடன் வருதல்' என்ற தலைப்பில் கருத்துப் படங்களை வெளியிட்டார்.*

- *1907-ம் ஆண்டு ஆகஸ்ட் 17-ம் நாள் வெளிவந்த இந்தியா இதழில் பிரசுரிக்கப்பட்ட கருத்துப் படத்தினையும், அதன் விளக்கத்தினையும் கண்டு பிரிட்டிஷ் அரசு ஆட்சேபனைத் தெரிவித்தது.*

பாலபாரதா (1906) (சென்னை)

- பாரதி இந்தியா, சக்ரவர்த்தினி போன்ற பத்திரிகைகளில் ஆசிரியராகப் பணியாற்றிய அதே காலத்தில் பாலபாரதா (அல்லது) யங் இந்தியா என்ற ஆங்கில வார இதழினைச் சென்னையிலிருந்து தொடங்கினார்.
- இவ்விதழுக்குப் பாரதி தான் சார்ந்துள்ள 'பாலபாரத சங்கம்' என்ற அமைப்பின் பெயரினைக் கொண்டுதான் இப்பத்திரிகைக்குப் பாலபாரதா எனப் சூட்டிருக்கக்கூடும்.
- பாரதி 1906-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 27-ம் நாள் வெளியான இந்தியா இதழில் புதிதாகத் துவக்கவிருக்கின்ற ஆங்கில வார இதழினைப் பற்றி குறிப்பிடுகிறார். அதில், 'நமது ஆபிசிலிருந்து பாலபாரதா என்ற ஆங்கிலேய வாரப் பத்திரிகை பிரசுரமாகப் போகின்றது. இதன் நோக்கங்களும் நடைமுறைகளும் இந்தியா பத்திரிகையின் மாதிரியை ஒட்டியேயிருக்கும். தேசபக்தி, ஜனசேவை என்பவைகளே இப்பத்திரிகையின் தொழில்களாகும்' என்று குறிப்பிடுகிறார்.
- பாரதியின் இலக்கு இளைஞர்கள் என்பதனைத் தனது இந்தியா விளம்பரத்திலேயே குறிப்பிட்டுள்ளதால், சென்னை மாகாண இளைஞர்களுக்கு ஓரளவு ஆங்கில மொழி அறிந்திருக்க வாய்ப்புகள் அதிகமிருக்கும் என்ற நம்பிக்கையிலும், சென்னை பிரசிடென்சி மற்றம் பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் கொடுத்த ஊக்கத்தின் அடிப்படையிலும் பாரதி இவ்விதழைத் தொடங்கியிருக்கலாம்.
- 1906-ம் ஆண்டு நவம்பர் மாதம் 10-ம் நாள் வெளியான இதழில், இப்பத்திரிகை 8 பக்கங்களைக் கொண்டு வியாழக்கிழமை தோறும் வெளிவருமென அறிவிக்கப்பட்டிருக்கிறது. இப்பத்திரிகையின் ஆசிரியர் ஸ்ரீஸி.சுப்பிரமணிய பாரதி என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
- பாலபாரதா பாரதியின் பொறுப்பில் வெளிவந்து கொண்டிருந்தபோது வார இதழாகவும், 1907-ம் ஆண்டு நவம்பர் முதல் மாத இதழாகவும், மைலாப்பூரிலிருந்து டாக்டர் நஞ்சுண்டராவ் பொறுப்பில் வெளிவந்தது.

இந்தியா (1908 - 1910) (புதுவை)

- புதுவை வந்ததும் இந்தியா இதழ்கள் பழைய நிலையில் சிறியதாகவே வெளிவந்தது. ஓராண்டு கழிந்த பின்னர் 1909 அக்டோபர் முதல் பெரியளவில் பக்கங்களைக் கொண்டு வெளிவந்துள்ளது.
- சென்னையிலிருந்த போது இந்தியா பத்திரிகை அலுவலகத்தின் மொத்த மதிப்பு ரூ.50,000 எனவும், புதுவையிலிருந்து வெளிவந்த போது அதன்

மதிப்பு இந்தத் தொகையினைக் காட்டிலும் சில ஆயிரங்கள் அதிகமாகியுள்ளது.

- 1908-ம் ஆண்டில் வெளியான இந்தியா இதழ்களில் 'ஒவ்வொரு சனிக்கிழமைகளில் வெளிவரும்' என்ற அறிவிப்புடன் வெளியிடப் பட்டிருக்கிறது. இவ்வாண்டில் வெளியிடப்பட்ட இதழ்கள் அனைத்தும் எட்டுப் பக்கங்களைக் கொண்டதாகவும் 'கிரௌன்' (53 செ.மீ x 26 செ.மீ) அளவிலும் வெளியிடப்பட்டுள்ளது.
- 1908-ம் ஆண்டு அக்டோபர் 10-ம் நாள் வெளியான முதல் இதழில், 'சத்தியத்தின் புரோவிருத்தியைக் கன்வென்ஷன் சங்கிலியால் அதன் காலை கட்டித் தடுக்க முயல்கின்றான்' என்ற குறிப்புகளுடன் கருத்துப் படத்தினை வெளியிடுகிறார் பாரதி.
- வங்காளம் என்ற குதிரை பிரிட்டிஷ் ஆட்சி என்ற வெள்ளையன் ஒருவனை எட்டி உதைப்பதாகவும், வெள்ளைக்காரன் ஏற்றி வைத்த பொறியைக் கீழே தள்ளிவிடுவது போன்று பிரிட்டிஷ்காரர்களின் பிரித்தாளும் கொள்கையினை வலியுறுத்தும் வகையில், 1908-ம் ஆண்டு நவம்பர் 28-ம் நாளன்று 'எள் விதைத்தால் எள் விளையும்' என்ற தலைப்பில் இந்தியா இதழில் கருத்துப் படத்தினை வெளியிட்டார்.





- ஆங்கில அதிகாரி (பிரிட்டஷ் அரசு) ஒருவர், பட்டினியால் வாடிக் கொண்டிருக்கும் மக்களைப் (இந்தியர்கள்) பார்த்து, 'உங்களுக்கு டேஸத்திலே ரட்ஸனைக் கொடுக்கிறோம், பத்திரம் கொடுக்கிறோம், ஸமாடானம் கொடுக்கிறோம்' என்று வினவுவது போன்று 'பஞ்சம்' என்ற தலைப்பில் 1909-ம் ஆண்டு ஜனவரி 23-ம் நாளில் கருத்திப் படத்தினை வெளியிட்டார்.
- 1909-ம் ஆண்டு பிப்ரவரி 13-ம் நாளன்று 'தூத்துக்குடி சுதேசிக் கப்பல்' என்ற தலைப்பில், பாரத மாதா நமது ஜனங்களை நோக்கி சுதேசியக் கப்பலுக்கு உதவி செய்யும்படி கட்டளையிடுவதாகச் சித்தரிகிறார்.

- இந்து - முஸ்லீம் மக்களிடையே எழுந்த பிரச்சனையை மையமாகக் கொண்டு 1909-ம் ஆண்டு மார்ச் 20-ம் நாளன்று

'கிணறு வெட்டப் போய்ப்பூதம் புறப்படுகிறது' என்ற தலைப்பில் கருத்துப் படத்தினை வெளியிட்டார்.



- *1909-ம் ஆண்டு மே 15-ம் நாள் வெளியான இந்தியா இதழில் 'கிரஹண விமோசனம்'* என்ற தலைப்பில் அரவிந்தரைப் பற்றிய கருத்துப் படம் ஒன்றினை வெளியிட்டார். இதில், அரவிந்தரைச் சூரியனாகவும், அந்தச் சூரியனை விழுங்கப் போலீஸ் பாம்பு (பிரிட்டிஷார்) விரைந்ததாகவும், விழுங்க முடியாமல் நீங்கிப் போய் விட்டதாகவும் சித்திரிகிறார் பாரதி.

- சுதேசிக் கோட்பாட்டில் வங்காளத்தில் உள்ளவர்களுக்கும், சென்னை மாகாணத்தவருக்கும் உள்ள வேறுபாட்டினை விளக்கும் வகையில், *1909-ம் ஆண்டு ஜூலை 17-ம் நாளன்று 'சுதேச கப்பல்கள்'* என்ற தலைப்பில் கருத்துப் படத்தினை வெளியிட்டார்.
- *1909-ம் ஆண்டு அக்டோபர் 23-ம் நாள் 'இந்தியாவில் பிரிட்டிஷ் அதிகாரிகளின் செய்கை'* என்ற தலைப்பில் வெளியான இந்தியா இதழில், காங்கிரஸ் மிதவாதிகளின் சுயநலப் போக்கினையும் பிரிட்டிஷ் அதிகாரிகளின் பால் அவர்கள் கொண்டுள்ள மரியாதையையும், அவற்றால் அவர்கள் சம்பாதிக்கும் அவலங்களையும் சுட்டிக்காட்டி, மிதவாதிகளைச் சுயமரியாதையில்லாத சாதாரண மனிதர்களாகச் சித்தரிக்கிறார்.

- தென் ஆப்பிரிக்க மக்களின் விடுதலைக்காகப் போராட்டங்களைத் தொடர்ந்து நடத்திய காந்தியின் வீர நெஞ்சத்தைப் போற்றும் வகையில், *1909-ம் ஆண்டு டிசம்பர் 18-ம் நாள்* வெளியான இதழில், *'ஸ்ரீ காந்தியென்ற பசு'* என்ற தலைப்பில் கருத்துப் படத்தினை வெளியிட்டார்.

- பிரிட்டிஷ் அரசின் பத்திரிகை குறிப்பில் *1906-ல் 300* பிரதிகளும், *1907-ம் ஆண்டு 500-லிருந்து 550* பிரதிகளாக உயர்ந்துள்ளதாகவும், *1908-ம் ஆண்டின் துவக்கத்தில் 600* பிரதிகள் வரை வெளியிடப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளது. *1910-ம் ஆண்டு* துவக்கத்தில் கொடுத்திருக்கும் அறிக்கையின்படி *1500* பிரதிகளை விநியோகித்திருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

விஜயா (1909 - 1910)

- சென்னையில் விஜயா இதழ் 1909 ஜூலையில் நின்றுவிட்டது. அதன் பின்னர் புதுவையில் வெளியான இந்தியா இதழில் விஜயா பற்றிய விளம்பரம் வெளிவந்துள்ளது "பிரதி தினமும் வெளியாகும்.

  நமது பத்திரிகைக்கு முக்கிய நிருபர்கள் ஸ்ரீமான் சுப்ரமணிய பாரதி, ஸ்ரீமான் கா.வரதராஜன் முதலான இன்னும் அனேகர்கள். செப்டம்பர் 12 கிருஷ்ண ஜயந்தியன்று துவங்கி வெளியாகும்" என்ற விளம்பரம் காணப்படுகின்றது.

- பாரதியார் ஆசிரியராக இருந்த ஒரே நாளிதழ் விஜயா தான். மேலும் பாரதியார் நடத்திய பத்திரிகைகள் அனைத்து குரல்வளை நசுக்கப்பட்டுக் கிடந்த அந்தக் காலகட்டத்தில் அவரது கருத்துகளை, கட்டுரைகளைத் தாங்கி வந்த ஒரே இதழ் என்ற பெருமைக்குரியது.

- விஜயா இதழைப் பற்றி 1910-ல் ஜனவரியில் வெளியான 'வித்தியா' இதழில் 'விஜயா தமிழ் தினசரிப் பத்திரிகை' ஹிந்து தர்மம், பாரத சரித்திரம், தொழில், கலைகள், சிற்பம், தற்கால நிலை, உலக வர்த்தமானங்கள் இவற்றால் பாரத நாட்டிற்கு விளையக்கூடிய பலாபலன்கள் இவையெல்லாம் இப்பத்திரிகையில் நாடோறும் விவரிக்கப்படும் செய்திகள் என்று வெளியிடப்பட்டது.

- 1910-ம் ஆண்டு மார்ச் 23-ம் நாள் அன்று வெளியான இந்தியா இதழில், விஜயா நாளிதழை வார இதழாக மாற்றப் போவதாகவும் பிரிட்டிஷ் இந்திய அரசியல் தொடர்பாக எதுவும் இனி எழுதப்போவதில்லை என்று அறிவித்துள்ளார் பாரதியார்.

- விஜயா இதழ் 26 செ.மீ அகலமும் 38.செ.மீ நீளமும் நான்கு பக்கங்களையும் கொண்டு தினமும் மாலையில் வெளியானது. முகப்பின் மேற்பகுதியில் 'விஜயா' என்று தமிழில் பெரிய எழுத்துக்களிலும் அதன் கீழ் ஆங்கிலத்தில் பெயர் இடம் பெற்றிருக்கிறது. அவற்றின் கீழ் 'தினமும் மாலையில் பிரசுரிக்கப்படும்' என்ற செய்தி காணப்படுகின்றது.

  விஜயா என்ற எழுத்துக்களின் மேல் அரைவட்டமாக மேலிருந்து கீழ்நோக்கி பிரெஞ்சு நாட்டின் தத்துவமான ஸ்வதந்திரம், ஸமத்துவம், ஸகோதரத்துவம் என்று தமிழிலும் அதற்கு இணையான பிரெஞ்சு மொழியிலும் Liberate-Egalite-Fraternite என்றவாறு அமைந்து காணப்படுகின்றது.

  வலது பக்க மூலையில் சந்தா விபரமும் அதற்கு எதிர்ப்புறம் சந்தாவின் முறைக்கு ஏற்ப இதழ்களை அனுப்பும் விபரமும் காணப்பட்டது.

கர்மயோகி (1910) (புதுவை)

- புதுவையிலிருந்து கர்மயோகி என்ற மாதாந்திரப் பத்திரிகையினைத் தமிழில் தொடங்கினார்.
- அரவிந்தரால் வங்காளத்தில் கர்மயோகின் என்ற பெயரில் 1909-ம் ஆண்டு ஜீன் மாதத்தில் ஒரு பத்திரிகை துவக்கப்பட்டது. இப்பத்திரிகையில் அரவிந்தர் பயங்கரவாத கருத்துகளையும் சுதேசி இயக்கச் செயல்பாடுகளையும் குறித்த பல கட்டுரைகளை ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டு வந்தார்.
- அரவிந்தர் எழுதிய சுதேசி கட்டுரைகளில் தன்னை முழுமையாக அர்பணித்துக் கொண்ட பாரதிக்கு, கர்மயோகின் பத்தரிகையினை அப்படியே தமிழில் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் மனதில் இருந்தது. பாரதியின் இந்தியா அலுவலகத்திற்கு, அரவிந்தர் அடிக்கடி வந்து ஆலோசனைகளையும் நடத்தியுள்ளார்.
- 1910-ம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்துதான் கர்மயோகியின் முதல் இதழ் ஸெய்கோன் அச்சகத்திலிருந்து வெளியானது. இருப்பினும் இவ்விதழ் ஒரு சில மாதங்கள் மட்டுமே வெளிவந்தது.
- கர்மயோகி இதழின் விளம்பரத்தில் தான் முதலில் பாரதியின் பெயர் 'மொழிபெயர்ப்பாளர்' என வெளிவந்தது. பின்பு பாரதியின் பெயரினை, 'ஸ்ரீமான் சுப்பிரமணிய பாரதி, பத்திராதிபர்' என்று வெளியிட்டது.
- இவ்விதழின் பெயர் முதற்பக்கத்தில் 2 செ.மீ உயரத்திற்கும் 12.5 அகலத்திற்கும் அச்சிடப்பட்டுள்ளது. தலைப்புக்கு மேலே இடது புறம் ஆண்டு எண்ணிக்கையைக் குறிக்க 'இலக்கம்' என்றும் எண்களுடன் இடம் பெற்றிருக்கச் செய்திருந்தார்.
-

ஆன்மீகக் கட்டுரைகளை அடிக்கடி வெளியிட்டு வ ந்ததால், இதழின் முதல் பக்கத்தில் ஆன்மீகக் கருத்துப்படம் ஒன்றினை வெளியிட்டு, படத்தின் மேல் 'பகவத்கீதை'யினிலிருந்து, 'அப்படியே அறிந்தவன் பற்றிலாதவனாய் உலக நன்மையை விரும்பித் தொழில் செய்ய வேண்டும்' என்ற கீதையின் வரிகளையும் வெளியிட்டிருக்கிறார். மேலும் போர்க்களத்தில் கண்ணன் தேரோட்டி வருவதாகவும், அர்சுனனுக்கு உபதேசம் செய்வதாகவும் தேரினைச் சுற்றி படைவீரர்கள் போரிடுவதற்குத் தயாராகவிருப்பது போலவும் அப்படத்தினை அமையச் செய்திருக்கிறார் பாரதி. முகப்பு அட்டையின் உச்சியில் பத்திரிகை பதிவு எண்ணையும், அதன் வலதுபுறம் தமிழ் ஆண்டும் மாதமும் குறிப்பிட்டிருக்கிறது.
- 1910-ம் ஆண்டு மார்ச் மாதம் வெளியான இதழே கடைசி இதழாகும்.

தர்மம் (1910) (புதுவை)

- இப்பத்திரிகையானது 1910-ம் ஆண்டு பிப்ரவரி மாதத்திலிருந்து வெளிவந்து கொண்டிருந்தாலும், 1910-ம் ஆண்டு மார்ச் மாதம் போட்ட தடைகளிலிருந்தும், பிரிட்டிஷாரின் பார்வையிலிருந்தும் தப்பித்து பல மாதங்கள் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருந்தது.
- 1910-ம் ஆண்டு ஏப்ரலில் அரவிந்தர் மற்றும் அக்டோபரில் வ.வே.சு ஐயர் போன்றோர்களுடன் அறுபதுக்கும் மேற்பட்ட சுதேசிகள் பாண்டிச்சேரிக்கு வந்து சேர்ந்ததும், தீவிரவாத இயக்கம் வலுப்பெற்ற சூழ்நிலையில் பாரதியின் மேற்பார்வையில் வெளிவந்து கொண்டிருந்த தர்மம் பின்னர் ஆர்.கிருஷ்ணசாமி அய்யர் என்பவரால் வெளியிடப்பட்டு வந்தது.
- பின்னர் அங்கிருந்து வ.வே.சு ஐயரின் வீட்டு விலாசத்திற்கு மாறியது. அந்த அலுவலகத்திற்கு 'தர்மாலயம்' எனப் பெயரிட்டிருந்தார் வ.வே.சு ஐயர்.
- பாரதி, வ.வே.சு ஐயர், நீலகண்ட பிரம்மச்சாரி போன்றோர்களது உருவாக்கத்தில் எம்.நாராயணன் என்பவர் அச்சிட்டுக் கொடுக்க 1912-ம் ஆண்டு வரை புதுவையிலிருந்து தர்மம் வெளிவந்து கொண்டிருந்தது.
- இவ்விதழ் 25 செ.மீ X 17 செ.மீ அளவில் அமைந்த எட்டுப் பக்கங்களைக் கொண்டு வெளிவந்தது. இப்பத்திரிகையில் நான்கு வருணங்களின் தருமங்கள், தேசபக்தர்களின் அபேட்சை, சுதந்திரம் அடையும் மார்க்கம், மனிதர்களின் கடமை, அன்பு போன்ற தலைப்பகளில் கட்டுரைகள் வெளிவந்தன.

சூரியோதயம் (1910) (புதுவை)

- 1908-ம் ஆண்டு வரை வெளியான சூரியோதயம் வார இதழ் ஏறக்குறைய 300 பிரதிகள் அச்சடிக்கப்பட்டு வெளிவந்துள்ளன. '1908-ம் ஆண்டு ஜீலை 5-ம் தேதியுடன் இப்பத்திரிகை நின்று போனது' என்று எனச் சென்னை மாகாண செய்தித்தாள் அறிக்கை குறிப்பு தருகிறது.
- நீலகண்ட பிரம்மச்சாரியின் மூலம் லூயிஸ் சின்னையா நாயுடுவின் அறிமுகம் பாரதிக்குக் கிடைத்தது. நீலகண்டரின் அழைப்பினை ஏற்று சின்னையா சூரியோதயம் பத்திரிகையினை மீண்டும் துவக்குவதாக முடிவு செய்து ஸெய்கோனில் ஒரு பாரிஸ்டரிடம் வேலை பார்த்து கிடைத்த பணத்தில் சூரியோதயம் பத்திரிகையினைப் பாண்டிச்சேரியில் வைத்து துவக்கினார்.
- பிரிட்டிஷ் அரசின் ரகசியப் பத்திரிகை குறிப்புகள் இவரது பெயரையும் முழு விபரத்தையும் குறிப்பிட்டுள்ளது. 'லூயிஸ் சின்னையா நாயுடு' என ஆங்கிலத்திலும் பிரெஞ்சு மொழியிலும் குறிப்பிட்டு, சூரியோதயம்

பத்திரிகையின் 'உரிமையாளர் மற்றும் ஆசிரியர்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

- பாரதிக்கு உதவியாக இந்தியா அலுவலகத்தில் பணிபுரிந்து வந்த பரலி நெல்லையப்பர் சூரியோதயம் அலுவலகத்தில் பாரதிக்காகப் பணியாற்றி இருந்திக்கிறார்.
- 1909-ம் ஆண்டு அக்டோபர்31-ம் நாளன்று சூரியோதயம் வார இதழில், இந்திய மக்களை அறை கூவலிட்டு சுதேசி இயக்கக் கோட்பாடுகளில் இணைந்து தேசத் தொண்டாற்றிட அழைத்துள்ளார்.

- 1909-ம் ஆண்டு நவம்பர் 7-ம் நாள் இதழில், 'சகோதரர்களே! எழுங்கள் தயாராகுங்கள்! நாம் இப்போதே சுதேசிப் போராட்டம் போன்ற அமைப்புகளில் பங்குக் கொண்டால்தான் நமது பாரத மாதாவை நாட்டைவிட்டு கொண்டு செல்லும் அப்பரங்கியரின் எண்ணத்திற்கு முடிவுகட்ட முடியும். ஆகையால் உடனடியாகத் தயாராகுங்கள் என்று பாரதி கேட்டுக் கொண்டார்.
- 1910-ம் ஆணடு பிப்ரவரி 13-ம் நாள் வெளியான இதழில், 'தமிழ்நாட்டு மக்களுக்கு இறுதி விண்ணப்பம்' என்ற கட்டுரையினை மொழிபெயர்த்து பிரிட்டிஷ் அரசின் பார்வைக்கு அனுப்பி வைத்து, அதில் ராஜத்துவேஷ கருத்தளிப்பதாகக் கருதி, 1910-ம் ஆண்டு மார்ச் 18-ம் நாள் பிரிட்டிஷ் இந்திய அரசால் தடைசெய்யப்பட்டது.

பாலபாரதா (1908 - 1910) (புதுவை)

- *1907-ம் ஆண்டு நவம்பர் முதல் பாரதி சென்னையைவிட்டுப் பாண்டிச்சேரிக்குச் சென்ற ஆகஸ்ட் மாதம் வரை மாத இதழாக ஏறக்குறையப் பத்து மாதங்களும் வெளிவந்துள்ளன.*
- *பாரதி பாண்டிச்சேரியிலிருந்து மீண்டும் 1908-ம் ஆண்டு சிறு மாற்றத்துடன் வெளியிட்டார். 1908-ம் ஆண்டு மே 29-ம் நாளன்று வெளியான இதழில் பாரதி 'திலகருக்கு மடல்' என்ற தலைப்பில் கட்டுரை ஒன்றினை வெளியிட்டுள்ளார்.*
- *இந்தியா இதழில் பாலபாரதாவின் சந்தா விபரங்களைப் பற்றி வெளியிட்டு, பாலபாரதா எனவும், பாலபாரத் எனவும் இரண்டு தலைப்புகளில் இவ்விதழ் பற்றிய குறிப்புகளையும் வெளியிட்டார்.*
- *பாலபாரதா (அல்லது) யங் இந்தியா என இரண்டு மொழித்தலைப்புகளையும் ஆங்கிலத்திலேயே அமைக்கப்பட்டிருக்கிறது. தலைப்பிற்குக் கீழே சுவாமி விவேகானந்தரின் 'எழு, குறிக்கோளை அடையும் வரை நில்லன்மின்' என்ற கருத்துமொழி, Arise and stop not till the Goal is Reached என ஆங்கிலத்தில் பதிப்பித்திருக்கிறார் பாரதி.*
- *கருத்துமொழிக்குக் கீழே தேசியக் கொடியினை வலியுறுத்தும் நோக்கில் பாலபாரத் கொடியினை ஏந்தியுள்ள இளைஞன் படமும் அமைந்துள்ளது. முகப்பு அட்டையின் கீழே தாமரை இதழ்கள் வரையப்பட்டு அவ்விதழ்களுள் 'கட்டற்ற விடுதலையின் ஒளி' என்ற பொருளில் ஆங்கிலத்திலும் பொறிக்கப்பட்டுள்ளது.*
- *பாலபாரதா தொடக்கத்தில் எட்டுப் பக்கங்களைக் கொண்ட வார இதழாக வெளிந்தாலும், மாத இதழாக மாற்றப்பட்ட பின்பு 24 பக்கங்களைக் கொண்டு வெளிவந்துள்ளது. இப்பத்திரிகையானது 25 செ.மீ X 19 செ.மீ அளவில் அச்சிடப்பட்டு வெளிவந்தது.*

'பாலபாரத' – மேலட்டை (இலவரி, 1908)



'பாலபாரத' – மேலட்டை (மார்ச், 1908)

இராவணன் கண்ட சிந்தாமணி மருத்துவம்

அண்ணாமலை சுகுமாரன் *M.A., D.Lit.*

இராவணன் எழுதிய இரச ராச சிந்தாமணி என்ற நூலில் கூறப்பட்டிருக்கும் மருந்துகள் இரசத்தை *(பாதரசம்/ mercury)* மூலப்பொருளாகக் கொண்டிருப்பதால் இரசத்தின் பெயரிலேயே இந்த நூல் அமைந்திருக்கிறது .

உலகிலேயே இரசத்தை அதிகம் மருத்துவத்திற்கு பயன்படுத்துவது தமிழர் மருத்துவமே. அதற்கு அடுத்து சீனர்கள் பயன்படுத்துகின்றனர்

சமணர்கள் மருத்துவத்திலும் மாந்திரீகத்தில் வல்லவராக இருந்திருக்கின்றனர். அவர்களின் மருத்துவ நூல்கள் இன்னமும் முழுமையாக அறிந்து ஆராயப்படவில்லை. அவர்களின் மருத்துவ நூல்கள் மலையாளத்தில் திகம்பரர் நூல்கள் என்று அழைக்கப்படுகிறது.

சிந்தாமணி மருத்துவம் என்பது சமணர்கள் வழங்கி வந்த தமிழர் சித்தமருத்துவத்தைத் திரட்டி எழுதிய ஒரு சிறந்த நூல் என்றும் அது சித்தர்களின் முறையில் இருந்து வடமொழிக்குப் போனதாகவும் பின் அதுவே அகத்தியர் கூறியதாக மலையாளத்தில் *(சிந்தாமணி மருத்துவம்)* கையாளப்படுவதாகவும் என்று தி வி .சாம்பசிவம் பிள்ளை யின் தமிழ் மருத்துவக் கலைக்களஞ்சியத்தில் *(VOL 111 பக்கம் 2161)* இல் கூறப்பட்டிருக்கிறது .

இந்த நூலில் சுமார் *207* இரசம் கலந்த மருந்துகளும் அத்துடன் நவ மணிகள் ,பாடாணங்கள் , உலோகங்கள் மூலிகைச் சரக்குகள் சேர்த்துச் செய்யும் அரிய முறைகள் பலவற்றைக் காணலாம். அத்தோடு மருந்து செய்வதற்கு வேண்டிய இரசத்தைப் பிரித்தெடுக்கும் முறைகளும் கிடைத்த இரசத்தை சுத்தி செய்யும் முறைகளும் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது .இத்தகைய சுத்திமுறை தமிழ் மருத்துவத்திற்க்கே உரியது.

இராவணன் எழுதிய இரச ராச சிந்தாமணி. இரசத்தின் மருத்துவப் பயன்பாடுகளை விவரிக்கின்றது. மேலும் மருத்துவ வரலாற்றில் இரச மருத்துவம் எப்படியெல்லாம் பயன் பட்டிருக்கிறது என்பதையும் பல சித்தர்களின் பாடல்களின் மூலம் தெளிவாக அறிய முடிகிறது. இரசவாதம் என்று

இரசத்தைக் கொண்டு உயர் செய்யும் முறையும் வழக்கில் இருந்தது தெரியவருகிறது. இரசத்தைக் கொண்டு சிறப்பான மருந்துகள் செய்யும் முறைகள் அனைத்தையும் சித்தர்களும் கூறி இருக்கிறார்கள்.

வரலாற்றில் அந்நியர்களின் பல குறிப்புகளில் இருந்தும் தொல் தமிழர்களின் மருத்துவம் சிறப்பான இடம் பெற்றிருந்தது தெரிய வருகிறது. சுமார் 2லட்சம் தாள் ஏடுகளில் இந்த வரலாறு புதைந்து கிடக்கிறது. அத்தனையும் ஐரோப்பிய நாடுகளில் கிடைக்கிறது. முக்கியமாக ஜெர்மனியில் இவை அதிகம் உள்ளன. அவைகளை முழுவதும் ஆராய்ந்து முனைவர் மோகனசுந்தரம் என்பவர் பல அரிய செய்திகளை வெளியிட்டிருக்கிறார்.

தமிழர்களின் இரச வைத்தியத்தை அயல் நாட்டார் குறிப்புகளில் புகழ்ந்து எழுதாவிட்டாலும் 400 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் நாட்டில் இரசத்தை வைத்தியத்தில் பயன்படுத்தியதைப் பதிவு செய்திருக்கிறார்கள். ஐரோப்பியரைப் பரங்கியர் என்று தமிழர் அழைத்தனர். அண்மையில் ஒரு ஆய்வுக்கட்டுரை 17-18 நூற்றாண்டின் காலனிய ஆட்சியில் தமிழ் மருத்துவம் பற்றிப்படித்தேன். .

ஐரோப்பியர்கள் அநேகர் இந்தியா வந்தபோது சிபிலிஸ் போன்ற பால்வினை நோயால் பாதிக்கப்பட்டிருந்தனர். மேக நோய் ,கிரந்தி நோய் அதிகம் பாதித்து இருந்ததால் அவர்களைத் தமிழர்கள் பரங்கியர் என்று அழைத்திருக்கிறார்கள் என்று அதில் கூறப்பட்டிருந்தது.

1711- 1791 வரை வாழ்ந்த ஜெகன் ஃபிலிப் ஃபாபிரிக்ஸ் என்பவர் எழுதிய புகழ்பெற்ற தமிழ் -ஆங்கில நிகண்டில் கூட பரங்கி எனும் சொல்லுக்கு சிபிலிஸ் என்று நேரடியாக் குறிப்பிட்டிருக்கிறார். எனவே சிபிலிஸ் நோய் பாதித்தவரை அப்போது பரங்கியர் என்று அழைக்கும் வழக்கம் இருந்திருக்கிறது. அப்போது இது போன்ற நோய்களுக்கு உலகில் வேறு எங்கும் மருந்து இல்லாமல் இருந்தது.

டேனிஷ்காரர்கள் தரங்கம் பாடியை அடைந்தபோது அங்கிருந்த தமிழ் வைத்தியர்கள் மிக எளிதில் இது போன்ற கொடிய நோய்களை ஒரு வாரத்தில் குணப்படுத்துவதைக் கண்டு அதிசயித்தனர்.

சிபிலிஸ் எனும் பால்வினை நோய் 17,18,19,20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை மக்களை அச்சுறுத்தி வந்த ஒரு கொடிய நோய். பென்சிலின் மருந்து கண்டுபிடிக்கும் வரை அதற்கு மருந்து இல்லாமல் இருந்தது. அப்போது கைகொடுத்தது தமிழகத்தின் தரங்கம் பாடியில் இருந்த தமிழ்மருத்துவர்களின் மருந்துகள் மட்டுமே.

அதன் தொடர்ச்சி தான் எய்ட்ஸ் என்று கருதப்படுகிறது.

தமிழ் நாட்டின் தரங்கம்பாடியில் இருந்த தமிழ் வைத்தியர்கள் இந்தக்கொடிய நோயை 7 நாட்களில் சில மருந்து உருண்டைகள் கொடுத்து குணப்படுத்தியதை தங்கள் அரசு அலுவலகக்குறிப்பில் பதிவு செய்திருக்கிறார்கள்.

இந்த நோயின் தீர்வை தமிழ் மருத்துவர்களிடம் இருந்து அறிந்துகொள்ள பல ஐரோப்பிய வைத்தியர்கள் தரங்கம் பாடி வந்திருக்கின்றனர். அவர்களின் பெயர்களும் வருகைபுரிந்த ஆண்டுகளும் அவர்களின் அலுவலக குறிப்புகளில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

அவர்கள் இங்குள்ள தமிழ் மருத்துவர்கள் மூலம் இனம் கண்டுகொண்ட மூலிகைகள் 20,000 மேல் இருக்கும். அவர்கள் நாட்டிற்கு கொண்டுபோன ஓலைச் சுவடிகளுக்குக் கணக்கு இல்லை.

தரங்கம் பாடித் தமிழ் மருத்துவர்கள் இந்தக் கொடிய பால்வினை நோயை மிக எளிதில் பாதரசம் எனும் இரசத்தைப் பயன்படுத்திக் குணமாக்கி இருக்கிறார்கள்.

பாதரசம் இந்தியாவில் அதிகம் கிடைப்பதில்லை. இத்தகைய மருந்தோ பல நூறு ஆண்டுகளாக வழக்கில் உள்ளதாக தமிழ் வைத்தியர்கள் கூறியிருக்கிறார்கள். தமிழ் மருத்துவர்கள் ரசம் எனும் பாஷாண வகைகளை நெடுங்காலமாகச் சீன நாடுகளில் இருந்து பெற்றிருக்கின்றனர்.

கொடிய நவபாஷாணம் எனும் வீரம் பூரம் போன்றவற்றையும் சீனாவில் இருந்து பெற்று அவைகளை மருந்தாக மாற்றி மக்கள் பயனடைய செய்திருக்கிறார்கள்.

ஐரோப்பிய வணிகர்கள் தங்கள் நாடுகளில் இருந்து கொண்டுவந்த பாதரசங்களை தமிழநாட்டு வைத்தியர்களுக்குக் கொடுத்து அவர்களிடம் இருந்து மருந்துகள் மற்றும் மூலிகை ரகசியங்கள் அடங்கிய ஓலைச் சுவடிகளை பெற்றுச் சென்றதாக அவர்களே குறிப்பு எழுதி வைத்திருக்கிறார்கள்.

The Medical Skills of the Malabar Doctors in Tranquebar, India, as Recorded by Surgeon T L F Folly, 1798 என்பது ஐரோப்பிய டேனிஷ் காரர்களின் பதிவாகும்.

1620 முதல் 1848 வரை பல டேனிஷ் காலனி கோட்டைகள் கிடங்குகள் இந்தியாவில் பல பகுதியில் இருந்தன. அதில் அவர்கள் தரங்கம்பாடியை முக்கியமானதாகக் கருதினர். ஃபாலி (Folly) கி.பி.1790 இல் எழுதிய குறிப்பில் 200 ஐரோப்பியர் உட்பட சுமார் 3000 தமிழர்கள் தரங்கம்பாடிக் கோட்டைக்குள் வாழ்ந்ததாகக் குறிப்பிடுகிறார். 1790 இல் ஒரு அதிகாரப்பூர்வக் கணக்கெடுப்பு நடந்ததாகவும் அதன் படி தரங்கம்பாடியில் வாழ்ந்த 3000 மக்களில் தமிழ் மருத்துவம் செய்த நாவிதர் எனப்படுவோரை நாய்டேன் (Nauiden) வெள்ளாளா என்று குறிப்பிடுகிறார். அவர் குறிப்பிடும் 8 மருத்துவப் பிரிவுகளில் 6 பேர் பிற சாதியினர் 2 பேர் நாவிதர் இருந்தனர். மேலும் மூன்று கிருத்துவ மருத்துவர்கள் இருந்ததாகவும் அதில் இருவர் நாவிதர் ஒருவர் வடுக சாதி எனவும் மேலும் ஒரு முஸ்லீம் மருத்துவரும் இருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். மொத்தமாக 10 மருத்துவர்கள் அப்போது வாழ்ந்ததாக அவர்களின் குறிப்புகள் கூறுகின்றன. இது தவிர ஆறு ஐரோப்பிய மருத்துவர்களும் அப்போது அங்கே பணி புரிந்திருக்கிறார்கள் .அவர்களும் தாங்கள் கேட்டதையும் பார்த்ததையும் தமிழ் மருத்துவத்தைப்பற்றியும் இரச வைத்தியத்தைப்பற்றியும் குறிப்பு எழுதி இருந்திருக்கிறார்கள். மேலும் கட்டுப் போடுபவர்கள் எலும்பு முறிவு சரி செய்பவர்கள் வர்மம் பயின்றவர்கள் என்று பல மருத்துவத் தொழிலாளர்களும் அப்போது வாழ்ந்திருக்கிறார்கள்.

கி.பி.1790 இல் நான்கு கம்பெனி எனும் சுமார் 360 சிப்பாய்கள் கொண்ட இராணுவமும் அங்கே இருந்திருக்கிறது. அவர்களுக்கான மருத்துவத்தை அங்கிருந்த ஐரோப்பிய மருத்துவர்கள்ஆறு பேர் பார்த்துக்கொண்டனர்.

ஐரோப்பியர் மட்டும் கொண்ட ஒரு சிறிய படையும் அங்கே இருந்திருக்கிறது. அப்போதைய (1670 - 1770) ஐரோப்பிய மருத்துவர்கள் இங்கிருந்த தமிழ் மருத்துவர்களை அவர்களின் மருத்துவ முறைகளை அறிவியல் பூர்வமானது என்று ஏற்றுக்கொள்ளவில்லை.

அதே காலகட்டத்தில் தான் ஐரோப்பிய அலோபதி மருத்துவமும் வளரத் தொடங்கியது.

அவர்கள் குறிப்பில் இருந்து அறியும் செய்திகள் அப்போது இங்கிருந்த தமிழ் மருத்துவர்கள் மூலம் பால்வினை நோய்கள் இரச மருந்துகள் மூலம் நீக்கப்பட்டது. அதே சமயம் இரசம் எனும் விஷம் தமிழர்களால் மருத்துவத்தில் அதிகம் பயன்படுத்தப்பட்டது. அக்காலகட்டத்தில் ரசம் பற்றிய நிறைய நூல்கள் தமிழர்களிடம் இருந்துள்ளன.

Folly's text clearly demonstrates this attitude. On one hand, he sees the "Malabar" (Tamil) doctors as superstitious quacks with very little knowledge of medicine and none at all of surgery, on the other, he is very eager to find the precise textual sources for their metallic drugs, possibly in order to find a better treatment for venereal diseases (particularly syphilis) என்பது அந்த குறிப்பின் ஒரு பகுதியாகும்.

எனவே சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்வரை தமிழ் நாட்டின் பல பகுதிகளில் இரச வீரிய மருத்துவ முறைகளும் தங்கம், தாமிரம் இரும்பு என்று பல உலோகங்களையும்

உடல் வலிமைக்குப் பயன்படுத்தினர். மேலும் ,வீரம் பூரம் போன்ற 64 வகை பாடாணங்களையும் உடல்நலம் பயக்கும் மருந்துகளாக ஆக்கும் முறைகளும் தமிழ் மருத்துவர்கள் மத்தியில் இருந்துள்ளது.

1) முனைவர் இர. வாசுதேவன் எழுதிய இரச இராச சிந்தாமணி நூல்

2. Subba Reddy D.S.V., 'Dutch Writings of 16th Century on Indian Drugs', in Bulletin of the Institute of History of Medicine, Vol. I, No.3, Hyderabad, October 197 1, pp 135- 140.27

3.Subba Reddy, D.S.V, 'A Forgotten Chapter in the History of Syphil is in India in 16th Century' in Journal- Bulletin of the Institute of History of Medicine, Vol. ll, No.2, Hyderabad, April 1972, pp.94-97.

சோழர் கால ஓவியங்கள் - 9

மாரிராஜன்
சோழர் வரலாற்று ஆய்வுச் சங்கம் - சென்னை.

கடந்த பதிவின் தொடர்ச்சியாக தில்லை பொன்னம்பலத்தில் ஆடும் ஆடவல்லானை இராஜராஜர் தனது தேவியர்களுடன் வணங்கும் காட்சியினை எடுத்துரைக்கும் ஓவியப்பகுதிகள். கடந்த பதிவில் முழுமையாகப் பார்த்த ஓவியத்தை பகுதி பகுதியாகப் பிரித்து பார்க்கிறோம்.

தில்லைக் கோவில்

தில்லை பொன்னம்பலம். தங்க ஓடுகள் வேயப்பட்ட கூரையுடனும் 9 கலசங்களுடனும் இருக்கிறது. முகமண்டபம் 7 கலசங்களுடன் அமைந்துள்ளது. பொன்னம்பலத்தின் நடுவில் ஆடவல்லான் நடனமாடுகிளார். தலையில் கொக்கிறகுகள், ஊமத்தம்பூ அலங்கரிக்க, ஒன்பது சடைகள் விரிந்து , அபய முத்திரைக் காட்டும் கரம் ஒன்றில் பாம்பு படம் எடுக்க, வலது மேற்கரத்தில் உடுக்கையும், இடமேற்கரத்தில் தீயகலும், இடக்கரம் மார்புக்கு குறுக்காக நீண்டு தூக்கியத் திருவடிகளுடன் தன் ஆட்டத்தைத் துவக்குகிறார்.

ஆடவல்லானை வணங்கும் பொதுமக்கள்.

பாதத்தின் கீழ் முயலகனும், அருகே தில்லைக்காளியின் ஆட்டமும், பாதத்தின் ஒரு புறம் காரைக்கால் அம்மையார் பேய் வடிவில் தாளமிட்டவாறும் ஓவியக்

காட்சிகள் உள்ளன..முகமண்டபத்தில் பெரியகொண்டை தாடியுடன் இராஜராஜன் தனது மூன்று தேவியர்களுடன் நின்று ஆடவல்லானை வழிபாடுகிறார்.மண்டபத்தைச் சுற்றி இராஜராஜனின் மெய்க்காவல் வீரர்கள்.கழுத்துப்பட்டியுடன் மேல்சட்டை அணிந்து கையில் கோலுடன் இருக்கிறார்கள்.

அம்பலத்து வாயிலில் காவலர்கள்.


இராஜராஜர் - தேவியர்கள்.

ஆடவல்லான் என்னும் நடராஜர்.

அரசகுலப் பெண்கள் - பொதுமக்கள்.


ஓவியத்தின் முழுமையானக் காட்சிகள்.

அம்பலத்து வாயிலில் சிவாச்சாரியார்கள் காணப்படுகிறார்கள். பொன்னம்பலத்தின் முன் உள்ள முக மண்டபத்தில்.. மண்டப வாயிலில் அரசனின் மெய்க்காவல் வீரர்கள் உள்ளனர். முகமண்டபத்துக்கு சற்று கீழே... கூப்பிய கரங்களுடன் ஆடவல்லானை வணங்கும் பொதுமக்கள் இருக்கிறார்கள்.ஓவியத்தின் மேலே அமர்ந்த நிலையில் அரசகுலப் பெண்கள் உள்ளனர். இடது மேல்பக்கம். அமர்ந்த நிலையில் சிவாச்சாரியார்கள் இருக்கிறார்கள். கோவில் வாயில் மற்றும் வாயில் காப்பாளர்கள் உள்ளனர். தில்லைக் கோவிலின் முன் கோபுரம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது

பொதுமக்கள் வரிசையில் நின்று உள்ளே வருவதும், வழிபடுவதுமானக் காட்சிகளும் வரையப்படுள்ளன.

உளவியல் நோக்கில் கூனி

முனைவர் சு.வினோத்

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி, சிவகாசி.
vinodhanjac@gmail.com Ph: 94438 69129

காப்பியப் பாத்திரங்களுக்குக் காப்பிய ஆசிரியரால் வழங்கப்படும் பெயர்கள் மேலோட்டமாக அவற்றின் உளப் பண்பை வெளிப்படுத்துகின்றன. கூடுதலாக அப்பாத்திரங்களின் பேச்சுஇ சிந்தனைஇ செயல் போன்றவை அவற்றின் ஆழமான உளப் பண்புகளைப் புலப்படுத்துகின்றன.

தேர்ந்த காப்பிய ஆசிரியரால் படைக்கப்பெற்ற பாத்திரங்களின் பேச்சு, சிந்தனை மற்றும் அவற்றின் செயல்கள் உளவியல் அறிஞர்கள் குறிப்பிடும் உண்மை மாந்தர் உளவியலுக்கு நிகராகத் திகழ்கின்றன. அத்தகைய உளவியல் தன்மை இல்லாது எந்த ஒரு பாத்திரத்தையும் இலக்கிய ஆசிரியர்கள் படைப்பதில்லை. அவ்வகையில் மந்தரை என்னும் பாத்திரத்தினை உளவியல் நுட்பம் நிறைந்ததாகக் கம்பர் படைத்துள்ளார்.

பெயரும் உளவியலும்

காண்டங்களுக்குக் கதைத் தொடர்புடைய இடப் பெயர்களைச் சூட்டியுள்ள (அயோத்தியா காண்டம், ஆரண்ய காண்டம், கிட்கிந்தா காண்டம்) கம்பர் படலங்களுக்குப் பெரும்பாலும் பாத்திரங்களின் பெயர்களைச் சூட்டியுள்ளார். அப்படலங்களில் முக்கியத்துவம் பெறும் பாத்திரப் பெயர்களில் படலப் பெயர்கள் அமையக் காணலாம். சான்றாக தாடகை வதைப் படலம், அகலிகைப் படலம், பரசுராமப்படலம், குகப் படலம், விராதன் வதைப் படலம், சடாயுகாண் படலம் போன்றவற்றைச் சுட்டலாம்.

காப்பியத்தில் இடம்பெறும் உடன்பாட்டு மனநிலை அல்லது எதிர்மறை மனநிலைப் பாத்திரங்களாக இருப்பினும் செயல்பாடுகள் மேலோங்கிக் கதைப் போக்கிற்கு உதவியாக இருக்கும் பட்சத்தில் அப்பாத்திரங்களின் பெயர்களை அப்படலங்களுக்குச் சூட்டியுள்ளனர். அவ்வகையில், 'மந்தரை சூழ்ச்சிப் படலமானது' மந்தரை என்னும் பாத்திரத்தின் செயல்பாடுகள் காப்பியத்திற்கு ஆற்றும் முழுப் பங்களிப்பையும் வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

கைகேயியின் பணிப்பெண்ணாகக் காப்பியத்தில் அறிமுகமாகும் மந்தரை கைகேயியை மனமாற்றம் செய்த கதையைச் சொல்லும் பகுதி என்பதை வெளிப்படுத்தும் வகையில் 'மந்தரை சூழ்ச்சிப் படலம்' என்னும் பெயர் கம்பரால் சூட்டப்பட்டுள்ளது.

பெயர் உளவியல்

'மந்தரா' என்ற வட சொல்லின் திரிபான 'மந்தரை' என்பதற்கு 'மனத்தைக் கலக்குபவள்' என்று காரணப் பொருள் உண்டு. வால்மீகி பயன்படுத்தியதைப் போன்றே கம்பரும் இப்பெயரைப் பயன்படுத்தியுள்ளார். இருப்பினும் 'கூனி' என்ற பெயரையே கம்பர் பல இடங்களில் பயன்படுத்துகின்றார்.

'திருப்பாற்கடலை 'மந்தரை' என்ற பெயர் கொண்ட மலையை மத்தாகக் கொண்டு கடைந்த போது அமுதமும் நஞ்சும் வெளிப்பட்டன. அதுபோலப் பால் போல் தூய்மையான கைகேயியின் மனத்தை 'மந்தரை' என்ற பணிப்பெண் கடைந்து கரைக்கும் போது நல்லனவும் வந்தன் தீயனவும் வெளிப்பட்டன. ஆனால் அவையெல்லாம் ஒன்று சேர்ந்து 'இராம காதையாக வடிவெடுக்கத் துணை செய்தன.'1 (ந.சுப்புரெட்டியார், கம்பன் படைத்த சிறுபாத்திரங்கள், ப.39) என்று ந.சுப்புரெட்டியார் கூறுகிறார். இக்கருத்தின் அடிப்படையில் மந்தரை என்னும் பெயரை அடிப்படையாகக் கொண்ட கூனியின் உளவியல் காப்பியத்தில் வெளிப்படக் காணலாம்.

கூனி அறிமுகம்

மந்தரையைச் 'சூழ்ச்சிப் படலத்தில்' அறிமுகம் செய்யும் முன்னர் அயோத்தியா காண்டத்துக் கடவுள் வாழ்த்துப் பாடலிலேயே கம்பர் அறிமுகம் செய்துவிடுகிறார்.

"கூனும் சிறிய கோத்தாயும் கொடுமை இழைப்பக் கோல் துறந்து
கானும் கடலும் கடந்து இமையோர் இடுக்கண் தீர்த்த கழல் வேந்தே"
(அயோ.ம.ப.1)

என்பது கூனி அறிமுகமாகும் பாடல் அடிகள். இதில், 'கூனும்' என்பது கூனியின் ஆகுபெயராகும். அதிலும் அஃறிணையில் சுட்டப்பட்டுள்ளது. மந்தரையின் முறையான அறிமுகத்தைக் கம்பர் மந்தரைச் சூழ்ச்சிப் படலத்தில்,

"... இன்னல்செய் இராவணன் இழைத்த தீமைபோல்
துன்னருங் கொடுமனக் கூனி தோன்றினாள்" (அயோ.ம.சூ.ப.39)

என்று காட்சிப்படுத்துகிறார். இங்கு குறிப்பிடப்படும் 'தோன்றினாள்' என்பதை நோக்குமிடத்து மனித இயல்புக்கு அப்பாற்பட்ட அசாதாரணத் தன்மையை

விளக்குவதற்காகவும் மின்னலைப் போல மிகப்பெரிய மாற்றத்தை நிகழ்த்தி மறைகின்ற காரணத்தாலும் 'தோன்றினாள்' என்ற சொல்லால் கம்பர் அறிமுகம் செய்ததாகக் கருத இடமுள்ளது.

'கூன்' என்ற சொல் உடல் ஊனம் சார்ந்தது. ஆனால் இப்பெயர்ச் சுட்டலைக் கம்பர் உடல்குறைபாடு காரணமாகப் அல்லாமல் மனம் சார்ந்த தன்மையைக் குறிப்பிடவே பயன்படுத்துகின்றார். 'கொடு மனக் கூனி' என்றே கம்பர் கூனியை அறிமுகம் செய்கிறார். இதில் உள்ளம் வளைந்த தன்மையைக் குறிப்பிடுவதன் மூலம் அவள் சார்ந்த உளவியலையும் அறிமுகம் செய்கிறார். இதனையும் பெயர் சார்ந்த உளவியலாகக் கொள்ளலாம்.

கம்பன் தன் காப்பியத்தில் எந்தப் பாத்திரத்தையும் முற்றும் முழுதாகத் தீய குணம் கொண்டதாகப் படைக்கவில்லை. எனினும் மந்தரையை மட்டும் முழுக்கத் தீய பாத்திரமாக நினைக்கும் வண்ணம் படைத்துள்ளார் என்றே தோன்றுகிறது. சான்றாக 'காலக் கோள் அனாள்', 'வெவ்விடம் அனையவள்', 'சூழ்ந்த தீவினை நிகர் கூனி', 'கொடிய கூனி', 'வேதனைக் கூனி', 'தீய மந்தரை', 'உள்ளமும் கோடிய கொடியாள்'. என்றவாறு கூனியைச் சுட்ட பல சொல்லாட்சிகளைப் கம்பர் பயன்படுத்தியுள்ளதைக் குறிப்பிடலாம்.

கூனியின் தோற்றம் சொல்லும் உளவியல்

ஒருவரது முகத் தோற்றம் அவரது உளநிலையை எடுத்துக்காட்டி விடும் என்பதால் ஒருவரது முகம் உள்ளிட்ட உடல் சார்ந்த வெளிப்பாடுகளை 'உடல் மொழி' *(Body language)* எனக் குறிப்பிடுவர்.

இராமன் முடிசூடவிருப்பதை அறிந்த அயோத்தி நகர மக்களிடம் ஆடல், பாடல், களிப்புகள் வெளிப்பட்டன. இத்தகைய மகிழ்ச்சிக்கு எதிரான தன்மையுடையவளாகக் கூனியைக் கம்பர்,

> *"தோன்றிய கூனியும் துடிக்கும் நெஞ்சினள்*
> *ஊன்றிய வெகுளியாள் உளைக்கும் உள்ளத்தாள்*
> *கான்று எரி நயனத்தாள் கலிக்குஞ் சொல்லினாள்*
> *மூன்று உலகினுக்கும் ஓர் இடுக்கண் மூட்டுவாள்" (அயோ.ம.சூ.ப.40)*

என்றவாறு அறிமுகம் செய்கின்றார். இதில், கூனியின் உள்ளம் அவள் உடலில் வெளிப்படுகிறது.

1. துடிக்கும் நெஞ்சு
2. நிலை கொண்ட வெகுளி
3. நெருப்பு போல் எரியும் கண்கள்

என மூன்று உலகிற்கும் துன்பம் செய்பவள் போல் கூனி தோன்றுவதாகக் கூறும் நிலையில் அவளின் தோற்றம் சார்ந்த உளவியலைக் கம்பர் சுட்டுகின்றார். ஊன்றிய வெகுளி அதாவது 'நிலைகொண்ட வெகுளி' என்னும் இடத்து அவளது கோபம் சார் உளநிலையை அறிந்துகொள்ளலாம். யாவரின் மகிழ்ச்சியையும் விரும்பாத உளப் பண்பின் வெளிப்பாடாக இத்தோற்றத்தைக் கருதலாம்.

கூனியின் மெய்ப்பாட்டு உளவியல்

ஒரு பாத்திரத்தின் நுட்பமான மன உணர்வினை வெளிப்படுத்துவதாக மெய்ப்பாடு அமைகிறது. தொல்காப்பியர் சுட்டும் எண்வகை மெய்ப்பாடுகளில் கூனியிடம் 'வெகுளி' என்ற ஒற்றை மெய்ப்பாடு மட்டுமே காப்பியத்தில் வெளிப்படக் காணலாம்.

கூனியின் உள்ளத்திலிருந்து உருவாகி உடலில் வெளிப்பட்ட மிகுதியான கோபத்தை மூன்று உலகிற்கும் துன்பம் விளைவிக்கும் தன்மை கொண்டதாகக் கம்பர் வருணிக்கிறார். இராமன் மேல் கொண்ட கோபத்தைக் காட்டும் முகமாக மடித்த வாயை உடையவளாகக் கூனி காணப்பட்டதை,

> *"தொண்டைவாய்க் கேகயன் தோகை கோயில் மேல்*
> *மண்டினாள் வெகுளியின் மடித்த வாயினள்" (அயோ.ம.சூ.ப.41)*

என்று அவள் உடல்மொழி வழிக் கம்பர் சுட்டுகின்றார்.

காப்பியத்தில் ஒரே ஒரு இடத்தில் இடம்பெறும் கூனி எனும் பாத்திரம் ஒரே ஒரு மெய்ப்பாட்டை மட்டும் கைக் கொண்டிருப்பதன் வழி அதன் உளத்தன்மையை அறியமுடிகிறது.

கூனியின் வெகுளியானது கைகேயின் மீது நேரடியாகவும் இராமன் மீது மறைமுகமாகவும் பாய்கிறது. இதனை,

> ''ஆடவர் நகையுற ஆண்மை மாசுறத்
> தாடகை எனும்பெயர்த் தையலாள் படக்
> கோடிய வரிசிலை இராமன் கோமுடி
> சூடுவன் நாளை வாழ்விது எனச் சொல்லினாள்'' (அயோ.ம.சூ.ப.50)

என்ற பாடல் தெளிவுறுத்துகிறது. இராமனின் கன்னிப் போரைக் கூனி எள்ளல் தொனியுடன் குறிப்பிட்டு அவன் வீரத்தை இழிவாக உரைக்கின்றாள். இத்தகைய இராமன் முடிசூடுவதால் கோசலைக்குத்தான் நல்ல வாழ்க்கை அமையுமே தவிர கைகேயிக்குத் துன்ப வாழ்க்கையே அமையும் என்று உரைக்கையில் அவள் உள்ளத்தில் இருந்த கோபம் அங்கத்தில் வெளிப்படுகிறது.

இராமன் முடிசூடுவதில் தனக்கு விருப்பமில்லை என்பதைக் கூனி மறைமுகமாக வெளிப்படுத்துகிறாள். அதை உணர்ந்து கொள்ளாத கைகேயி தன் மகன் இராமன் முடிசூடவிருப்பதை முதன்முதலாகக் கூறியதன் பொருட்டுக் கூனிக்கு இரத்தின மாலையைப் பரிசாக வழங்குகின்றாள். தன் விருப்பத்திற்கு மாறாக கைகேயியின் உள்ளம் இருப்பதை அறிந்த கூனி, கண்கள் சிவந்து, கடுமைப்பட மொழிந்து, பெருமூச்செறிந்து, அழுது புலம்பி கைகேயி தனக்குப் பரிசாக வழங்கிய மாலையை நிலம் குழிபட எறிகின்றாள். கூனியிடத்து இடம்பெற்ற வெகுளி எனும் அம்மெய்ப்பாடு இங்கு செயல்வடிவம் பெற்றதைக் கம்பர்,

> ''தெழித்தனள் உரப்பினள் சிறுகண் தீயுக
> விழித்தனள் வைதனள் வெய்து உயிர்த்தனள்
> அழித்தனள் அழுதனள் அம்பொன் மாலையால்
> குழித்தனள் நிலத்தையக் கொடிய கூனியே'' (அயோ.ம.சூ.ப.53)

என்ற பாடல் வழிக் காட்சிப்படுத்துகிறார். எதிர்காலத்தில் தனக்கு நடக்கவிருப்பதை அறிந்து கொள்ளாதவளாகக் கைகேயி இருப்பதாகக் கருதி,

> ''…… வெகுண்டு நோக்கியே
> பேதைநீ பேதின்றிப் பிறந்த சேயொடு
> மாதுயர் படுக நான் நெடிது உன் மாற்றவள்
> தாதியர்க்கு ஆட்செயத் தரிக்கிலேன்...'' (அயோ.ம.சூ.ப.54)

என்று கூனி வெகுண்டு உரைக்கின்றாள். இதில், கைகேயியை அறிவு இல்லாத பெண் என்றும்; இராமன் நாடாளும் நிலையில் கோசலைக்குக் கைகேயி பணிப்பெண்ணாக இருக்கும் நிலை ஏற்படும். எனில், கோசலையின் பணிப் பெண்ணுக்குத் தான் பணிப்பெண் ஆக முடியாது என்றும் கூறுவதன் வழிக் கூனி தனது எதிர்காலம் குறித்தக் கோபத்தின் காரணத்தை உரைக்கின்றாள்.

தசரதன் விருப்பப்படி இராமன் நாடாண்டால் அவனோடு இணைந்து இருக்கும் இலக்குவனும் பயன் பெறுவான். ஆனால் பரதனும் சத்ருக்கனும் பாதிப்படைவர் என்பதைப் பற்றிக் கவலைப்படாத கைகேயி அவர்கள் இருவரையும் தவம் செய்ய இப்பொழுதே கானகத்திற்கு அனுப்பிவிடுவது நல்லது என்று கோபம் மொழிகிறாள்.

> *"சரதம் இப் புவியெலாந் தம்பி யோடுமிவ்*
> *வரதனே காக்குமேல் வரம்பில் காலமும்*
> *பரதனும் இளவலும் பதியின் நீங்கிப்போய்*
> *விரதமா தவஞ் செயவிடுதல் நன்றென்றாள்" (அயோ.ம.சூ.ப.57)*

என்ற பாடலில் உணரலாம்.

கூனியிடம் காணப்பட்ட கோப வெளிப்பாட்டிற்கு,

1. நனவிலியில் பதிந்துள்ள இராமன் மீதான பழைய கோபம்
2. பட்டத்தரசியின் தாதி என்ற நிலையில் ஏற்பட உள்ள சரிவு
3. தன் இன்ப வாழ்வு இழப்பின் ஏக்கம்
4. முதுமை காரணமாக எழுந்த சலிப்பு

போன்றவற்றைக் காரணங்களாகக் கருதலாம்.

கைகேயியின் புறவடிவம் போன்ற கூனி

காப்பியத்தில் பிற பாத்திரங்கள் யாவரும் கூனியுடன் பேசுவதாகக் குறிப்பு இல்லை. கூனியும் பிறருடன் பேசாதாகக் குறிப்பு ஏதும் இல்லை. இவ்விருநிலை கொண்டு நோக்கக் கூனியைத் 'தனிப்பாத்திரம்' என்பதினும் 'கைகேயியின் புறத்தே நிகழும் அவளது மன வெளிப்பாடு எனக் கொள்ள இடம் உள்ளது. இத்தகைய உளவியல் நுட்பம் காரணமாகவே 'கூனி தோன்றினாள்' என்ற சொல்லாட்சியைக் கம்பர் பயன்படுத்தியுள்ளதாகக் கருதலாம்.

ஷேக்ஸ்பியரின் 'மெக்பத்' நாடகத்தில் மூன்று சூனியக்காரிகள் *(three witches)* தோன்றி, மெக்பத் மனத்தை மாற்றி, அரசனாகும் எண்ணத்தைத் தூண்டி,

அரசனைக் கொலை செய்யும்படிச் செய்கின்றனர். இது நாடகத்தில் கூனியக்காரிகளால் நிகழ்ந்த வெளித்தூண்டல் போல் காட்டப்பட்டாலும் மெக்பத்தின் மனதில் மன்னனாகும் எண்ணம் இருந்திருக்க வேண்டும் என்பதே உளவியல் உண்மை. இதனைக் கம்பனில் ஒப்பிட்டு நோக்கின் மந்தரை = மூன்று கூனியக்காரிகள், கைகேயி = மெக்பத், மன்னன் = தசரதன். மெக்பத் மனத்தில் இருந்த மன்னனாகும் ஆசை போன்றே கைகேயி மனத்திலும் பரதன் மன்னனாக வேண்டும் என்ற ஆசை அடக்கி வைக்கப்பட்டிருந்திருக்க வேண்டும். அவ்வாசை உடைய கைகேயி மனமே மந்தரை எனும் புறவடிவாகத் தோன்றி உரை நிகழ்த்துவதாகக் கருத இடம் உள்ளது. பரதன் அரசனாக வேண்டும் என்று கைகேயியிடம் இருந்த ஆழ்மன ஆசையே கூனி என்னும் பாத்திர வடிவில் காப்பியத்தில் வெளிப்பட்டுள்ளதாகக் கருதலாம்.

பரதன் நாடாளுவதில் கூனியைக் காட்டிலும் அதிக பயன் அடையக்கூடிய வாய்ப்பு கைகேயிக்கே உண்டு என்ற நிலையில் கூனியைக் கைகேயியின் ஆசை சார்ந்த புறமனமாகக் கொள்ள முடியும்.

கைகேயி தன் விருப்பத்திற்கு ஆட்பட்ட நிலையில் அவளை வல்லள் என்று கூனி பாராட்டுமிடத்தும் *(அயோ.ம.சூ.ப.80)* சம்பராசுரனை வென்ற போரில் தயரதனுக்கு உதவிய கைகேயிக்குக் கிடைத்த இரண்டு வரங்களைக் கூனி நினைவுபடுத்துமிடத்தும் *(அயோ.ம.சூ.ப.81)* அவ்விரு வரங்களில் ஒன்றின் மூலம் இராமனைப் பதினான்கு ஆண்டுகள் காட்டிற்கு அனுப்புமாறும் மற்றொரு வரத்தால் பரதனுக்கு ஆட்சியைப் பெறுமாறும் கூனி கூறும் நிலையிலும் *(அயோ.ம.சூ.ப.82)* கைகேயியின் ஆழ்மன ஆசையை வெளிப்படுத்தும் புறமனம் போல் கூனி உரைநிகழ்த்தக் காணலாம்.

கூனியின் நனவிலி மனம்

காப்பியத்தின் ஓரிடத்தில் மட்டும் வெளிப்பட்டாலும் உளவியல் நுட்பம் கொண்டவளாகக் கூனி படைக்கப்பட்டுள்ளாள். கைகேயியுடன் நிகழ்த்தும் உரையாடல்களில் கூனியின் நனவுமனம் வெளிப்படுகிறது. இதற்கு அடிப்படையாக அவளுடைய நனவிலி மனமே அமைகிறது. இதனை,

''பண்டைநா ளிராகவன் பாணி வில்லுமிழ்
உண்டையுண் டதனைத்தன் னுள்ளத் துள்ளுவாள்'' (அயோ.ம.சூ.ப.41)

என்ற பாடலால் உணரமுடிகிறது. இதில், இராமன் குழந்தைப் பருவத்தில் விளையாட்டு வில்லால் மண்ணுருண்டை கொண்டு தன் முதுகில் அடித்ததை எண்ணி இராமனைப் பழிவாங்கத் துடிக்கும் கூனியின் மனநிலை சுட்டப்பட்டுள்ளது. ஃப்ராய்டின் கூற்றுப்படி நனவிலி மனம் என்பது சமூக அங்கீகரிப்பும் ஏற்பும் இல்லாத எண்ணங்களை அடக்குவதால் உருவாகிறது.

அவ்வகையில் இராமனைப் பழிவாங்க எண்ணி அடக்கி வைக்கப்பட்டிருந்த கூனியின் நனவிலி எண்ணங்களே கைகேயியிடம் கூறிய கூற்றுகளின் வாயிலாக வெளிப்பட்டுள்ளன.

இராமனின் சிறுவயது விளையாட்டு காரணமாகத் தன் கூன் முதுகில் அடிபட்ட கூனிக்கு அது உடல் மற்றும் உள்ளத்தில் துன்பத்தை விளைவித்திருக்கலாம். இத்தகைய துன்பத்தைத் தந்த இராமனை ஏழைப் பணிப்பெண்ணான தன்னால் தண்டிக்க முடியவில்லை என்ற கோபமும் இராமன் இளவரசன் என்ற சமூகக் காரணமும் அவளது அந்நேரத்தைய எண்ணத்தைத் தடுத்திருக்கக் கூடும். இவ்வாறு தடைசெய்யப்பட்ட எண்ணமானது நனவிலியாய் படிந்து தக்க தருணத்தில் வெளிப்பட்டதாகக் கருதலாம்.



கூனியின் உளநுட்பம்

கூனி உளவியல் (மனோதத்துவம்) அறிவு பெற்றவளாகவும் கைகேயியின் உள்ளத்தை நன்கு அறிந்தவளாகவும் காப்பியத்தில் இடம்பெறுகின்றாள். "மந்தரை பணிப்பெண்ணாக இருந்தாலும் பொதுவாக மாந்தரின் மனோ தத்துவத்தையும் சிறப்பாக மகளிரின் மனப்பான்மையையும் நன்கு அறிந்தவள். படிப்படியாகக் கைகேயியின் தூய சிந்தையைத் திரிப்பதிலிருந்து இது தெளிவாக வெளிப்படுகின்றது."2 என்ற கருத்தின் துணைகொண்டு கூனியின் உளநுட்பத் திறனை உணரலாம். இவ் உளநுட்பம் சார்ந்த வெளிப்பாட்டை,

''தூண்டும் இன்னலும் வறுமையும் தொடர்தரத் துயரால்
ஈண்டு வந்தனை இரந்தவர்க்கு இருநிதி அவளை
வேண்டி ஈதியோ வெள்குதியோ விம்மல் நோயான்
மாண்டு போதியோ மறுத்தியோ எங்ஙனம் வாழ்தி'' (அயோ.ம.சூ.ப.72)

எனக் கம்பர் எடுத்துக்காட்டியுள்ளார். இதில் கைகேயி பொருள் வேண்டித் தன்னிடம் வருபவர்களுக்குக் கோசலையிடம் கேட்டுப் பெற்றே தர வேண்டிய வறுமைநிலை ஏற்படும் என்றும் அதன் காரணமாகக் கைகேயிக்குத் துன்பமும் இறப்பும் ஏற்படும் என்றும் அவளுடைய உணர்வில் ஒரு பயத்தை ஊட்டுகின்ற வகையில் கூனி உரைக்கின்றாள்.

வறுமை, துன்பம், இறப்பு என்று கைகேயிக்கு ஏற்படவிருப்பதாக வரிசைப்படுத்தும் கூனி படிப்படியாக அவளின் மனவலிமையைக் குறைத்து உணரும்படிச் செய்கின்றாள். இதன் தொடர்ச்சியாக,

''கெடுத்து ஒழிந்தனை உனக்கு அரும் புதல்வனைக் கிளர்நீர்
உடுத்த பாரகம் உடையவன் ஒருமகற்கு எனவே
கொடுத்த பேரரசு அவன்குலக் கோமைந்தர் தமக்கும்
அடுத்த தம்பிக்கும் ஆம்பிறர்க்கு ஆகுமோ'' (அயோ.ம.சூ.ப.76)

என்கிறாள். இதில், பரதனுக்கு அழிவை ஏற்படுத்தும் வகையில் கைகேயியின் செயல்பாடுகள் அமைந்திருப்பதாக உரைத்து நாடு இராமனுக்கு உரியதாகுமானால் வழிவழியாக அவனைச் சார்ந்தவர்களுக்கே உரியதாகும் என்றும் பரதனுக்கு ஆகாது என்றும் உரைக்கின்றாள். 'சொற்சாதுரியம் ஒன்றே கூனி கையாளுகின்ற உத்தி. எதிரியை எங்கே தாக்கினால் வீழ்வான் என்பதை அறிந்து தாக்குகிறாள். பெண் மனதை நன்கு அறிந்து கொண்டு அவளது உறவுகளைக் கொச்சைப்படுத்துகிறாள். பெண் உள்ளம் எதைக் கூறினால் விரைந்து மாறும் என்பதை நன்கு உணர்ந்தவள் மந்தரை'3 என்ற கருத்து வெளிப்படுகிறது. மேலும்,

''நஞ்சு தீர்க்கினும் தீர்கிலாதது நலிந்தென்னைத்
தஞ்சமே உனக்கு உறுபொருள் உணர்த்துகை தவிரேன்
வஞ்சி போலி என்று அடிமிசை வீழ்ந்து உரை வழங்கும்''

(அயோ.ம.சூ.ப.68)

என்றும் உரைக்கின்றாள். இதில் கைகேயியை வஞ்சிக்கொடி போன்றவள் என்றும், தனக்குப் பற்றுக்கோடு போன்றவள் என்றும், அடைக்கலம் தருபவள் என்றும் பலவாறு பாராட்டி, நல்லது சொல்வதிலிருந்து மாறமாட்டேன் என்று உரைத்துக் காலில் விழுகின்றாள்.

ஒருவரைப் பாராட்டி ஒரு செயலை மேற்கொள்ளச் சொல்லும் நிலையில் அப்பாராட்டைப் பெற்றவர் மறுப்பின்றி அச்செயலை ஏற்கக் கூடும். அச்சம், அதிகாரம் ஆகியவற்றைக் காட்டி செயலை மேற்கொள்ளச் சொன்னால் அவர் அதனை மறுத்துவிடக் கூடும். மந்தரை கைகேயிக்கு அச்சம் ஊட்டி தன் எண்ணத்தை நிறைவேற்றக் கருதி தோல்வி அடைந்த பின்னர் அவளைப் பாராட்டியும் தர்க்கரீதியாக விளக்கம் அளித்தும் மீண்டும் தான் எண்ணியதை நிறைவேற்றிக் கொள்ள முயல்கின்றாள். இந்நிலையில்,

"மூத்தவற்கு உரித்து அரசு என்னும் முறைமையின் உலகம்
காத்த மன்னனில் இளையன் அன்றோ கடல்வண்ணன்
ஏத்து நீள்முடி புனைவதற்கு இசைந்தனன் என்றால்
மீத்தரும் செல்வம் பரதனை விலக்குமாறு எவனோ" (அயோ.ம.சூ.ப.69)

என்கிறாள். இதில், மூத்தவர்க்கு அரசு என்றால் தயரதனை விடவும் இராமன் மூத்தவன் அல்லன் என்றும் தயரதன் இராமனுக்கு அரசு தரத் துணிந்தான் என்றால் பரதனுக்கும் அவ்வுரிமை உண்டு என்றவாறு தர்க்கரீதியான விளக்கத்தைக் கூறுகின்றாள். மேலும், இராமன் மீதான கைகேயியின் மன ஈடுபாட்டை மாற்றும் வகையில்,

"அறம் நிரம்பிய அருளுடை அருந்தவர்க் கேனும்
பெறல் அருந் திருப் பெற்றபின் சிந்தனை பிறிதாகும்
மறநினைத்து மைவலிகில ராயினும் மனத்தால்
இறலுறும்படி இயற்றுவர் இடையறா இன்னல்" (அயோ.ம.சூ.ப.70)

எனத் தவ முனிவர்களே ஆயினும் செல்வம் கிடைத்தபின் அவர்களும் கூட மனம் மாறுவர். அவ்வகையில் கைகேயியிடத்து அன்பு கொண்ட இராமனும் அரசாட்சியைப் பெற்றபின் மனம் மாறி தீங்கு செய்ய வாய்ப்பு உள்ளது என்கிறாள்.

இராமனுக்கு அரசு என்றால் கோசலைக்குச் செல்வம் அனைத்தும் முழு உரிமையாகிவிடும். இந்நிலையில் கைகேயி தனக்குத் தேவைப்படும் சிறிதளவு செல்வத்தையும் கோசலையிடம் கேட்டுப்பெற வேண்டிய நிலை எற்படும் என்பதை,

"பரியும் நின்குலப் புதல்வற்கு நினக்கும் இப்படி மேல்
உரியது என் அவளுதவிய ஒருபொருள் அல்லால்" (அயோ.ம.சூ.ப.71)

என்று உரைக்கின்றாள்.

கைகேயியை மனமாற்றம் செய்யக் கருதி கூனி மேற்கொள்ளும் இவ் உரையாடல்கள் அவளது உளநுட்பத்தை உணர்த்துவதாக அமைகின்றன.

கூனியின் சிக்கல் நடத்தை

'மனிதனிடம் ஏற்றுக் கொள்ளல் தன்மை குறைந்து வருவதால்தான் மானுட உறவுகளில் பிரச்சினைகள் அதிகம் வருகிறது.'4 என்பது சிக்கல் நடத்தைகளின் அடிப்படை ஆகும்.

சமூகத்தில் ஏற்படும் சிக்கலுக்குக் காரணமான மனித நடத்தை 'பிரச்சனை நடத்தை' ஆகும். ''வாழ்வில் சிலர் பிறர் நலனை அழிக்கும் முயற்சியில் ஈடுபட்ட வண்ணம் இருப்பதற்கு இந்நடத்தை காரணமாகிறது. இதனை, 'அழிவு செய்யும் நடத்தை (Destructiveness) எதிர்ப்பு நடத்தை (Aggressive Behaviour)''5 என்று இருவகைகளாக உளவியல் அறிஞர் பாகுபடுத்துரைப்பர்.

மேற்கூறிய இரண்டு நடத்தைகளும் கூனியிடம் இடம்பெற்றிருப்பதைக் காணமுடிகிறது.

எதிர்ப்பு நடத்தையும் அழிப்பு நடத்தையும்

சமூக, மனித நடைமுறைகளுக்கு எதிராக மனிதர்கள் மேற்கொள்வது எதிர்ப்பு நடத்தையாகும். இராமனுக்கு முடிசூடவிருந்த சூழ்நிலைக்கு எதிராக தன் நடத்தையைக் கூனி மேற்கொள்கின்றாள். அவளிடம் இடம்பெற்றிருந்த எதிர்ப்பு நடவடிக்கைகளாக,

1. கைகேயிக்குத் துன்பம் ஏற்பட உள்ளதாகக் கூறி அவள் மனத்தை மாற்ற முயன்றது.

2. மனமாற்றம் அடைந்த கைகேயியை வரங்கள் கேட்கத் தூண்டியது

போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவ்வாறு கூனி மேற்கொள்ளும் எதிர்ப்பு நடவடிக்கை தயரதனுக்கு அழிவையும் கைகேயி, இராமன், பரதன் போன்றோருக்குத் துன்பங்களையும் விளைவிக்கின்றது.

கூனியின் இன்ப மனம்

கூனியின் உடல் குறைபாடு காரணமாகப் பிறரிடம் இருந்து கிடைக்க வேண்டிய அன்பும், மதிப்பும் கிடைக்காத காரணத்தால் பிறரைத் துன்புறுத்தி இன்பம் பெறும் பாத்திரமாகச் செயல்படுகிறாள். இம்மனத்தின் அடிப்படையில் அவளுடைய செயல்பாடுகள் அமைகின்றன.

இராமன் முடிசூடவிருப்பது தனக்குத் துன்பமாக அமைந்த நிலையில் கைகேயி இன்பமாக உறங்குவதைப் பார்த்துக் கோபம் கொண்ட கூனி தன்னைப் போன்ற துன்பநிலையை அவளும் அடைய வேண்டுமென விரும்புகின்றாள். இதை,

"அணங்குவாள் விட அராவு அணுகும் எல்லையும்
குணங்கெடாது ஒளிவிரி குளிர்வெண் திங்கள்போல்
பிணங்கு வான் பேரிடர் பிணிக்க நண்ணவும்
உணங்குவாய் அல்லை நீ உறங்குவாய் என்றாள்" (அயோ.ம.சூ.ப.45)

என்ற பாடல் விவரிக்கின்றது.

கைகேயியின் மகனாகப் பரதன் பிறந்ததால் அவன் இருந்தும் இறந்தவனாகவே ஆகிவிடுவான் (அயோ.ம.சூ.ப.56) என்றும், அரசர்கள் வரிசையில் பரதனின் பெயர் இடம்பெறாமல் அவன் இறந்துவிடட்டும் (அயோ.ம.சூ.ப.58) என்றும், இராமன் அரசபதவியை அடைவதால் கைகேயி துன்பக் கடலில் விழப்போவதாகவும் (அயோ.ம.சூ.ப.61) கூனி கூறுகின்றாள். இதனடிப்படையில் நோக்கும் போது கூனி பிறர் துன்பத்தைக் கற்பனை செய்திடும் மனம் உள்ளவளாக இருப்பது புலனாகிறது.

பண்பாட்டு மனம்

ஒருவரிடம் இடம்பெறும் பண்பாட்டு மனமானது உணர்ச்சி வசப்படாத நிலையில் உருவாவதாகும். கூனியிடத்து உணர்ச்சி மேலோங்கிய நிலையில் பண்பாட்டிற்குப் புறம்பான மனநிலையே வெளிப்படுகிறது. இதனால் தனிமனித, சமூக நீதிகளை ஏற்றுக் கொள்ளாமல் மாறுபாடான நிலையில் அவள் செயல்புரிகின்றாள்.

முடிவாக

- *கைகேயியின் நனவிலியில் பரதன் நாடாளவேண்டும் என்ற ஆசை இருந்திருந்ததால் கூனியால் அதைத் தூண்டி வெளிப்படுத்திட முடிந்தது.*

- *மந்தரை என்னும் கூனி பெயருக்கு ஏற்ப மனத்தைக் கலக்குபவளாகவும், மனம் கூனியவளாகவும் செயல்புரிகின்றாள்.*

- *கூனியிடம் வெகுளி மெய்ப்பாடே பெரிதும் இடம்பெற்றுள்ளது. கூனி கைகேயியிடம் வெளிப்படையாகவும் இராமன் மீது மறைமுகமாகவும் வெகுளியை வெளிப்படுத்துகின்றாள்.*

- *காப்பியத்தில் கூனி பிற பாத்திரங்களுடன் பேசாத நிலையில் அவளைக் கைகேயியின் புறத்தே செயல்படும் மனம் என்று கொள்ளவும் இடம் உள்ளது.*

- *கூனியின் செயல்பாடுகளுக்கு அவளின் நனவிலி எண்ணங்களே காரணமாக அமைகின்றன.*

• இராமனின் விளையாட்டினால் துன்புற்ற கூனியின் கோபமே அவளின் நனவிலியாகப் படிந்து தக்க சமயத்தில் வெளிப்பட்டுள்ளது.

• கூனி சிக்கல் நடத்தை கொண்டவளாகத் திகழ்கின்றாள்.

•கூனியின் இன்பமனமானது பிறரைத் துன்புறுத்தி இன்பம் காணும் தன்மையில் அவளிடம் வெளிப்படுகிறது.

குறிப்புகள்

1. ந.சுப்புரெட்டியார், கம்பன் படைத்த சிறுபாத்திரங்கள், ப.39.
2. மேலது, ப.39.
3. த.பரமேஸ்வரி, கம்பராமாயணம் வில்லிபாரதம் என்ற காப்பியங்களில் எதிர்நிலைப் பாத்திரங்கள் ப.20.
4. சோம. நாகலிங்கம், எழுமின் விழிமின், ப.58.
5. அ.அ. ஞானசுந்தரத்தரசு, கம்பனும் உளவியலும், ப.145.

துணை நூல்கள்

1. கோபாலகிருஷ்ணமாச்சாரியார், வை. மு (உ.ஆ)., கம்பராமாயணம், உமா பதிப்பகம், சென்னை, 2006.
2. சுப்புரெட்டியார், ந., கம்பன் படைத்த சிறுபாத்திரங்கள், நாவலர் புத்தக நிலையம், 1979.
3. பரமேஸ்வரி, த., கம்பராமாயணம் வில்லிபாரதம் என்ற காப்பியங்களில் எதிர்நிலைப் பாத்திரங்கள் (முனைவர் பட்ட ஆய்வேடு) , தியாகராசர் கல்லூரி, மதுரை, 1988.
4. நாகலிங்கம், சோம., எழுமின் விழிமின், நிகில் பவுண்டேஷன் வெளியீடு, மதுரை, 2007.
5. ஞானசுந்தரத்தரசு, அ.அ., கம்பனும் உளவியலும், தமிழ்ச்சோலைப் பதிப்பகம், புதுக்கோட்டை, 2001.

மதுரகவி ஆழ்வார்

ஜனக்புரி சீனிவாசன்,
தமிழாசிரியர்(ஓய்வு).

இன்கவியார், ஆழ்வார்க்கடியான் என்றெல்லாம் அழைக்கப்படும் மதுரகவி ஆழ்வார் கி.பி. 9ஆம் நூற்றாண்டில், நம்மாழ்வார் அவதரித்த திருக்குருகூருக்கருகில் உள்ள திருக்கோளூர் என்னும் தலத்தில் அந்தணர்குலத்தில் அவதரித்தவர்.

நித்யசூரிகளின் தலைவனான குமுதனின் அம்சமாக சித்திரைமாத சித்திரைத் திருநாளில் அவதரித்தவர் என்பர்.

எம்பெருமான் திருநாமத்தை இன்கவிகளால் இசைக்கும் ஆற்றல்பெற்றவராதலால் மதுரகவி எனஅழைக்கப்பட்டதாகக்கூறுவர்.

ஒருமுறை வடநாட்டுத் திருத்தலங்களைத் தரிசித்து அயோத்தி நகரில் சரயூ நதியில் நீராடிஎழுந்தபோது ,தென்திசையில் பேரொளி பிரகாசிப்பதைக் கண்டு,அதை நோக்கியே வர அவ்வொளி இறுதியில் திருக்குருகூரில் ஒரு பெரிய புளியமரத்தின் அடியில் இருந்த பொந்துக்குள் அடங்குவதைக் கண்டு ஆச்சரியமுற்றார்.

அப்பொந்திலிருந்துஏதோஒலிஎழும்புவதைக்கேட்டு ஏதோ உயிருள்ள பொருள்தான் இருக்கவேண்டும் எனக்கருதிசிறுகல்லை அப்பொந்துக்குள் எறிய,அங்கிருந்து மீண்டும் மீண்டும் ஒலிப்பதுகேட்டு,உடல்சார்ந்தஉயிர் எதனைஅனுபவித்து எங்கிருக்கும் என்னும்பொருளில் செத்ததன்வயிற்றில் சிறியது பிறந்தால் எத்தைத்தின்று எங்கே கிடக்கும் எனக்கேட்க,அதற்கு அங்கிருந்து அவ்வுடலைச்சார்ந்தவினைப்பயன்காரணமாக அங்கேயே கிடக்கும் என்னும் பொருளில் அத்தைத்தின்று அங்கேயே கிடக்கும் என்ற பதில் வர அருகில் இருந்தவர்மூலமாக நம்மாழ்வார் பொந்துக்குள் யோகநிலையில் இருப்பது கேட்டு அவர்மேன்மையை உணர்ந்து அவரையே தமக்குக் குருவாக இருந்து தன்னை ஏற்றுக்கொள்ள வேண்டினார்.

சடகோபரும்(நம்மாழ்வாரும்)அவரைச் சீடனாக ஏற்று தம் திருவாய் மலர்ந்து தீந்தமிழ்ப் பாசுரங்களையெல்லாம் சொல்லச்சொல்ல மதுரகவி ஆழ்வாரும் அவற்றையெல்லாம் பட்டோலை படுத்தலானார்.

(நம்மாழ்வார் பாசுரங்கள் திருவாக்கிலிருந்து வெளிப்பட்ட காரணத்தால் திருவாய் மொழி என வழங்கப்படுகிறது) நம்மாழ்வாருக்குத் தொண்டு செய்வதையே பேறாகக் கருதி,யசோதைப் பிராட்டியால் கண்ணிநுண் சிறுத்தாம்பினால் கட்டுண்ணப்பட்ட எம்பெருமானைவிடதென்குருகூர் நம்பியாகிய நம்மாழ்வாரின் திருப் பெயரைக் கூறினால் தம் நாவில் அமுதூறுவது போல இருக்கும் எனத்தொடங்கி அவரை மட்டுமே துதித்து ,பயனன்றாகிலும் பாங்கல்லராகிலும் செயல்நன்றாகத் திருத்திப் பணி கொள்ளும் ஆசார்யன் இவரே எனநம்மாழ்வாரிடத்துக் கொண்ட குரு பக்தி காரணமாக, கண்ணிநுண் சிறுத்தாம்பு தொடக்கமாக 11 பாசுரங்கள் பாடி, வேறு எந்தத் தலத்தையும் பாடாது குருபக்தியே சிறந்ததாகக் கொண்டார்.

நம்மாழ்வார் பரமபதம் வகித்தபின் அவரது திருவுருவச்சிலையை திருக்குருகூரில் அமைத்து அவரது பாசுரங்களைப் பாடிப் பரப்பி வந்தார்.

அது பொறுக்காத மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர்கள் பாடல்கள் சங்கப் பலகை ஏறினால்தான் அப்பாடல்கள் சிறந்தபாடல்களாக ஏற்றுக்கொள்ளப் படுமெனக் கூற, மதுரகவி ஆழ்வாரும் நம்மாழ்வாரின் 1102 திருவாய்மொழிப் பாசுரங்களில் ஒன்றான "கண்ணன் கழலிணை" என்னும் ஒரு பாசுரத்தை மட்டும் ஓர் ஓலையில் எழுதி சங்கப்பலகையில் வைக்க உயர்ந்து பிறருடைய பாடல்களைக் கீழே தள்ளியதைக் கண்ட சங்கத்தார் நம்மாழ்வாரின் பெருமையை உணர்ந்து தம் செயலுக்கு வருத்தமும் தெரிவித்ததாகக்

கூறுவர்.நம்மாழ்வாரின் புகழைப் பரப்பியநிலையில் பலகாலம் திருக்குருகூரில் வாழ்ந்து பின்பு திருநாடு அலங்கரித்ததாகக் கூறப்படுகிறது.

காலவெள்ளத்தால் ஆழ்வார் பாசுரங்கள் காணாதுபோயின. பிற்காலத்தில் நாதமுனிகள் மதுரகவி ஆழ்வாரின் கண்ணிநுண் சிறுத்தாம்பு 11 பாசுரங்களையும் 12ஆயிரம் முறை உருவேற்றிச் சேவித்ததால் நம்மாழ்வார் வெளிப்பட்டு தம்முடைய பாசுரங்கள் மட்டுமல்லாமல் மற்ற ஆழ்வார்களுடைய

பாசுரங்களையும் காட்டிக் கொடுக்க நாதமுனிகள் நாலாயிர திவ்யப்பிரபந்தங்களைத் தொகுத்து மேலையகத்தான் கீழையகத்தான் என்னும் மருமக்கள்மூலமாகப் பண்ணிசைத்துப் பாடச்செய்ததாகப் பெரியோர்கூறேவர்.

மதுரகவி ஆழ்வார் நம்மாழ்வார் ஒருவரைமட்டும் குருவாகக் கொண்டு 11 பாசுரங்களைப் பாடி வேறு எந்த திவ்ய தேசப் பெருமாளையும் மங்களாசாசனம் செய்யவில்லை.

இவருடைய குருபக்தி காரணமாக 12ஆழ்வார்களுள் ஒருவராகக் கருதப்பட்டு அவருடைய பாசுரங்கள் நாலாயிர திவ்யப்பிரபந்தத்தில் இடம் பெற்றுள்ளன.

"ஏரார் மதுரகவி இவ்வுலகில் வந்துதித்த
சீராரும் சித்திரையில் சித்திரைநாள் பாருலகில்
மற்றுள்ள ஆழ்வார்கள் வந்துதித்த நாள்களிலும்
உற்றதெமக்கென்று நெஞ்சமேயோர்"

என்றும்,

"வாய்ந்த திருமந்திரத்தின் மத்திமமாம் பதம்போல்
சீர்த்த மதுரகவி செய்கலையை ஆர்த்தபுகழ்

ஆரியர்கள்தாங்கள் அருளிச்செயல் நடுவே சேர்வித்தார் தாற்பரியம் தேர்ந்து" என மணவாளமாமுனிகள் உபதேச ரத்தினமாலையில் மதுரரகவி ஆழ்வாரின் பாசுரத்தைப் புகழ்ந்து போற்றியுள்ளார்.

மதுரகவிஆழ்வார் திருவடிகளே சரணம்.

Gene Notes in Vengai Anchor – I

Dr. C. Rajeswari M.A., M.Phil., Ph.D
Tamilnadu State awardee for best translation

நூலாசிரியர் தமிழ்மகன்,
எழுத்தாளர், பதிப்பாளர்.

2037A.D December at Okinawa

Plastic sign boards printed as 'Protected places' are bordering the roads. Yesterday Okinawa township has announced that people are banned from entering fifteen kilometers near the sea. The president of Japan has asked the people to go to protected shelters as this time the risk is expected to be more than ever before and everyone has to be more careful than before. The orderliness and discipline that the Japanese maintained during that crisis was amazing. 7.5 rectors is dreadful. People knew the effects will be worse, so there is no need to educate them.

People and the government are equally cautious. People are giving space to each other and moving fast to the shelters in the heart of the city. Police on the seashore hurrying up the people to leave quickly.

Televisions and All Tabs are updating the forthcoming crisis with little intervals. Japanese women winking their sharp little eyes are taking care of their kids and baggage. Dev wondered 'How come these Japanese women are showing a positive tension in the nick of this risk'. The government has given enough time and protection for all the people to reach the shelters in the middle of the town. Dev now observed their vision due to multiple experiences with tsunami risks.

Okinawa island may be seen occasionally as a small stroke in the world map. It is one of the 150 islands found scattered below Japan. These islands are identified as land with peaks of high mountains. During the Glacier Age, the spread of the sea was 150 kilometers less. At that time, these islands might have been a stretch of huge land or forest. Then the ocean engulfed a huge mass of land, leaving few spots with hills.

That road is the main pathway from the shore to the centre part of the hill. There are bridges constructed from one island to another as one-way tracks. All these roads lead to the downtowns of the islands and not to the shores.

மொழிபெயர்ப்பாளர்

Dev was watching the shore through the window and the people approaching their vehicle. The people on the shore were approaching their vehicle. The vehicle arranged for him by the hotel has not yet arrived. An announcement said the vehicle will arrive in a few minutes. He safeguarded his Selirio and kept it safe in his waist. He believed it is more important than his life. It was a beach resort. Birds are returning to the shores in flocks. The sky was dark. The sea is calm till now. In the given few minutes to vacate the room, he could only take and pack up his clothes hanging on the hangers, little money, a few cards, and All Tab. Then he kept his Selirio at the top of the wardrobe as if the seawater has entered the room. He could hear some announcement saying that within three minutes, everyone should vacate that shore. This is the latest announcement.

He checked once again whether he has forgotten anything important. His resort was facing the sea. The liquor containers, biscuits, and dirty clothes were listed as unwanted things. He was here for three months on a deputation from his Korean office. This was a secret assignment.

No one knows about his travel. It is now two months passed, and the tsunami is approaching. More than the tsunami, the fear of its arrival has messed up everything. The project plans recorded in the Selirio made him tense. He got into the vehicle and seated with the last people to leave that place.

As soon as he reached a safe place, he contacted the executive officer of his Korean office. The traffic is more in the All Tab. After the tsunami is announced, it is difficult to get connected with anyone.

All foreigners in Japan are trying to contact their people abroad. The sea is still calm. Is there any precedence that the tsunami announcement had failed earlier? Once it happened. At that time the fault was on the rector scale, so the tsunami didn't affect the shores as much as it was expected and afraid of. Haruki had told that most of

the people living here look the same and it would be difficult to identify each one of them, but since Dev is working for some time, he could identify the Mongolian faces, especially the women.

He opened his suitcase to check the Selirio but alas! He couldn't find it. He cried, Oh God, even with no belief. He now remembered that he placed it on the top of the wardrobe and came away with the baggage, thinking that he had taken every important thing. In a nanosecond, all his blood rushed to his brain. Oh, what an effort, hard work, expectation, and opposition. It is placed safely in its case and put on the top of the wardrobe. 'No one will believe me if I say I took all my dress but forgot to bring that Selirio'. Actually, it is not his property, it belongs to Korea. It will become the prey of a tsunami in two hours. He came running out and told the driver of his vehicle he has to go back to the resort. The driver said, 'We will see that after two days'.



''Oh, the thing I had left behind is not my underwear''. He told himself. To whom shall I approach? Who will help me? He ran in the direction of the hotel. The director from Korea called him in All Tab and asked ''Are you safe?'' He answered ''Yes'' Next he asked ''Is that safe?'' he started ''In a hurry…', and 'Go and get it back. Only three more years for our target, 2040. No time to speak''.

Dev switched off his All Tab and started running out of his room, thinking of his Selirio. He didn't plan that he should think about it while he ran, but it happened, eventually.

His office will never accept his reasons, such as a tsunami or earthquake. He should either die in the venture of getting it back or die in their hands. No other alternative. He chose the first one. It will take half an hour to reach the hotel, it is ten kilometers away from here. Getting into the lift and reaching his room will take another ten minutes. Getting back to the Selirio and coming down in a lift may take another ten minutes. Returning here will take twenty minutes. One hour is more than enough. He went to take his car but couldn't take that, as many, many cars were blocking the way. No car is in a position to take and drive.

He was now running in the road, getting into small lanes and streets. He could hear the Japanese sounds like ikki–ki–mishi-miyuki on his way. He reached the place where the cars were fewer and the police officers were busy sending the people to safe places. He went near an officer and told him about his urgency in going to the resort. That officer pulled him away and shouted ''asokowa ike kudasai" [Go there']. Dev tried to explain to him in all three languages: English, Korean, and Japanese. He showed an angry face, and Dev reciprocated. The crowd reduced gradually. Dev was crying aloud, "Please help me, I'll be back in half an hour". Dev found his way and tried to run.

The police officer raised his gun against Dev as the last warning. Dev put off his buttons and showed his chest to receive the bullet. 'OK, come on, shoot me. But if you permit me, it is always good for Japan. You can drill into the eyes of America'

"America?"

'Yes'

What is there?

One box. A project that will shake America. Please give me your police bike.

''America can be drilled' had a magical effect. The police officer Thao Shen Beckoned a cop who was sitting on a bike. He told him a few words in a hurry, and the cop nodded his head. He asked Dev to sit on the bike of the cop. Then he told, Even if one life is lost, our government will take it as the fault of the police. So please

be back soon". The bike was flying on the empty roads. The front light was sliding on the roads.

They reached in fifteen minutes. Dev didn't bring his entry card to open the room.

Since he started in a hurry, he had forgotten that too. He asked the police whether the door could be broken. He replied, "it is not so easy. Anyway, I will try to bring some tools". Then he brought a crowbar and a spade. He might have brought them from the garden. Both broke the door and made a hole at the bottom for a person to go in. Dev entered. And suddenly the power went off. It seemed to be a climax of a Hollywood movie. Only real things are shown in the movies, perhaps.



'Come soon', the cop urged him.

Dev went into the darkness and took that Selirio.

'Speed up, Urgent ',

'Yeah, coming'. He could hear the shattering noise of the buildings.

Dev gave Selirio through the hole in the door, and he crawled out. At that time, that building quaked. Dev thought, OK, everything is over.

The police asked, 'Is that all?' to Dev.

Dev answered, 'It is the hard work of thirty hundred men', he started explaining.

'Ok. this is Tsunami, I am hurrying, Come back if you can' and he ran away.

His eagerness to save the treasure, which is going to shake America, is larger than saving his own life. Dev rushed to him in the interval of three seconds. When it was only two seconds to reach his bike, a gigantic wave knocked at him. When he saw

the cop flying in his bike, the seawater, with a killer instinct, chased him and pushed him away. He dashed into a wall and fell unconscious. That's his last memory.

The police officer was waiting in the same place. He asked the cop, 'Is that the one" pointing at the box. It is difficult to find the curiosity in the expressions on his face.

The cop showed the box and thumbs up. The officer showed the back of his bike and gestured 'where'. The cop also gestured his helplessness. The officer asked, 'Is it possible to shake America?

"This is a project called Mars Mission. It is great the scientists planned to create habitats on Mars. A city can be constructed in one year at Mars and 86,000 robots are designed for that. This is the first report, and it is finalized today so it is not yet sent to the headquarters." That boy was detailing this on our way.

'Is he an Indian?'

'He belongs to TamilNadu'.

'I made a good guess. Leave the bike and get into my jeep.'

The cop parked his bike and walked to the jeep. At that moment, the officer looked very calm and composed.

'It's ok, come to the front. Six thousand years ago, people who constructed the cities with bricks are now planning to do it in the Mars.'

'Sir, you have high regards for him.'

'Sure, we should have rescued him. Our ancient language Ainu and Tamil, are related to each other. Our Ainu delinked from Tamil myriads of years ago.

Thao Shen rushed into his jeep and informed his headquarters that he has good news. He had taken hard and fast rules to electrify the vehicles before 2037 because the petroleum wells are drying up and the gulf countries are fighting for that. When Thao Shen was the transport control officer, he introduced an alternative to petrol in his country. Similarly, now he has a plan in his mind. He looked at the Selirio. This plan is more efficient and effective than the other he introduced earlier...

அருந்தமிழ் வளர்த்த அருளாளர்கள்-3

தமிழ் அச்சுக் கலைத் தந்தை ஆண்டிரிக்கசு அடிகளார்

பேரா. முனைவர் மோ. மைக்கேல் பாரடே
மேனாள் தமிழ்த்துறைத் தலைவர்,
சென்னைக் கிறித்தவக் கல்லூரி,
தாம்பரம்.

உலக முதன் மொழியாம் நம் அன்னைத் தமிழுக்கு அரிய பங்களிப்புகளை நல்கிய அயல்நாட்டு அருள் தொண்டர்களை அறிமுகப்படுத்தும் இக்கட்டுரைத் தொடரைக் கால வரிசைப்படி அமைத்துக் கொள்வதெனில், இதில் முதலாவதாகஇடம்பெற வேண்டியவர் பதினாறாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் இந்தியா வந்து இணையற்ற பணியாற்றிய அருள் தந்தை ஆண்டிரிக்கசு அடிகளாரே ஆவர். எனினும் பரவலான அறிமுகம் கருதி, அவருக்குப் பின்னர் வந்து பெரும்பணியாற்றிய 'செருமானியத் தமிழர்' சீகன்பால்கு அடிகளாரைப் பற்றி முந்தின கட்டுரையில் பேசப்பட்டது. இக்கட்டுரை, அயலகத் தமிழ்த் தொண்டர்களில் முதன்மையான பணி நிகழ்த்திய முதல்வரான ஆண்டிரிக்கசு அடிகளாரைப் பற்றிவிவரிக்கும். தமிழுக்கு முதன் முதல் அச்சு நூலை வழங்கிய பெருமைக்குரியவர் ஆதலால் இவரைத் 'தமிழ் அச்சுக் கலையின் தந்தை' எனப் போற்றுவது மரபு. இவரது வாழ்வையும் வளமான பணிகளையும் பற்றி, ஐந்து பகுதிகளாக, இக்கட்டுரையில் அறிந்து கொள்ள முற்படுவோம்.

I. அடிகளார் பற்றிய வாழ்க்கைக் குறிப்புகள்

ஆண்டிரிக்கசு அடிகளார் எனத் தமிழ் ஒலி மரபுக்கேற்ப, இவரை நாம் அழைத்தாலும், போர்த்துக்கீசிய யூதரான இவர் பெயர், பல வகைகளில் குறிப்பிடப்படுகிறது. ஹென்றி ஹென் ரிக்கஸ் என்றும் வட எழுத்து நீக்கப்பட்டு, என்றி என்றிக்கசு எனவும் அண்டிரிக்கு பாதிரியார் எனவும் பலவாறாக நூல்களில் குறிக்கப்படுகிறது. 1520ஆம் ஆண்டில் போர்ச்சுகல் நாட்டில் வில்லா விசியோசா என்னும் ஊரில் பிறந்தார். இளமையிலேயே இறைப் பணியிலும் சமயக் கல்வியிலும் ஈர்ப்புகொண்டு, பிரான்சிஸ்கன் துறவறச் சபையில் இணைந்தார். ஆனால் இவரது பெற்றோர் யூதர்களாய் இருந்ததால், அவர்களது சட்டப்படி அச்சபையில் இருந்து நீக்கப்பட்டார். பிறகு, சில ஆண்டுகள் 'கோய்ம்பரா' பல்கலைக்கழகத்தில் சேர்ந்து சமயம் சார்ந்த சட்டங்களைப் பயின்றார். பிறகு, ஒரு

சில ஆண்டுகள் கழித்து, தமக்கு வந்த சொத்துகளையெல்லாம் ஏழைகளுக்குத் தானமாகக் கொடுத்துவிட்டு, இயேசு சபையில் துறவியாகச் சேர்ந்தார். சேசு சபை தொடங்கப்பட்ட ஆண்டிலேயே (1545) இவர் அதில் சேர்ந்ததாகத் தெரிகிறது. அங்கு 1546இல் முழுநிலைக் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட பிறகு தம்மோடு 12 சேசு சபைக் குருக்களைச் சேர்த்துக் கொண்டு, இந்தியாவிலுள்ள கோவாவுக்குப் புறப்பட்டு வந்தார். கோவாவில் புனித பிரான்சிஸ் சவேரியார் என்ற மூத்த துறவியின் தலைமையில் சமயப் பணியாற்றத் தொடங்கினார். பின்னர், புனித சவேரியார் இவரை, மீன்பிடிக்கும் பரதவரிடைப் பணியாற்ற, கன்னியாகுமரிக்கு அனுப்பினார். பின்னர் அங்கிருந்து கடற்கரை நகரான தூத்துக்குடிக்கு 1546 இறுதியில் வந்தார். தந்தை அந்தோணி கிரிமினால் என்பாரின் வழிகாட்டுதல்படி, அங்குள்ள முத்துக்குளித்துறை, புன்னைக்காயல், வேம்பாறு, மணக்குடி, காயல் பட்டினம், மன்னார் முதலிய பல இடங்களில் மறைப்பணியாற்றத் தொடங்கினார். இவற்றுள் புன்னைக்காயலையே பெரும்பகுதியும் தம் தலைமையிடமாகக் கொண்டு இயங்கினார். தம் தலைமைக்குருவானவர் அந்தோணியாரின் மறைவுக்குப் பின்னர், முத்துக்குளித் துறையில் இவர் முத்தமிழ் கற்கத் தொடங்கினார். பின்னர் புன்னைக் காயலிலேயே பெரும்பகுதி பணியாற்றி, அங்கேயே 1600இல் இறையடி சேர்ந்தார்.

II. அடிகளார் தமிழ் படித்த பாங்கு

மேல்நாட்டுத் தமிழ்த் தொண்டர்களுள் முதன் முதலாகத் தமிழ்மொழியை முறையாகவும் இலக்கண வரம்போடும் கற்றவர் ஆண்டிரிக்கசு அடிகளாரே எனச் சொல்லப்படுகிறது. இதில் சிறப்பு என்னவென்றால், அடிகளார் பலமொழிகள் அறிந்த பன்மொழிப் புலவராகவும் திகழ்ந்தவர். விவிலியம் சார்ந்த மொழிகளே அன்றி, சீன, ஜப்பானிய, எத்தியோப்பிய மொழிகளும் நன்கறிந்தவர். அம்மொழிகளிலும் அவர்நூல்கள் எழுதியுள்ளதாகத் தெரிகிறது. அடிகளார் தாம் தமிழ் கற்ற சூழலையும் முறைகளையும் பற்றி, 1548 அக்டோபர் 31ஆம் நாள் உரோமிலுள்ள தலைமையிடத்துக்கு ஓர் கடிதம் எழுதியுள்ளார். அக்கடிதத்தின் சில பகுதிகளைக் காண்போம்.

“எனக்கு மொழி பெயர்த்தவர் வேறொரு வேலையாய்ப் போய்விட்டபடியால், இம்மொழியைக் கற்கத் தீர்மானித்து இரவு பகலாக இவ்வேலையிலேயே ஈடுபட்டேன். எனினும், எனது பொறுப்பிலிருந்த இடங்களைக் கண்காணிக்கத் தவறவில்லை. கடவுளும் மிகவும் உதவி செய்தார். இதைக் கற்க ஒரு புதிய முறையைக் கண்டுபிடித்தேன். இலத்தீன்மொழியைக் கற்கும்போது, இணைப்புச் சொற்கள் (Conjuctions), வினை வேற்றுமைகளை நாம் படிப்பது போல, இம்மொழியைப் படிக்கும்போது அவ்வினைச் சொற்களை வேற்றுமையோடு அதாவது அவற்றின் இறந்தகாலம், எதிர்காலம், வினையெச்சம்

முதலியவற்றோடு கற்றேன். இவ்வாறு செய்ய நான் மிக அதிகமாக உழைக்க வேண்டி இருந்தது. மேலும் இரண்டாம், நான்காம், ஆறாம் வேற்றுமைகளையும் கற்றேன். பெயர்ச்சொல்லா, இடப்பெயரா அல்லது வினைச் சொல்லா எதை முதலில் போடுவது என்பது பிறகு எனக்கு விளங்கிற்று.



DOCTRINA CHRISTAM

Doctrina Christãa trella dada em lingua Tamul pello padre Anrique Anriquez da Cõpanhia de IESV, & pello padre Manoel de Saõ Pedro. Com approuaçaõ do Ordinario, & Inquisidor: & cõlicença do Superiorda mesma Companhia: Impressa em Coulam no Collegio do Saluador: aos Vite de Octubro de. M.D. LXXVIII.

Vaõ nesta doctrina alguũs vocabulos osquais pera se conhecerẽ maõ saõ Malauares sellhe poseste final ர ர vr ர Igreja ர.

The First Printed Tamil Book

இதையெல்லாம் இந்த மக்களோடு அவர்தம் மொழியில் உரையாடுங்கால், இவ்வளவு குறுகிய காலத்தில்கற்று விட்டேன் என்று அனைவரும் மிக்க வியப்புற்றார்கள்..... அவர்கள் மொழியை நான் தக்க காலம், இடம், பால் முதலியவற்றைப் பயன்படுத்திப் பேசுவதைக் கேட்கும்போது, இந்தநாட்டு மக்களுக்கு வியப்பாய் இருக்கின்றது. மேலும் ஐந்துமாதத்திற்குள் இத்தகைய முன்னேற்றம் அடைந்து விட்டேன் என்பதைக் காணும்போது, அவர்களது வியப்பு இன்னும் அதிகமாயிற்று. இவ்வாறு நான் செய்திருக்க முடியாது என்று சொல்லுகிறார்கள். இது தவிர எழுதவும், வாசிக்கவும், நான் கற்றிருக்கிறேன்.

இதே மொழியில் நான் பேசுவதோடு சொற்பொழிவும் ஆற்றுகின்றேன். ஆனால், உச்சரிப்பு மிகக் கடினமாக இருப்பதாலும், நம்முடைய மொழியினின்று மிகவும் வேறுபட்டிருப்பதாலும் சில நேரங்களில் நான் செய்யும் தவறுகளை யாரும் கண்டிப்பதில்லை.''

இவ்வாறு தம் தமிழ்க் கல்வியைப் பற்றி எழுதும் அடிகளார், இதன் விளைவாகத் தாம் மேற்கொண்ட ஒரு புதிய முயற்சி பற்றியும் எழுதியுள்ளார்.

''குருக்கள் இம்மொழியை எளிதில் பயிலும் வண்ணம், (பிரான்சிஸ்) சவேரியார் கட்டளைக்கிணங்கி, ஓர் இலக்கணம் கடவுள் அருளால் செய்யப் போகின்றேன். இம்மொழியில் பேசினாலும் அல்லது மொழி பெயர்ப்பாளரின் உதவியோடு பேசினாலும், மிகவும் பயன்படக்கூடிய இலக்கண விதிகள், வினை வேற்றுமைகள், பெயர் வேற்றுமைகள் முதலியவற்றை அதில் அமைக்கப் போகின்றேன்.''

இவ்வாறு தமிழ்மொழியைச் சிறந்த முறையில்கற்று, அதில் சரளமாகப் பேசவும் எழுதவும் ஆற்றல் பெற்ற பின்பு, தமிழில் சில நூல்களை எழுதவும் மொழிபெயர்க்கவும்தலைப்பட்டார். அவற்றைப் பற்றி, தொடர்ந்து காண்போம்.

III. அடிகளார் எழுதிய - அச்சிட்ட - பதிப்பித்த நூல்கள்

ஆண்டிரிக்கசு அடிகளார் இந்தியாவில் குறிப்பாகத் தமிழகத்தில் அச்சு நூல்கள் உருவாகக் காரணமாயிருந்த முன்னோடி என்று வரலாறு கூறுகிறது. கோவாவிலும் கொல்லத்திலும் பின்னர் புன்னைக் காயலிலும் அச்சுப் பொறிகள் உருவாக்கப்பட்டு, அச்சகங்களும் இவரது முன்முயற்சியால் ஏற்படுத்தப்பட்டதை அறிகிறோம். இவ்வாறு அவரால் அச்செழுத்துகளில் உருவாக்கப்பட்ட நூல்களே, தமிழில் உருவான முதல் அச்சு நூல்களாகக் கருதப்படுகின்றன. தமிழின் (ஒலிவடிவ) முதல் அச்சு நூலாக 'கார்ட்டில் ஹா' (Cardilha) என்ற நூல் பேசப்படுகிறது. எனினும், ஆண்டிரிக்கசு அடிகளார் உருவாக்கிய பின்வரும் நான்கு நூல்களே, தமிழில் வெளிவந்த முதல் அச்சு வடிவ நுல்களாக அங்கீகரிக்கப்படுகின்றன. அவை பற்றிச் சுருக்கமாகக் காண்போம்.

1. தம்பிரான் வணக்கம்

இந்த நூல் முதல்தமிழ் அச்சுருக்களால் (1578) உருவான நூல் என கமில்சுவலபில் என்ற ஆய்வாளரும் குறித்துள்ளார். இது கோவாவில் அச்சிடப்பட்டது. புனிதபிரான்சிஸ் சேவரியார் எழுதிய போர்த்துகீசிய நூலை, அடிகளார் இவ்வாறு மொழிபெயர்த்துள்ளார். இது இரு பாகங்களாக, கிறித்தவ சமயக் கோட்பாடுகளையும், ஜெபங்களையும் உள்ளடக்கியது.

பாதிரியார் பீட்டர் மானுவேலுடன் இணைந்து இப்பணியை அடிகளார் செய்ததாகத் தெரிகிறது. பரதவரின் பேச்சுமொழியிலேயே இந்நூலை அடிகளார் எழுதியுள்ளார். (பின்வந்த வீரமாமுனிவர், திருக்குறளுக்குப் பரதவர் மொழியிலேயே உரை எழுதியுள்ளது இங்கு ஒப்புநோக்கத்தக்கது.) தமிழ் மொழியின் முதல் அச்சுப் புத்தகமான இது பதினாறு பக்கங்களே கொண்டது.

அடிகளாரின் முதல் அச்சு நூல்கள் பற்றி, கவிஞர் தமிழ்நாடன் என்பார் அற்புதமான ஓர்அரிய - சிறிய ஆய்வு நூலை வெளியிட்டுள்ளார். அந்நூலின் முகவுரையில் அவர் இவ்வாறு குறிப்பிடுகிறார். "நவீன அச்சுக்கலையை உலகெல்லாம் பரப்பியது போர்ச்சுகல். போர்ச்சுகல் பாதிரிமார்கள் தாங்கள் சென்ற நாடுகளிலெல்லாம் பைபிளை அச்சு நூலாய் வெளிப்படுத்தினர்.

உலகின் பெரும்பாலான மொழிகளில் முதல் அச்சு நூல்கள் பைபிள் சார்ந்தனவே. இந்திய துணைக் கண்டத்தின் அச்சு நூல் வரலாறு தமிழ்மொழியில் தொடங்குகிறது. தமிழின் 'தம்பிரான் வணக்கம்' நூலே, தமிழில் மற்றும் இந்திய மொழிகளில் முதலாவது அச்சு. தம்பிரான் வணக்கம் தமிழ்ச் செல்வங்களில் ஒன்று. தமிழகத்தில் அதிகம் அச்சிடப்பட்ட நூல் தம்பிரான் வணக்கம்."

2. கிரீசித்தியானி வணக்கம் (Doctrina Christam) (1579)

இந்த நூல்தான் தமிழில் வந்த இரண்டாவது அச்சு நூலாகும். இது *1579* நவம்பர் *14*ஆம் நாள் கொச்சியில் அச்சடிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. *122* பக்கங்கள் கொண்ட இந்நூல், மார்க்கோஸ் ஜார்ஜ் என்ற போர்த்துக்கீசிய இயேசுசபைப் பாதிரியார் எழுதிய *'Doctrina Christam'* என்ற நூலின் தமிழாக்கமே ஆகும். *12* அதிகாரங்களாகப் பகுக்கப்பட்டுள்ள இந்நூலில் கிறித்தவ சமயக் கோட்பாடுகள் வினா - விடை வடிவில் விளக்கப்பட்டுள்ளன.

3. கொம்பெசியொனாயரு (Confessionario)

அடிகளார் உருவாக்கிய இத்தமிழ் நூல்தான், தமிழின் மூன்றாம் அச்சுப் புத்தகமாகக் கருதப்படுகிறது. இது ஒரு கிறிஸ்தவ ஜெபப்புத்தகமே. இறைவனிடம் பாவ மன்னிப்பு வேண்டுதல் தொடர்பான பாவ அறிக்கைகள் அடங்கியது. இப்பெயரின் ஆங்கில வடிவம் *'Confession'* என்பதாகும்.

தமது பாவங்களை - பிழைகளை இறைவனிடம் அறிக்கையிடுதல் எனப் பொருள்படும். இந்நூலின் முதல் பதிப்பு *1578*இல் புன்னைக்காயலிலும் *2*ஆம் பதிப்பு *1580*இல் கொச்சியிலும் அச்சிடப்பட்டதாகத் தெரிகிறது. இந்நூல் பிரதி இப்போது இங்கிலாந்து ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழக நூலகத்தில் உள்ளது.

4. அடியார் வரலாறு (Flos Sanctosum) 1568

1954இல் ஈழத் தமிழ்ச் சான்றோர் தனிநாயகம் அடிகளாரால், வத்திக்கான் நூலகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த நூல், தமிழின் நான்காவது அச்சு நூலாகக் கருதப்படுகிறது. இது அளவில் பெரியது. 668 பக்கங்கள் கொண்டது. 'Flos Sanctorum' என்ற ஸ்பானிஷ் மொழிநூல், மற்றும் இரு நூல்களிலிருந்து எடுக்கப்பட்ட புனிதர்களின் அற்புதச்செயல்கள் இந்நூலின் இடம்பெற்றுள்ளன. இந்நூலை மொழிபெயர்க்க, ஆண்டிரிக்கசு அடிகளார் பெருமுயற்சி மேற்கொண்டதாகக் குறிப்பிடுகிறார்.

தமிழ்நாட்டில் பலருடைய துணையை நாடியும். அரிதின் முயன்றும் தாம் இந்நூலை உருவாக்கியதாகக் கூறுகிறார். ஏழை எளிய பரதவர்களும் புரிந்துகொள்ளும் வண்ணம், எளிய நடையில் அடிகளார் உருவாக்கியுள்ள இந்நூல், மிகச் சிறந்த இலக்கியமாகப் பலராலும் போற்றப்படுகிறது. '16 ஆம் நூற்றாண்டின் கிறித்தவச் சிந்தனைகளைத் தமிழ்மொழியின் ஊடகத்தின் வழியாக எடுத்துரைக்கும் மிகமிகப்பெரிய முயற்சி இது என்று இந்நூலை தமது 'தமிழ்ப் பண்பாடு' என்ற இதழில் தனிநாயகம் அடிகளார் பாராட்டி எழுதியுள்ளார்.

5. முதல் ஐரோப்பியத் தமிழ் இலக்கணம்

லிஸ்பன் நகர நூலகத்தில் தனிநாயகம் அடிகளார் இந்நூலைக் கண்டுபிடித்துள்ளார். இந்நூலின் ஆசிரியர் பற்றி சில ஐயங்கள் இருப்பினும், இது அடிகளார் தயாரித்த நூலெனவே, சில சான்றுகளால், கருதப்படுகிறது. முதன்முதலாக, பேச்சுத்தமிழுக்கு எழுதப்பட்ட இலக்கண நூல் இதுவே என அமுதன் அடிகளாரும் எழுதியுள்ளார். இந்நூலில் தமிழ் இலக்கணத்தில் இலத்தீனைப் பின்பற்றி, புதுமுயற்சி செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.


தம்பிரான் வணக்கம்

Pello final. - ரு -

Credo

தமிழ்மொழியின் முதல் அச்சுப்புத்தகம்

மேற்குறித்த நூல்களேயன்றி, வேறு பல நூல்களையும் அடிகளார் எழுதி வெளியிட்டுள்ளதாகப் பலதரவுகள் தெரிவிக்கின்றன. எனினும், அந்நூல்கள் இப்போது கிடைக்கவில்லை.

சான்றாக, கிரகோரியன் ஆண்டுக் கையேட்டோடு, தமிழ் ஆண்டுமுறைகளை ஒப்பிட்டு, அடிகளார் ஓர் ஆண்டுக் கையேட்டுத் திருத்த நூலை உருவாக்கியுள்ளார். இப்போதும் அக்கால அட்டவணை முறை பின்பற்றப்படுகிறது. அவ்வாறே அடிகளார் ஓர் தமிழ் - போர்த்துகீசிய அகராதி, கொம்பேரி சபை என்ற சகோதரத்துவம் பற்றிய ஆய்வுநூல், இந்து சமயப் புராணக் கதைகள் பற்றிய ஒரு மறுப்பு நூல் முதலியவற்றையும் எழுதியுள்ளமைக்குச் சான்றுகள் கிடைக்கின்றன. மேலும், போர்த்துகீசிய மொழியில் தமிழைப் பற்றி இவர் 70 கடிதங்கள் எழுதியுள்ளதாக ஆய்வு நுலாசிரியர் எம்.ஏ. சவேரியார் குறிப்பிடுகிறார்.

IV அடிகளார் மேற்கொண்ட பன்முகப்பணிகள்

நூல்கள் வெளியீடே அன்றி, வேறு பல பொதுநலப்பணிகளையும் அடிகளார் மேற்கொண்டது பற்றிஅறிய வருகிறோம்.

அ. அச்சக உருவாக்கம்

இவர் தமிழ் அச்சுப் பொறியை உருவாக்கவும், அச்சகத்தை ஏற்படுத்தவும் பலருடைய துணையோடும் நிதி உதவியோடும் முயன்றிருப்பதற்கானச் சான்றுகள் கிடைக்கின்றன. தந்தை வலிஸ்னோ, சகோதரர் சுவான் கொன்சால்வசு, பெரோலூயிஸ் போன்றோர் இப்பணியில் இவருக்குத்துணை நின்றுள்ளனர்.

ஆ. மருத்துவமனை ஏற்படுத்தல்

பரதவமக்களுக்காக, கேப்டன் ராட்ரிகோஸ் என்பார் உதவியுடன் ஒரு மருத்துவமனை ஏற்படுத்தி உள்ளார். கிறித்தவர், அல்லாதார் என அனைவரும் இதில் பயன்பெற்றுள்ளனர். இதற்காகப் பலரிடம் நிதி திரட்டியுள்ளார்.

இ. தமிழ்க் கல்லூரி உருவாக்கல்

புன்னைக் காயலில், கேரளத்துப் பிராமணர் ஒருவர் உதவியுடன், சேசு சபைக்குருக்கள் பயிலத்தமிழ்க் கல்லூரி ஒன்றும் உருவாக்கியுள்ளது தெரிகிறது.

***V*. அடிகளார் மறைவும் ஆறாத மக்கள் துயரும்**

இப்படி, தமிழகத்தில் சுமார் 50 ஆண்டுகள் அரும்பெரம் தொண்டாற்றி, தம் 80 ஆவது வயதில் புன்னைக் காயலில் 1600 பிப்ரவரி ஆறாம் நாள் அடிகளார் இறையடி சேர்ந்தார். அவரது உடல் புன்னைக் காயலில் அடக்கம் செய்யப்பட ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த அடக்க வழிபாட்டில் ஆறாத துயரோடு பங்கேற்க அலை அலையாக மக்கள் திரண்டனராம். தூத்துக்குடியிலிருந்து ஏழு தோணிகளில் மக்கள் சென்றனராம். இந்துக்களும் இஸ்லாமியரும் தங்கள் கடைகளை அடைத்தும் விரதம் மேற்கொண்டும் அவருக்கு அஞ்சலி செலுத்தினர். அவரது திருவுடலைத் தொடவேண்டுமென மக்கள்கூட்டம் முண்டியடித்ததாகச் சொல்லப்படுகிறது. காயல்பட்டினத்து மக்கள் கண்ணீர்க்கடலில் மிதந்தனர். அவர் இறந்த பிறகும் அவர் பெயரால் சத்தியப் பிரமாணம் செய்யும் வழக்கம் அம்மக்களிடையே இருந்ததாகக் கூறப்படுகிறது. அவரது உடல் தூத்துக்குடி புனிதப் பனிமயமாதா பேராலயத்தில் அடக்கம் செய்யப்பட்டதாகக் கூறப்பட்டாலும், அவரது கல்லறை காணக் கிடைக்கவில்லை. அவரது எலும்புகள் ஒரு கண்ணாடிப் பேழையில் பாதுகாக்கப்படுகின்றன.

இவ்வாறாக, இனிய தமிழுக்கு இணையற்ற கொடைகளை ஆரம்ப காலத்திலேயே அள்ளிக்கொடுத்த அருள்தொண்டராம் அடிகளாரின் வாழ்வும் பணிகளும் நமக்கோர் அறை கூவலாகவே அமைந்துள்ளது.

திருக்குறள் அறிந்ததும் அறியாததும்

மாரிராஜன்
சோழர் வரலாற்று ஆய்வுச் சங்கம் - சென்னை.

தற்காலத்தில் வலிந்து கட்டமைக்கப்படும் கட்டுக்கதைகள் ஏராளம். அவற்றில் ஒன்று. சமையல்காரர் ஒருவரிடம் எரிக்கப்பட இருந்த சுவடிகளை ஆங்கிலேய எல்லீஸ் அவர்களிடம் கொடுத்ததாகவும் எல்லீஸ் அதை அச்சுப்பதிப்பாக வெளியிட்டார் என்றும் அதுதான் திருக்குறள் என்றும் ஒரு கதை சொல்லப்பட்டது. அந்த சமையல்காரர் மட்டும் இல்லை என்றால் திருக்குறள் நமக்கு கிடைத்தே இருக்காது என்று அக்கதைக்கு மேலும் மெருகூட்டப்படும். இக்கதையை உண்மையென்று சொல்ல எவ்விதமான அகச்சான்றோ புறச்சான்றோ இல்லை என்பதுதான் உண்மை.

திருக்குறள் மீது மிகுந்த அபிமானம் கொண்டவர் எல்லீஸ் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. திருக்குறளைப் போற்றியவர். திருக்குறளின் அறத்தை கல்வெட்டில் பதிவு செய்தவர். ஆனால்..திருக்குறளை முதன்முதலாக அச்சில் வெளியிட்டவர் எல்லீஸ் அல்ல. இவரும் திருக்குறளை அச்சு நூலாக வெளியிட்டார். ஆனால் எல்லீஸ் வெளியிட்டது முதல் பதிப்பு அல்ல. முழுமையான திருக்குறளும் அல்ல. எல்லீஸ் வெளியிட்டது 1330 திருக்குறளும் அல்ல.

திருக்குறளை முதன்முதலாக ஓலைச்சுவடியில் இருந்து படியெடுத்து சரிபார்த்து 1330 குறள்களையும் வெளியிட்டவர் தஞ்சை ஞானப்பிரகாசம் என்பவர். வெளியிட்ட ஆண்டு 1812. இதற்காக இவர் எடுத்த முயற்சிகள், மெனக்கிடல், அர்ப்பணிப்பு எல்லாமே ஒரு வலி மிகுந்த வரலாறு. உண்மை வரலாறு.

மத்திய செம்மொழி தமிழாய்வு நிறுவனம் சுவடியல் புலம் என்னும் புதிய தளத்தை துவங்கியுள்ளது. இத்தளத்தில் சங்க இலக்கியங்களின் முதல் அச்சுப்பதிப்பு நூல்களை பதிவேற்றம் செய்துள்ளது. ஓலைச்சுவடியிலிருந்து முதன்முதலாக அச்சில் ஏறிய பதிப்புகள் அனைத்தும் இத்தளத்தில் கிடைக்கிறது. 1812 இல் முதன்முதலில் அச்சுப்பதிப்பாக வெளிவந்த திருக்குறள் நூலையும் வெளியிட்டுள்ளது. வெளியிட்டவர்தான் ஞானப்பிரகாசம்.

(இந்நூலை வாசிக்க இணைப்பு முதல் பின்னூட்டம்)

இன்னும் சற்றும் முன்னோக்கிச் சென்றால்.. 1794 ஆம் ஆண்டு ஆங்கிலேய மொழியியல் அறிஞர் கிண்டர்ஸ்லே என்பவரால்...HINDOO LITERATURE என்னும் நூல் எழுதப்பட்டது. இந்நூலில் திருக்குறள் பலகுறட்களுக்கு உரை எழுதப்பட்டுள்ளது. திருக்குறளை ..THE OCEAN OF WISDOM என்றழைக்கிறார் ஆசிரியர். ஆகவே..1794 ஆம் ஆண்டிலும் திருக்குறள் பொதுமக்கள் பயன்பாட்டில்தான் இருந்தது.

(இந்நூலை வாசிக்க இணைப்பு இரண்டாம் பின்னூட்டம்)

இன்னும் சற்று முன்னோக்கிச் செல்வோம்.. கி.பி.2 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சிலப்பதிகாரத்தில் 10 க்கும் மேற்பட்ட திருக்குறள்களை இளங்கோவடிகள் மேற்கோள்காட்டுகிறார். கி.பி.8 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சேரமான் பெருமாள் இயற்றிய திருக்கைலாய ஞான உலா என்னும் நூலில் இரண்டு திருக்குறள்களை அப்படியே அடிமாறாமல் பயன்படுத்தினார். திருவள்ளுவரை பண்டையோன் என்கிறார்.

அதாவது கி.பி 8 ஆம் நூற்றாண்டிலேயே பண்டையோன் ஆக்கிய நூலாக திருக்குறள் பதிவு செய்யப்படுகிறது .

கி.பி 5 நூற்றாண்டு முதல் எழுந்த பக்தி இலக்கியங்களான திருமந்திரம் முதல் மூவர் தேவாரம் திருவாசகம் சைவசித்தாந்த நூல்கள் என அனைத்துமே திருக்குறளின் சாரத்தை அப்படியே பேசுகின்றன. இன்னும் சொல்லப்போனால் பக்திநெறியின் மூலம் திருக்குறள் கருத்துகளை கொண்டு சேர்ப்பித்தன /

வளர்த்தது என்றே சொல்லலாம். திருவள்ளுவர் காலத்திற்கு பின் வந்தவரே திருமூலர் ஆதலால் திருக்குறளின் தலைப்புகளான அன்புடைமை கொல்லாமை கள்ளுண்ணாமை புலால் மறுத்தல் பிறன்மனை நயவாமை உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளை திருமூலர் அப்படியே தம் நூலில் இட்டு அக்கருத்துகளை மேலும் விரித்துக் கூறியுள்ளார்.. பின்னர் வந்த தேவார திருவாசக பெரியபுராணமும் அக்கருத்துகளை திருக்குறளின் அடிகளை நேரடியாக அப்படியே தாங்கி நிற்கின்றன.

ஏனெனில் தமிழ்ச்சமூகத்தின் வாழ்வியல் நெறியாக கொள்ளவேண்டிய உறுதிப் பொருள்களாகத் திகழ்வன அறம் , பொருள் , இன்பம் , வீடு என்பனவே... அவையே தமிழர் வாழ்வியலின் அடிப்படை! அவற்றையே சிவபெருமான் ஆலமர்செல்வனாக ஆல்கெழுகடவுளாக இருந்து அருளியவையாக சங்க இலக்கியம் முதல் பக்தி இலக்கியங்கள் வரை எடுத்தியம்புகின்றன. பின்னாளில் வந்த ஔவையாரின் "நல்வழி" நூலில்...

"தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை
திருவாசகமும் திருமூலர் சொல்லும்
ஒருவாசகம் என்று உணர்."

நல்வழி (பாடல்-40)

பின்னாளில் வந்த பட்டினத்தார், தாயுமானவர், திருவருட்பிரகாச இராமலிங்க வள்ளல் பெருமான் வரை திருக்குறள் கூறியவற்றை வலியுறுத்தியுள்ளனர்.

குமரகுருபரர்

மதுரையை ஆண்ட திருமலை மன்னரின் விருப்பத்திற்கு ஏற்ப நீதிநெறி விளக்கம் என்ற நூலை குமரகுருபரர் இயற்றினார். இந்நூலிலுள்ள கருத்துகள் திருக்குறள் கருத்துகளை அடியொற்றியவை.

தொடர்ந்து கி.பி.14 ஆம் நூற்றாண்டு முதல் ஏராளமான ஆவணங்கள் சுவடிகள் மற்றும் செப்பேடுகளில் திருவள்ளுவரும் இடம்பெறுகிறார். திருக்குறளும் இடம் பெறுகிறது.

பழனி வீரமுடியாளர் செப்பேடு....

பழனியில் வீரமுடியாளர் சார்பில் ஒரு மடம் ஏற்படுத்தப்படுகிறது. சிதம்பர உடையார் சீடன் அலங்காரபண்டாரம் என்பவர் அதன் தலைவராக

நியமிக்கப்படுகிறார். மடத்தில் தண்ணீர்ப்பந்தல் வைக்கப்பட்டு உப்பு, ஊறுகாய், நீராகாரம் வைக்கப்படுகிறது. அந்தச் செப்பேட்டில் இந்த வாசகம் உள்ளது.

'புகழ்ப்பூண்டு இன்சொல்லால் இனிதளித்து வள்ளுவர் மரபு காத்து முப்பால் மொழியின்படிக்கு
அல்லவை கடிந்து
நல்லவை நாட்டி
கலிமெலியக் குடிதழைக்க
ஆறிலொன்ற கடமைகொண்டு அசையாமணிகட்டி அரசாளுநாளில்

என்ற தொடர்கள் காணப்படுகின்றன.

திருவள்ளுவர் கூறிய

அல்லவை விலக்கி நல்லவை நாட்டும்
மரபுபடி ஆட்சி செய்தேன்
என்கிறார் ஆட்சியாளர்.

பல்லடம் செப்பேடு..

கொங்குநாட்டு வாரக்க நாட்டில் நாரணபுரம் அங்காள பரமேசுவரி கொடைச் செப்பேட்டில் நாராயண கவுண்டர் அதிகாரம் பேசப்படுகிறது.

இச்செப்பேட்டில் திருக்குறள் பற்றிய குறிப்புகள் இவ்வாறு உள்ளது.

'ஓதி யுணர்ந்து உலகம்முழுதும் ஆளுவதற்கு நீதி சாகரம் நினைவுடன் கற்று மும்மொழி விநோதன் முத்தமிழ் தெரிந்தோன் வள்ளுவர் மரபுகாத்து முப்பால் மொழியின்படியே அல்லவை கடிந்து நல்லவை நாட்டி "

என்பன பாளையக்காரர் பற்றிய புகழ் மொழிகளாகும். வள்ளுவர் மரபு காத்து முப்பால் மொழிந்தபடி ஆட்சி செய்வேன் என்கிறார். வள்ளுவர் மும்மொழி விநோதன், முத்தமிழ் தெரிந்தோன் என்று அடையாளப்படுத்தப்படுகிறார்.

மதுரை முத்துவீரப்ப நாயக்கர் ஆட்சிக்காலத்தில் கொங்கு நாட்டில் பூந்துறை நாட்டுக்கும் காங்கயநாட்டுக்கும் எல்லைப்போர் ஏற்பட்டு தாராபுரம் நாயக்கர் அதிகாரி திம்மப்ப முதலியாரால் அவ்வழக்கு தீர்த்து வைக்கப் படுகிறது. அதைக் குறித்து 1617-ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்த செப்பேட்டில் எழுதப்பட்ட. வள்ளுவரின் புகழ் மொழி இது.

"சற்குணம் நான்கும்

அழும் குழவிக்கு அன்புடைத் தாய்போல் அனைத்து உயிர்கட்கும் இனிமையே நல்கி வள்ளுவர் உரைத்து முப்பால் மொழியின்படியே செங்கோல் நீதி வழுவாமல் நாட்டி நடத்தி வருகுற நாளில்'

என்ற தொடர்கள் காணப்படுகின்றன. வள்ளுவன் வழிப்படி செங்கோல் ஏந்தி முப்பால் வழியே நீதி வழுவாமல் இருக்கிறேன் என்கிறார் ஆட்சியாளர்.

பழையகோட்டை ஏடு...

பழைய கோட்டைப் பட்டக்காரர் பயிரன் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார் தம்பி கண்ணுச்சாமி என்ற குமார ரத்தினக்கவுண்டர் மாணவர்கள் பயிலும் பாடசாலை ஒன்றை நிறுவ ஏற்பாடு செய்கிறார். பாடசாலைக்கு ஆசிரியர் ஒருவரைத் தேடி திருவாவடுதுறை ஆதினம் சென்று முத்துப்பிள்ளை என்பவரைக் குடும்பத்துடன் அழைத்துக் கொண்டு வந்தார். பழைய கோட்டையில் ஒரு வாரத்தில் 200 சிறுவர்கள் தங்கிப்பயில ஒரு பாடசாலை கட்டப்பட்டது.

நடந்த நிகழ்வுகளை ஏட்டில் பதிவு செய்யப்படுகிறது. அதைக்குறிக்கும் செய்தியில்...

எங்கணும் புகழவே காரை ஆனூர் வந்தபின் எட்டுநாட்கு உள்ளாகவே

இருநூறு சிறுவர்கட்கு ஆனபடி யாக ஒரு

எழிலான கூறையிட்டு

பொங்கிடும் சமையல் அறை பள்ளியறை இவைகளும் பூனித ஆசிரியருக்காய்

புதிதாக அமைத்தவர்க்கு உணவுஉடை இவைகளும் போதிய படிக்கமைத்து

சங்கீதப் பண்ணுடன் சொலுகின்ற தமிழ்மறை சங்கநூல்கள் நிகண்டும்

சாதிமத பேதமில்லாது

நல் நீதியாய்ச்

சகலர்க்கும் ஒதிவைத்து

துங்கிதச் சொல்லுடன் தூயவர் இவராலே துலங்கு நற் பள்ளி யீது'

என்று கூறப்பட்டுள்ளது.

இந்தப் பள்ளியில் சாதிமத பேதமில்லா தமிழ்மறை திருக்குறள் மற்றும் சங்கநூல்கள் கற்பிக்கப்பட்டதாம் திருக்குறளைதமிழ்மறை என்றும் அது சாதிமத பேதமில்லாதது என்றும் கற்றுத் தேர்ந்த அறிஞர்கள் பதிவு செய்கின்றனர்.

Reference

ஆவணங்களில் திருவள்ளுவரும் திருக்குறளும்.
முனைவர் செ.ராசு..

ஆக...

"பண்டையோன் ஆக்கிய குறள், முப்பால் மரபு காத்த வள்ளுவர் மொழி, முத்தமிழ் தெரிந்தோன் வள்ளுவர், முப்பால் மொழி, தமிழ் மறை திருக்குறள் "

என்றெல்லாம் போற்றி வணங்கப்படும் திருவள்ளுவர் அறமாற்றிய திருக்குறள் என்றென்றும் தமிழ் மக்கள் வாழ்வியலில் நீங்கா இடம்பெறும்.

அன்புடன்..
மா. மாரிராஜன்.

புதைப்பிடங்கள் - தாமிரபரணி நாகரிகமும் சுமேரிய நாகரிகமும்

முனைவர் மெய். சித்ரா
தலைவர் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், ஆங்காங்

ஆய்வு சுருக்கம்

பண்டைய காலத்தில் பல நாடுகளில் இறந்த உடல்களுக்கு பலவிதமான இறுதிச் சடங்குகள் செய்து வந்துள்ளனர். அதில் அகழ்வாராய்ச்சியில் கிடைத்த சுமேரிய புதைப்பிடங்களுக்கும் இந்தியாவில் தாமிரபரணி ஆற்று அருகே உள்ள ஆதிச்சநல்லூரில் கிடைத்த புதைப்பிடங்களுக்கும் பல ஒற்றுமைகளைக் காண முடிகிறது. இக்கட்டுரை அவற்றை விவரிக்கிறது.

***

தமிழருக்கும் சுமேரியருக்கும் காலங்காலமாய்த் தொடர்பு இருப்பதை நாம் பல வகையில் அறியலாம். பாரசிக வளைகுடாவில் விளங்கும் சுமேரியா (மெஸபடோமியா) நாட்டுடன் நம் தென் இந்திய அரசுகள் வணிகத் தொடர்பு இருந்ததை கிரேக்க, உரோம அறிஞர்கள் மெகஸ்தனிஸ் தொடங்கி அர்ரியன், ஹிரோடோடஸ், ஸ்ராபோ, பிளைனி மற்றும் டாலமி என்று பலரும் தங்கள் குறிப்புகளில் எழுதியுள்ளனர்.

உலகில் சமகாலத்தில் சிறப்புற்று விளங்கிய நாகரிகங்கள், டைகிரிஸ் மற்றும் யுபரிடஸ் நதிக் கரைகளில் உள்ள நகரங்களைக் கொண்ட சுமேரியா நாகரிகம், நைல் நதி கரையில் நகரங்களைக் கொண்ட எகிப்து நாகரிகம், சீனாப், ராவி, சட்லஜ், ஜீலம் மற்றும் பியாஸ் ஆகிய ஐந்து நதிகளின் கரைகளில் உள்ள நகரங்களைக் கொண்ட சிந்து வெளி நாகரிகம் மற்றும் மஞ்சள் நதிக் கரையில் உள்ள நகரங்களைக் கொண்ட சீன நாகரிகம் ஆகியன.

தமிழகத்தில் தற்போது நடந்து வரும் அகழாய்வுகளால், வைகை மற்றும் தாமிரபரணி நதிக்கரைகளில் அமைந்த பழைய நகரங்களிலும் கிராமங்களிலும் நமக்குக் கிடைக்கும் தொல் பொருள்களிலிருந்து, தமிழகத்தில் விளங்கிய வைகை நாகரிகமும் தாமிரபரணி நாகரிகமும் மேற்கூறிய அனைத்து நாகரிகங்களுக்கும் சமகாலத்தில் இருந்த நாகரிகமாய் இருக்கலாம் என்று கணிக்கும் வாய்ப்பு கிட்டுகிறது.

சுமேரிய நாகரிகத்தின் சிறந்த நகரமாய் விளங்கிய ஊர் என்ற நகரத்திலும் சரி, எகிப்து நாகரிகத்தின் கிசா மற்றும் நுபியா என்ற நகரங்களிலும் சரி, சிந்து வெளியின் ஹரப்பா மற்றும் மொகன்சதாரோ நகரங்களிலும் சரி, சீன நாகரிகத்தின் சிறந்த நகரான பான்போ நகரத்திலும் சரி, எல்லா நகரங்களிலும் இறந்தவர்களைத் தாழிகளில் வைத்துப் புதைத்துள்ளார்கள். இது முதல் வகையான ஈமச்சடங்கு. அடுத்த பிறப்பிற்கு பயன்படும்படியாய்ச் சில பொருள்களையும் உடன் இட்டு உடல்களைப் புதைத்துள்ளனர். வைக்கப்பட்ட பொருள்கள், சில பொதுவான பொருள்களாய் இருந்தாலும், இடத்திற்கு ஏற்ப மாறுபட்டுள்ளன. மக்களின் சமூக நிலையைப் பொறுத்து, வைக்கப்படும் மண்பாண்டங்களின் அளவுகளும் மாறுபட்டன.

இதைப் போன்றே நம் தமிழர் நாகரிகத்தைச் சேர்ந்த மக்களும் தங்கள் இறந்த குடும்பத்தவரை முதலில் சிறிய தாழிகளிலும் பிற்காலத்தில் பெரிய தாழிகளிலும் இட்டுப் புதைத்துள்ளனர். தாழிகள் புதைத்த இடத்திற்கு அருகே இறந்தவர்களுக்குத் தேவையான பொருள்களையும் வைத்துப் புதைத்துள்ளனர்.

இரண்டாம் வகைப் புதைக்கும் முறையில் தலைசிறந்தவர்கள் எகிப்தியர்கள் என்றே சொல்ல வேண்டும். அவர்கள் எகிப்தில் அரச குடும்பத்தவர்க்கு நூற்றுக்கும் மேற்பட்ட பிரம்மாண்டமான பிரமிடுகளையும் சூடானில் அறுநூற்றுக்கும் மேற்பட்ட பிரமிடுகளையும் புதைக்கப்பட்டோருக்குச் சகல வசதிகளைச் செய்து, இறந்தவர்க்குப் பிடித்தமான பொருள்களையும், மறுவாழ்வில் சிறப்புடன் வாழ பல பொருள்களையும், சிலருக்குப் பணியாட்களுடனும் வைத்துப் புதைத்துள்ளனர். உடல்கள் (சிதைவிலிருந்து காக்கும் வகையில்) சணல் நாரில் ஆன துணிகளால் மம்மிகளாய் மாற்றப்பட்டு, பெட்டிகளில் வைத்துப் புதைக்கப்பட்டுள்ளன. குடிமக்களைப் பானைகளில் உரிய மரியாதையுடன் தாழியில் இட்டு மற்ற பொருள்களைச் சிறு பானைகளில் இட்டு மூடியிட்டுப் புதைத்துள்ளனர். அவர்கள் தாழிகளில் பெரும்பாலும் சிறு சிலைகள் வைக்கப்பட்டு இருந்தனவாம்.

ஆனால், 1911ஆம் ஆண்டில் மோரிஜ் ஜெஸ்ட்ரா என்ற அறிஞர், சுமேரியர்களின் (பாபிலோனிய மற்றும் அசிரிய மக்களின்) முதுமக்கள் தாழிகள், எகிப்தியர்களைப் போல் இல்லாமல், அரசர்களே ஆனாலும், (நம் தமிழரைப் போன்று) மிகவும் எளிமையானதாகவே இருந்துள்ளன என்றும் உடல்கள் சிதைவு படாமல் இருக்க எந்த வித பாதுகாப்புகளும் செய்யப்படாமல் புதைக்கப்பட்டுள்ளன என்று குறிப்பிடுகிறார்.

மேலும், மார்டின் பிலம்லே என்ற அறிஞர் 1939ல், தன் ஆய்வில், சுமேரியர்கள் தொடக்க காலத்தில் இறந்தவர்களை நாணலால் ஆன பாயில் சுருட்டி

புதைத்திருக்கலாம் என்றும், பிறகு தான் இறந்தோரை இரட்டை பாண்டம் முறையில் ஒரு பாண்டத்திற்குள் உடலை வைத்து மற்றொன்றால் மூடி வைத்து மண்ணில் புதைத்திருக்கலாம் என்றும் அதன் பின்னர் பீப்பாய் போன்ற தாழியில் உடலை வைத்துப் புதைத்திருக்கலாம் என்றும் குறிப்பிடுகிறார்.

இறந்தவர்களுடன் பானைகளில் உணவும் வைக்கப்பட்டிருப்பதற்கு, அகழ்வாய்வாளர்கள், உட்டச்சத்து இல்லாத உடல்கள் ஆவிகளாய் அலைவார்கள் என்று நம்பப்பட்டிருக்கலாம் என்று விளக்குகின்றனர். இறந்த உடல்களின் கைகளைக் குறுக்காய் வைத்தே புதைத்துள்ளனர். தாழிகள் குறிப்பிட்ட இடங்களில் வரிசையாய்ப் புதைக்கப்பட்டிருக்கின்றன.

இந்த புதை குழிகளிலிருந்து, ஒரு நாட்டில், மக்கள் கொண்டிருந்த சில நம்பிக்கைளை அறிவதோடல்லாமல், கலை நயத்துடன் இருக்கும் பானைகளையும் காண முடிகிறது.

<table>
<tr><td> </td><td>  </td></tr>
<tr><td>ஊர் முதுமக்கள் தாழி உள்ள இடம்</td><td>பிரம்பயர்</td></tr>
<tr><td>  </td><td> </td></tr>
<tr><td>ஊர் நகர அகழாய்வு</td><td>சிவகளை முதுமக்கள் தாழி</td></tr>
</table>

இறப்பு மனிதனுக்கு அச்சமூட்டுவதாயினும், இறப்பிற்குப்பின் மீண்டும் உயிர்ப்பு எனும் நம்பிக்கையும் மனிதன் கொண்டிருந்ததால், கல்லறையே கருவறையாகக் கருதப்பட்டு, இறந்தவரின் உடலை, தாழிகளிலோ கல்லறைகளிலோ அடக்கம் செய்வது என்ற நம்பிக்கை தமிழகத்தில் மேலோங்கிக் காணப்பட்டது என்று தமிழறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். நம் சங்க இலக்கியங்களில் முதுமக்கள் தாழிகள் பயன்படுத்தப்பட்ட சான்றுகள் உள்ளன.

புறநானூற்றில் "இடுக வொன்றோ சுடுக வொன்றோ படுவழிப்படு கவிப்புகழ்" என்று குழிகளில் அடக்கம் செய்வதைப் பற்றியும் "சுடுவோ ரிடுவேர் தொடுகுழிப் படுப்போர் தூழ்வயி னடைப்போர் தாழியிற் கவிப்போர்" என்ற மணிமேகலைப் பாடல் ஈமமுறைகளைப் பற்றிக் கூறும் பொழுது, தாழியிற் கவிப்போர் என்று தாழியைப் பற்றியும் குறிப்பிடுகிறது.

தமிழகத்தில் மட்டுமே இலக்கியத்தையும் தொல்லியலையும் ஒப்பிட்டு, பண்டைய வரலாற்றை ஒப்பு நோக்க முடிகிறது. ஈமப்பானைகள் தாயின் வயிறு அதாவது உயிர்களைச் சுமக்கும் கருப்பை என்ற குறியீடாகவே கொள்ளலாம் என்று கோசாம்பி என்ற அறிஞர் கூறுகிறார். உயிர்கள் தாயின் வயிற்றிலிருந்தே தோன்றுகின்றன. அதே போன்று இறந்த பின் மீண்டும் தாயின் வயிற்றுக்குள் இவ்வுடல் புகுவதாய்க் கருதப்பட்டு, தாழிக்குள் புதைக்கும் வழக்கம் தோன்றியதாய்க் கொள்ளலாம். தொல் பழங்கால மாந்தரின் நம்பிக்கைகள் விநோதமாய்த் தோன்றினாலும், ஆழந்த நம்பிக்கைகளைக் கொண்டிருந்தது என்று நாம் அறியலாம்.

"முதுமக்கள் தாழிகளைப் பெரும்பாலும் வயலும் வயல் சார்ந்த இடமான மருதம் மற்றும் கடலும் கடல் சார்ந்த இடமான நெய்தல் நிலத்து மக்களே பயன்படுத்தியுள்ளார்கள். தாழிகளைப் புதைக்கும் இடங்களைக் காடு என்றும் புறங்காடு என்றும் அழைத்தனர். மக்கள் இறந்தாலும் சமூகம் அழிந்தாலும், காலம் காலமாய் நிற்கும் என்பதால், சங்க இலக்கியம் புதைக்குழிகளைக் குறிக்கிறது" என்பார் ஆய்வாளர் இ. இனியன் அவர்கள்.

a. The statue of Pa-sag

தமிழகத்திலும் சுமேரியாவைப் போன்று, தாழிகள் வரிசையாய் இடுகாடுகளில் புதைக்கப்பட்டுள்ளன என்று ஆதிச்சநல்லூர் எடுத்துக்காட்டுகிறது. ஒரு மனிதன் இறந்த பின்பு அத்தோடு அற்றுப்போவதில்லை என்ற பொது கருத்து இருந்தால், சுமேரியர்களைப் போன்று தமிழகத்திலும் ஈமத்தாழிக்குள் வைக்கப்படும் பல்வேறு மட்பாண்டங்களில் நெல் உள்ளிட்ட தினை வகைகளும், அவர்கள் பயன்படுத்திய அணிகள், ஆயுதங்கள் முதலான மதிப்புறு பண்டங்களும் வைக்கப்பட்டன. அவர்களைப் போன்ற சிறு சிறு பானைகளில் இறந்தவருக்கு வேண்டிய பொருள்களையும், அவர்களுக்கு விருப்பமான பொருள்களையும் வைத்துள்ளனர். புதைக்கும் போது சிறு சிலையை வைத்துப் புதைப்பதைப் போன்று, ஆதிச்சநல்லூரில் மட்டுமில்லாமல் பல தொல்லியல் மேடுகளிலும் காண முடிகிறது.

சுமேரியாவின் ஊர் என்ற நகரில் கண்டுபிடிக்கப்பட்ட அரசக் கல்லறை ஒன்று சற்றே வித்தியாசமாய் இருந்ததை உல்லி என்ற தொல்பொருள் ஆய்வாளர் கண்டுபிடித்தார் என்பதையும் இங்கே குறிப்பிட வேண்டும். கல்லறைகளில் பல விலை உயர்ந்த பொருள்களோடு இறந்தவரின் உடல் வைக்கப்படுவதால், பல கல்லறைகள் கொள்ளையர்களால் சூறையாடப்பட்டுள்ளது. புதையல் தேடி கல்லறைக் கொள்ளையர்கள் பல நாடுகளில் இருந்துள்ளனர். அதில் தப்பிய ஒரு கல்லறை அரசி பூஅபி என்ற அரச குடும்பத்தவரின் கல்லறை.

அவர் அரசி என்பதால், அவரது உடல், தங்க நகைகளுடனும் மணிகளுடனும் முழு அலங்காரத்துடன் கிடைக்கப் பெற்றுள்ளது. அத்துடன் பல்வேறு பொருள்களும் இந்த அரசியுடன் புதைக்கப்பட்டிருந்தது. சுமேரியர்களின் மண்பாண்டக் கலையும், பொற்கொல்லர் கைத்திறமும், மணிகளின் வகைகளும், ஆயுதங்களும், தாமிரப் பொருள்களும், பொழுதுபோக்கிற்குப் பயன்படும் யாழ் இசைக் கருவியும், சிறு சிலையும், பலகை ஆட்டப் பலகையும் காய்களைப் பற்றியும் கிடைத்த பல்வேறுபட்ட பொருள்களால் அறிய முடிந்தது. கலை நயம் மிக்க மண் பாண்டங்களில் அழகிய படங்கள் வரையப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டன. மண் பாண்டங்கள் பல அளவுகளில் பல வடிவங்களில் இருந்தன. கண்ணைப் பறிக்கும் வடிவமைப்புடன் கூடிய தங்க நகைகளும் மணிகளும் அந்தக் கல்லறையின் சிறப்பு அம்சமாகும்.

இத்தகையச் சான்றுகள், நம் தாமிரபரணி நாகரிகம், சுமேரிய நாகரிகத்தை ஒத்தது என்பதை அறிய உதவுகிறது.

தொடர்- 3

தவறின்றித் தமிழ் எழுதுவோம்

டாக்டர் புதேரி தானப்பன்
தலைவர், திருக்குறள் பாராயணம், புது தில்லி.
தலைவர், தில்லித் தமிழ் வளர்ச்சிக் கழகம், புது தில்லி.

நால்வகைத் தொடர்கள் :

இரண்டு சொற்கள் ஒன்று சேரும்போது இடையில் ஏற்படும் மாற்றமே புணர்ச்சி

ஆகும். இங்கே சில புணர்ச்சிகளும், அவற்றிற்கான காரணங்களும் எடுத்துச் சொல்லப்படுகிறன. நிலை மொழியோடு வருமொழி சேர்வதைப் புணர்ச்சி என்கிறோம். இந்தப் புணர்ச்சியை நான்காகப் பிரிக்கலாம்.

1. உயிர் + உயிர்; 2. உயிர் + மெய்; 3. மெய் + மெய்; 4. மெய் + உயிர்.

முதலில் உயிர் + உயிர் புணர்ச்சி என்றால் என்னவென்று பார்ப்போம்.

நிலைமொழி ஈற்றில் உயிர் எழுத்தும் வருமொழி முதலில் உயிர் எழுத்தும் இருந்து புணர்வதையே உயிர் + உயிர் புணர்ச்சி என்கிறோம். எடுத்துக்காட்டாக

பல + ஆண்டு என்ற இரண்டு சொற்கள் எவ்வாறு புணரும் என்பதைப் பார்ப்போம். பல என்னும் சொல்லைப் பல் + அ என்று பிரிக்கலாம். இறுதி எழுத்து அ என்ற உயிரெழுத்து. ஆண்டு என்ற சொல்லின் முதலெழுத்து ஆ என்ற உயிரெழுத்து. எனவே இது உயிர் + உயிர் புணர்ச்சியாகும். இது எவ்வாறு புணரும் என்று பார்ப்போம்.

பல + ஆண்டு = பல + வ் + ஆண்டு = பலவாண்டு என்று புணரும். இரண்டு சொற்களுக்கும் நடுவில் வ் எழுத்துத் தோன்றி இரண்டையும் இணைத்து வைக்கும். இவ்வகையான புணர்ச்சியை வகர உடம்படுமெய் புணர்ச்சி என்பர்.

நிலைமொழி ஈற்றில் அ, ஆ, உ, ஊ, ஓ, ஔ இருந்து, வருமொழி முதலில் உயிர் எழுத்து இருந்தால், புணரும்போது வகர உடம்படுமெய் தோன்றும்.

பிற + இனத்தார் = பிறவினத்தார் (அ+இ)

நிலா + ஒளி = நிலாவொளி (ஆ+ஒ)

மெது + ஓட்டம் = மெதுவோட்டம் (உ + ஓ)

பூ + ஆடை = பூவாடை (ஊ + ஆ)

கோ + இல் = கோவில் (ஓ + இ) கோவில் என்பதே சரி . கோயில் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட போலி வடிவமாகும்.

கௌ + என்றாள் = கௌவென்றாள்

உயிரெழுத்துக்கள்→ மெய்யெழுத்துக்கள் ↓	அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ
க்	க	கா	கி	கீ	கு	கூ	கெ	கே	கை	கொ	கோ	கௌ
ங்	ங	ஙா	ஙி	ஙீ	ங	ஙூ	ஙெ	ஙே	ஙை	ஙொ	ஙோ	ஙௌ
ச்	ச	சா	சி	சீ	சு	சூ	செ	சே	சை	சொ	சோ	சௌ
ஞ்	ஞ	ஞா	ஞி	ஞீ	ஞு	ஞூ	ஞெ	ஞே	ஞை	ஞொ	ஞோ	ஞௌ
ட்	ட	டா	டி	டீ	டு	டூ	டெ	டே	டை	டொ	டோ	டௌ
ண்	ண	ணா	ணி	ணீ	ணு	ணூ	ணெ	ணே	ணை	ணொ	ணோ	ணௌ
த்	த	தா	தி	தீ	து	தூ	தெ	தே	தை	தொ	தோ	தௌ
ந்	ந	நா	நி	நீ	நு	நூ	நெ	நே	நை	நொ	நோ	நௌ
ப்	ப	பா	பி	பீ	பு	பூ	பெ	பே	பை	பொ	போ	பௌ
ம்	ம	மா	மி	மீ	மு	மூ	மெ	மே	மை	மொ	மோ	மௌ
ய்	ய	யா	யி	யீ	யு	யூ	யெ	யே	யை	யொ	யோ	யௌ
ர்	ர	ரா	ரி	ரீ	ரு	ரூ	ரெ	ரே	ரை	ரொ	ரோ	ரௌ
ல்	ல	லா	லி	லீ	லு	லூ	லெ	லே	லை	லொ	லோ	லௌ
வ்	வ	வா	வி	வீ	வு	வூ	வெ	வே	வை	வொ	வோ	வௌ
ழ்	ழ	ழா	ழி	ழீ	ழு	ழூ	ழெ	ழே	ழை	ழொ	ழோ	ழௌ
ள்	ள	ளா	ளி	ளீ	ளு	ளூ	ளெ	ளே	ளை	ளொ	ளோ	ளௌ
ற்	ற	றா	றி	றீ	று	றூ	றெ	றே	றை	றொ	றோ	றௌ
ன்	ன	னா	னி	னீ	னு	னூ	னெ	னே	னை	னொ	னோ	னௌ

யகர உடம்படு மெய்

நிலைமொழி இறுதியில் இ, ஈ, ஐ ஈறுகள் இருந்தால் இடையில் யகர உடம்படு மெய் வந்து அடுத்துவரும் உயிருடன் சேர்ந்து உயிர்மெய் ஆகிவிடும் .

மணி + அடித்தான = மணி + ய் + அடித்தான் = மணியடித்தான். இது (இ+ அ) இகர ஈறு யகர உடம்படுமெய் பெற்றது .

தீ + அணைந்தது = தீ + ய் + அணைந்தது = தீயணைந்தது. இங்கே (ஈ + அ) ஈ ஈறு யகர உடம்படுமெய் பெற்றது .

மலை + அருவி = மலை + ய் + அருவி = மலையருவி. இங்கே (ஐ + அ) ஐ ஈறு யகர உடம்படுமெய் பெற்றது .

ஏ ஈறு + உயிர்

நிலைமொழி ஈற்றில் ஏ ஈறு இருந்தால் எப்படிப் புணரும் என்பதைப் பார்ப்போம்

தே + ஆரம் = தேவாரம்

இங்கு தே என்பது பெயர்ச்சொல். நிலைமொழி ஏகாரத்தில் முடியும் பெயர்ச் சொல்லாக இருந்தால் வகர உடம்படுமெய் வரும்.

அதே + இடம் = அதேயிடம்.

இங்கு அதே என்ற சொல்லிலுள்ள ஏகாரம் உறுதிப்பொருள் தரும் இடைச் சொல்லாகும் . எனவே ஏகாரம் இடைச்சொல்லாக இருந்தால் யகர உடம்படுமெய் வரும்.

எங்கெல்லாம் உடம்படுமெய் வரும் ?

அகப் புணர்ச்சியில் உடம்படுமெய் வரவேண்டும் . கூட்டுச் சொற்கள் எல்லாம் அகப்புணர்ச்சிக்கு உாியவை.

மா, இலை ஆகிய இரண்டு சொற்கள் சேர்ந்து மாவிலை என்ற சொல்லை உருவாக்குகின்றன . இச்சொல் ஒருசொல் போல உள்ளது. . இதுபோலப் பனையோலை , கருவறை , கோவில் முதலிய சொற்கள் எல்லாம் ஒருசொல் போலவே இயங்குகின்றன . இத்தகைய சொற்களைக் கூட்டுச் சொற்கள் என்கிறோம். இச்சொற்களில் உடம்படுமெய் இடம்பெற வேண்டும்.

கரு+ அறை = கருவறை என்றே எழுத வேண்டும் . கருஅறை என்று எழுதக் கூடாது . மாஇலை என்று எழுதாமல் மாவிலை என்றே எழுத வேண்டும்.

சொற்களின் புறப்புணர்ச்சியில் உடம்படுமெய் தவிர்க்கப்பட வேண்டும்.

அரிசியில்லை என்று எழுதாமல் அரிசி இல்லை என்றே எழுத வேண்டும்.

பொாியவிடம் என்று எழுதாமல்

பொாிய இடம் என்றே எழுத வேண்டும்.

உணர்ச்சி வாக்கியங்களில் உடம்படுமெய் தவிர்க்கப்படல் வேண்டும்.

ஆகா + என்ன அழகு ! என்பதை ஆகாவென்னவழகு ! என்று எழுதக் கூடாது . ஆகா என்ன அழகு ! என்றே எழுத வேண்டும்.

ஐயோ + அழிந்தேன் ! என்பதை ஐயோவழிந்தேன் என்று எழுதாமல் "ஐயோ அழிந்தேன் !" என்றே எழுத வேண்டும்.

விதிவிலக்கு:

அந்த தெய்வம்

இந்த சாலை

எனவும் எழுதலாம். பிழையன்று. காரணம்: தெய்வம், சாலை என்பனசமக்கிருதச் சொற்கள். புணர்ச்சி விதி என்பது சிறப்பாகத் தமிழ்ச் சொற்களுக்கு மட்டும் பொருந்தும்.

உயிர் + உயிர் புணர்ச்சி.

பெயர்ச் சொற்களில் உடம்படுமெய் புணர்ச்சி இருத்தல் வேண்டும்.

கலை + அரசி = கலையரசி

மணி + அம்மை = மணியம்மை

ஆரா + அமுதன் = ஆராவமுதன்

அறிவு + அழகன் = அறிவழகன்

இறை + அன்பு = இறையன்பு

கலைஅரசி, மணிஅம்மை, ஆராஅமுதன், அறிவுஅழகன், இறைஅன்பு என்று எழுதக்

கூடாது.

ஊர்ப் பெயர்களிலும் உடம்படுமெய்

புணர்ச்சி இருத்தல் வேண்டும்.

திரு + ஆனைக்கா = திருவானைக்கா.

திரு + ஆரூர் = திருவாரூர்.

திரு + எறும்பூர் = திருவெறும்பூர்.

திரு + அண்ணாமலை = திருவண்ணாமலை.

திரு + அல்லிக்கேணி = திருவல்லிக்கேணி.

ஒரெழுத்து ஒருமொழிப் புணர்ச்சியில்

உயிர் முன் உயிர்

அ + உலகு = அவ்வுலகு

இ+ உலகு = இவ்வுலகு

எ + உலகு = எவ்வுலகு

ஆ + இன் = ஆவின். ஆவின்பால் இனிது .

வகர உடம்படுமெய் பெற்றது .

சோ + என்று = சோவென்று. மழை சோவென்று பெய்தது .

வகர உடம்படுமெய் பெற்றது .

ஓ + என்று = ஓவென்று. ஓவென்று கத்தினான் .

வகர உடம்படுமெய் பெற்றது .

நா + ஐ = நாவை. நாவை அடக்கு .

வகர உடம்படுமெய் பெற்றது .

மா + இலை = மாவிலை. மாவிலைத் தோரணம் .

வகர உடம்படுமெய் பெற்றது.

ஐ + ஆறு = ஐயாறு.

யகர உடம்படுமெய் பெற்றது .

ஈ + ஐ = ஈயை. ஈயைத் தூர ஓட்டு .

யகர உடம்படுமெய் பெற்றது.

விளித்தொடரில் உயிர் முன் உயிர்

அம்மா ! இங்கே வா வா !

இது ஒரு விளித்தொடராகும் .

விளி என்றால் அழைத்தல் .விளித்தொடரில் உடம்படுமெய் யன்படுத்தலாகாது

அம்மா விங்கே வா வா ! என்று எழுதலாகாது .

"வாயிலோயே ! வாயிலோயே !

அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்து

இறைமுறை பிழைத்தோன் வாயிலோயே !"

என்ற சிலப்பதிகார வரிகளில் வாயிலோயே ! என்பது விளித்தொடராகும் .

இது அடுத்து வருகின்ற ' அறிவறை ' என்ற சொல்லுடன் புணராமல் நிற்பதைக் காணலாம் .

குற்றியலுகரத்தில் உயிர் முன் உயிர்.

பட்டு + ஆடை. இதனைப் பட்(ட்+உ) + ஆடை என்று பிரிக்க முடியும் என்பதால், இது

உயிர் முன் உயிர் புணர்ச்சியாகும் . இது பட்டு + ஆடை = பட்டாடை என்று புணரும் .

உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் என்ற நன்னூல் விதிப்படி இது புணர்ந்தது .

இங்கு உடம்படுமெய் புணர்ச்சி வராது .

சங்கு + ஒலி = சங்கொலி. இது மென்றொடர்க் குற்றியலுகரப் புணர்ச்சியாகும் .

சால்பு + உடையார் = சால்புடையார். இது இடைத்தொடர்க் குற்றியலுகரப் புணர்ச்சியாகும் .

அழகு + உடன் = அழகுடன். இது உயிர்த்தொடர்க் குற்றியலுகரப் புணர்ச்சியாகும்.

சூது + ஆட்டம் = சூதாட்டம். இது நெடிற்றொடர்க் குற்றியலுகரப் புணர்ச்சியாகும்.

எஃகு + ஓடு = எஃகோடு. இது ஆய்தத் தொடர்க் குற்றியலுகரப் புணர்ச்சியாகும் .

அது , இது , எது என்னும் சொற்களில் உயிர் முன் உயிர் புணர்ச்சி :

அது , இது , எது என்னும் உயிர் ஈற்றுச் சொற்களின் முன் உயிர் வந்தால் இருவகையில் புணர்ச்சி நடைபெறும் .

அது + அல்ல = அதுவல்ல.

அது + அல்ல = அதல்ல.

முதல் வகைப் புணர்ச்சியே வழக்கத்தில் உள்ளது. இரண்டாவது வகைப் புணர்ச்சி பேச்சு வழக்கில் உள்ளது.

அது + ஓ = அதுவோ.

அது + ஓ = அதோ.

இதுவோ, அதுவோ எதுவென்று தொியவில்லை.

அதோ அந்தப் பறவைபோல வாழவேண்டும்.

ஆறு என்னும் சொல்லின் முன் புணர்ச்சி.

ஆறு என்னும் சொல் இரு பொருளுடைய சொல்லாகும். ஒன்று ஆறு என்னும் எண்ணைக் குறிப்பது ; மற்றொன்று நதியைக் குறிப்பது.

ஆறு என்ற எண்ணுடன் இரண்டாம் வேற்றுமை உருபான ' ஐ ' சேரும்போது ஆறை என்று வரும். பத்திலிருந்து ஆறைக் கழித்தால் மீதி நான்கு என்று சொல்வோம்.

ஆறு என்பது நதியைக் குறிப்பதாக வைத்துக் கொள்வோம். ஆறு என்ற சொல்லுடன், இரண்டாம் வேற்றுமை உருபான ' ஐ ' சேரும்போது ஆற்றை என்று வரும். அதாவது ' ற்' (வல்லின ற கர ஒற்று) இரட்டிக்கிறது. ஆற்றை நீந்திக் கடந்தான் என்று சொல்வோம்.

ஆறு என்ற எண் வேற்றுமை உருபு ஏற்குமானால், ஆறை, ஆறால், ஆறுக்கு, ஆறிலிருந்து, ஆறுடைய, ஆறில் என்று வரும்.

ஆறு என்ற நதி வேற்றுமை உருபு ஏற்குமானால், 'ற்' இரட்டித்து, ஆற்றை, ஆற்றால், ஆற்றுக்கு, ஆற்றிலிருந்து, ஆற்றுடைய, ஆற்றில் என்று வரும்.

நூறு என்ற சொல்லுடன் உயிர் புணர்தல்.

நூறு, ஆண்டு ஆகிய சொற்கள் இருவிதமாகப் புணரும்.

நூறு + ஆண்டு = நூறாண்டு

கடந்த நூறு ஆண்டுகளில் அறிவியல் வேகமாக வளர்ந்துள்ளது. இங்கு நூறாண்டுகள் என்னும் தொடர் *One Hundred years* என்னும் பொருளைத் தருகிறது.

நூறு + ஆண்டு = நூற்றாண்டு .

நாம் இருபத்தொன்றாம் நூற்றாண்டில் வாழ்கிறோம். இங்கு நூற்றாண்டு என்பது *Century* என்னும் பொருளில் அமைந்துள்ளது.

உயிர் + உயிர் புணர்ச்சி.

நிலைமொழி ஈற்றிலே உயிரெழுத்தும் , வருமொழி முதலில் உயிரெழுத்தும் இருந்தால் எவ்வாறு புணரும் என்பதைப் பார்த்து வருகிறோம்.

நிலைமொழி தனிக்குறிலாயின், அந்த உயிர் ஈறு எதுவாயினும், வ் என்ற மெய் வந்து இரட்டும். இரட்டிய வ் என்ற மெய் வருமொழி முதல் உயிருடன் சேர்ந்து உயிர் மெய்யாகும்.

ஒ + ஒன்று > ஒ + வ் + வ் + ஒன்று = ஒவ்வொன்று

இ + இரண்டு > இ + வ் + வ் + இரண்டு = இவ்விரண்டு

எ + ஏழு > எ + வ் + வ் + ஏழு = எவ்வேழு

அ + உலகம் > அ + வ் + வ் + உலகம் = அவ்வுலகம்

இ + ஊர் > இ + வ் + வ் + ஊர் = இவ்வூர்

உ + இடம் > உ + வ் + வ் + இடம் = உவ்விடம்

எ + அரசன் > எ + வ் + வ் + அரசன் = எவ்வரசன்

என்று வரும். இது தனிக் குறில் நிலைமொழிப் புணர்ச்சி விதி எனப்படும்.

ட், ற் இரட்டித்தல்

நெடிற்றொடர் , உயிர்த்தொடர்க் குற்றியலுகரச் சொற்களின் இறுதியில் குற்றியலுகரத்துடன் கூடி நிற்கும் ட் ,ற் என்னும் மெய்கள் வேற்றுமை உருபு ஏற்கும்போது இரட்டிக்கும்.

வீடு - நெடிற்றொடர்க் குற்றியலுகரம்

வீடு + ஐ = வீட்டை

வீட்டைக் கட்டினான் என்று சொல்ல வேண்டும். ட் - இரட்டிக்கும்.

வீடைக் கட்டினான் என்று சொல்லக் கூடாது.

கயிறு -- உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்.

கயிறு + ஆல் = கயிற்றால்.

கயிற்றால் கட்டினான் என்று சொல்ல வேண்டும். ற் -- இரட்டிக்கும்.

கயிறால் கட்டினான் என்று சொல்லக் கூடாது.

இவ்வாறே வீடு , கயிறு ஆகிய சொற்கள் மற்ற வேற்றுமை உருபுகளை ஏற்கும்போது.

வீட்டுடன் , வீட்டுக்கு , வீட்டிலிருந்து , வீட்டினுடைய , வீட்டில் என்று ட் இரட்டித்தும் , கயிற்றுடன் , கயிற்றுக்கு , கயிற்றிலிருந்து , கயிற்றினுடைய , கயிற்றில் என்று ற் இரட்டித்தும் வரும்.

உருபும் பயனும் உடன் தொக்க தொகையில் ட் , ற் இரட்டிக்கும்.

நாட்டை ஆளும் அரசன் நாட்டரசன் என்று அழைக்கப்படுகிறான் . இது இரண்டாம் வேற்றுமை உருபும் , பயனும் உடன் தொக்க தொகையாகும் . நாட்டரசன் என்ற சொல்லில் ட் இரட்டித்தது.

நாடு + அரசன் = நாட்டரசன். நாடரசன் என்று எழுதுதல் பிழை.

கயிறால் செய்த ஏணியைக் கயிற்றேணி என்று அழைக்கிறோம் . எனவே கயிற்றேணி என்பது மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையாகும். கயிற்றேணி என்ற சொல்லில் ' ற் ' இரட்டித்து.

கயிறு + ஏணி = கயிற்றேணி. கயிறேணி என்று எழுதுதல் பிழை.

வீட்டுக்கு உரிய இலக்கணத்தை வீட்டிலக்கணம் என்று அழைக்கிறோம். எனவே வீட்டிலக்கணம் என்ற தொடர் நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகையாகும். வீட்டிலக்கணம் என்ற சொல்லில் ட் இரட்டித்தது. வீடு + இலக்கணம் = வீட்டிலக்கணம். வீடிலக்கணம் என்று எழுதுதல் பிழை.

மிடறு என்றால் குரல்வளை என்று பொருள். மிடற்றிலிருந்து வரும் ஒலியை மிடற்றொலி என்று அழைக்கிறோம். இது ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையாகும். மிடற்றொலி என்ற சொல்லில் ' ற் ' இரட்டித்தது.

மிடறு + ஒலி = மிடற்றொலி. மிடறொலி என்று எழுதுதல் பிழை.

ஆறாம் வேற்றுமையில் உருபும் பயனும் உடன் தொக்க தொகை வராது.

நாட்டில் வாழும் ஆடவரை நாட்டாடவர் என்று அழைக்கிறோம். இது ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையாகும். நாட்டாடவர் என்ற சொல்லில் ட் இரட்டித்தது.

நாடு + ஆடவர் = நாட்டாடவர். நாடாடவர் என்று எழுதுதல் பிழை.

பண்புத்தொகை
நிறம், வடிவம், சுவை, அளவு முதலானவற்றை உணர்த்தும் பண்புப்பெயருக்கும் அது தழுவிநிற்கும் பெயர்ச்சொல்லுக்கும் இடையில் "மை" என்னும் பண்பு விகுதியும் ஆகிய, ஆன என்னும் பண்பு உருபுகளும் மறைந்து வருவது பண்புத்தொகை எனப்படும்.

பண்புத் தொகையில் இரட்டித்தல்

பண்புத் தொகைகளில் நிலைமொழி ஈற்றில் நெடில் அல்லது உயிரை அடுத்து டு, று என்னும் குற்றியலுகரங்கள் நின்றால், வருமொழி முதலில் உயிர் வந்தால், குற்றியலுகரம் ஏறிய ட்,ற் என்னும் மெய்கள் இரட்டிக்கும்.

காடு + அரண் = காட்டரண் என்று வரும். இதைக் காடாகிய அரண் என்று விரிக்கலாம். ஆகிய -- பண்புத் தொகை உருபாகும்.

மேடு + ஊர் = மேட்டூர் என்று வரும். ஆறாம் வேற்றுமைத் தொகையில் இரட்டிக்கும்.

ஞாயிறு + ஒளி = ஞாயிற்றொளி.

ஞாயிற்றொளி -- ஆறாம் வேற்றுமைத் தொகையாகும். இதை ஞாயிற்றினுடைய

ஒளி என்று விரிக்கலாம். உடைய -- ஆறாம் வேற்றுமை உருபாகும்.

காடு + அழகு = காட்டழகு. இதுவும் ஆறாம் வேற்றுமைத் தொகையாகும். காட்டினுடைய அழகு

என்று விரிக்கலாம். இங்கு ட் இரட்டித்தது.

இத்துடன் உயிர் முன் உயிர் இலக்கணம் முற்றும்.

(இதன் தொடர்ச்சியை அடுத்த பகுதியில் பார்க்க).

எளிய முறையில் யாப்பறிவோம்

நெருப்பலையார் இராம. இளங்கோவன்,
பொருளாளர்,
பெங்களூரு தமிழ்ச் சங்கம்

பாடம் :27
கலித்துறை

இந்தப் பாடத்தில் கலித்துறைச் சார்ந்த வேறு சில துறைகள் பற்றி சுருக்கமாக அறிவோம். நான்கு வகைப் பாக்களும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு துறையைச் சார்ந்ததால் துறை என அழைக்கப்படுகிறது. இத்துறைகளில் குறள்வெண் செந்துறை, ஆசிரியத் துறை, கலித்துறை, வஞ்சித் துறை ஆகிய துறை நான்கு வகைப்படும். முதலில் குறள்வெண் செந்துறையை அறிவோம்.

குறள்வெண் செந்துறை:

இரண்டிரண்டு அடிகளாய் அடிகளில் அளவொத்து வந்து, குறளின் இனமாக இருப்பது. ஓரடியில் எத்தனை சீர்கள் வருகின்றனவோ அத்தனை சீர்களும் அப்படியே அடுத்த அடியிலும் அளவொத்து வருதலாகும். இதனை குறள்வெண் செந்துறை, வெண்செந்துறை என்று இரு பெயரில் அழைக்கப்படுகிறது. ஒவ்வோரடியிலும் நான்கு, ஆறு, ஏழு, எட்டு சீர்கள் மட்டுமல்ல, எத்தனை சீர் வந்தாலும் அத்தனை சீர்களும் அடுத்த அடியிலும் வந்து இரண்டடியும் அளவொத்த சீர்களில் வரும்.

இப்பாட்டு, குறள் இனம் போல் தெரிந்தாலும் தளை பார்க்கத் தேவையில்லை. இரண்டடிக்கும் ஓரெதுகைப் பெற்று வரும். நாற்சீரடிப் பாட்டில் முதற் சீருக்கும், மூன்றாம் சீருக்கும் மோனை அமைய வேண்டும். அறுசீரடியில் முதற் சீரிலும் நான்காம் சீரிலும் மோனை அமைய வேண்டும். எழுசீர் , எண்சீரடியில் முதற் சீரிலும் ஐந்தாம் சீரிலும் மோனை வருதல் வேண்டும். அளவடிக் குறள்வெண் செந்துறையில் என்னுடைய எடுத்துக் காட்டுப் பாட்டொன்றறிவோம்.

அளவடிக் குறள்வெண் செந்துறை:

காத்தே எதையும் கனிவாய் அணுகிட
ஏத்திப் பொறுமை ஏற்றல் நலமே!

(நெருப்பலையார்)

மேலேயுள்ள பாடல் நான்கு நான்கு சீர்கள் கொண்ட இரண்டடியாய் வந்த அளவடிக் குறள்வெண் செந்துறைப் பாடலாகும். அடுத்து என்னுடைய அறுசீர் பாடலொன்றைக் காண்போம்:

அறுசீரடிக் குறள்வெண் செந்துறை:

பசியில் துடித்தே துவளுகிற
பாடு பட்டே உழைப்போரின்
பசியைப் போக்க விழைவோமே!
பசியு மில்லா நாடமைப்போம்!
(நெருப்பலையார்)

இது ஓரெதுகையால் அமைந்த அறுசீர் குறள்வெண் செந்துறைப் பாடலாகும். "மா+ மா+ காய்" என்ற வாய்பாட்டில் அமைந்த அறுசீர் மண்டிலம் போல் இருக்கும். இது சிறுவர் பாடல் இயற்ற உதவும். தொடர்ந்து என்னுடைய எழுசீரடிக் குறள்வெண் செந்துறைப் பாடலொன்றையும் காண்போம்.

எழுசீரடிக் குறள்வெண் செந்துறை:

இருளை வாழ்வில் போர்த்தி உயிர்த்தால்
இழிந்தோர் என்றே இகழாமல்
பெருத்த மனத்தால் பொறுமைப் போற்றி
பெரிதாய் உரைப்போர் பெரியோரே!
(நெருப்பலையார்)

முதல் அரையடி நான்கு மாச்சீர்களும், அடுத்த அரையடி இரண்டு மாச்சீர்களும் ஒரு காய்ச்சீரும் பெற்று வந்த எழுசீர் குறள்வெண் செந்துறைப் பாடல் இதுவாகும். மாச்சீரெனில் புளிமா, தேமா ஆகிய இரண்டும் இடம் பெறலாம். இப்பாடலும் சிறுவர் பாடலுக்குகந்ததாகும். அடுத்து எண்சீரில் என்னுடைய ஒரு பாடலைக் கீழே காண்போம்:

எண்சீரடிக் குறள்வெண் செந்துறை:

வாக்கினையும் அளவோடு பேசாமல் விட்டால்
வாக்கினிலே மாட்டியேதான் துடிக்கின்ற நிலையே
ஆக்கமாகும் என்றுணர்ந்தே எதிலுந்தான் அளவாய்
அளந்துவைத்துப் பயன்படுத்த வாழ்வேதான் சிறக்கும்!
(நெருப்பலையார்)

அரையடிக்கு மூன்று காய்ச்சீரும் ஒரு மாச்சீரும் என்னும் வாய்பாட்டில் வந்த எண்சீரடிக் குறள்வெண் செந்துறைப் பாடலாகும். மாச்சீரானது புளிமாவோ தேமாவோ வரலாம். இதுவும் சிறுவர் பாடல் எழுத பயன்படும். அடுத்து, ஆசிரியத் துறையைக் காண்போம்.

ஆசிரியத் துறை:

ஆசிரியத் துறை என்னும் இத்துறைப் பாடலானது நான்கடியாய் வந்து ஈற்றடி குறைந்த சீர்களாயும், முதலயலடி (இரண்டாமடி) சீர் குறைந்து, இடைமடக்காய் நான்கடிகளால் வருவதும், இடையிடையே சீர்கள் குறைந்து

நான்கடியாய் வருவதும், இடையிடையே சீர்கள் குறைந்து இடைமடக்காய் நான்கடிகளால் வருவதும் ஆசிரியத் துறைப் பாட்டுகளாகும். ஈற்றடியின் சீர் குறைந்து இடைமடக்காய் வந்த என்னுடைய பாடலொன்றைக் காண்போம்.

இடைமடக்காய் ஈற்றடிக் குறைந்து வந்த ஆசிரியத் துறை:

நெஞ்சம் நிறைந்த நேர்மை மாந்தர்
எஞ்சிய உயர்ந்த வாழ்வையே வாழ்வார்
எஞ்சிய உயர்ந்த வாழ்வையே வாழ்வார்
அஞ்சா நெஞ்சரு மவரே.

(நெருப்பலையார்)

மேலேயுள்ளபாட்டில்இரண்டாம்அடிமூன்றாம்அடியின்இடைமடக்காக வந்து, ஈற்றடி முச்சீரில் நிறைவு பெற்றுள்ளது. இப்படி மாறி மாறி நான்கு வகையாக வரும். அடுத்து, ஆசிரியத் துறையை அடுத்து, வஞ்சித்துறையைக் காண்போம்.

வஞ்சித் துறை:

குறளடி நான்கினைப் பெற்று தனியே வருவது வஞ்சித் துறை யாகும். காய்ச்சீரும் கனிச்சீரும் பெற்று வந்த என்னுடைய வஞ்சித் துறை எடுத்துக் காட்டுப் பாட்டைக் கீழே காண்க:

வஞ்சித் துறை எடுத்துக் காட்டுப் பாடல்:

ஞானத்தில் சினமிலாமலே
மானத்தில் மக்களுக்கென
ஆனவரை வானமதுதான்
மௌனமகல மழைப்பொழியுமே!

(நெருப்பலையார்)

முதல் சீர் தேமாவாகவும், மற்றச் சீர்கள் கூவிளமாய் வேறு சந்தம் பெற்றும், வேறு சில சந்தங்கள் பெற்றும் வஞ்சித்துறை வேறு வகைகளில் வரும். வஞ்சித்துறையை யடுத்து வஞ்சிப்பாவையும் சிறிது அறிந்து வைப்போம்.

வஞ்சிப்பா:

நான்கு வகைப் பாக்களுள் ஒன்றாகும். குறளும் சிந்தும் அல்லாத அடிகள் எல்லாவற்றிலும் வஞ்சித்து வருதலால் வஞ்சிப்பாவென பெயர் பெற்றது. இரு சீரடியாலும் முச்சீரடியாலும் மூன்று அடிகள் முதல் பல அடிகளாலும் வருதலே வஞ்சிப் பாவாகும். இப்பாட்டில் பெரும்பான்மையாகத் தேமாங்கனி, புளி

மாங்கனி, கருவிளங்கனி, கூவிளங்கனி ஆகிய கனிச்சீர்களே வந்தாலும், பிற சீர்களும் சிறுபான்மையாக விரவி வரும். நாலசைச்சீர்களும் விரவி வரலாம். வஞ்சியடிகளிலும் தனிச்சொல் வரும். ஆசிரியச் சுரிதகத்தால் முடியும். சுரிதகத்தின் ஈற்றுக்கு அயலடி பெரும்பாலும் முச்சீர் பெற்றே வரும்.

பெரும்பாலான வஞ்சித் தளையும், சிறுபான்மையான வேறு தளையும் வரும். ஈற்றுச்சீர் ஏகாரத்தில் முடியும். இருசீரடியான குறளடியும், முச்சீரடியான சிந்தடியும் வரும். இப்பாவில் தூங்கலோசையைப் பெற்று வரும். தூங்கலோசையைத் தன்னுடைய ஓசையாகக் கொண்டதாகும். தனிச் சொல்லுடன் ஆசிரியச் சுரிதகத்தால் முடியும். இவ்வஞ்சிப் பாவிற்கு வஞ்சித் தாழிசை, வஞ்சித் துறை, வஞ்சி மண்டிலம் என்று மூன்று இனமுண்டு. இதை முன்னமே அறிந்துள்ளோம். இப்பொழுது என்னுடைய எடுத்துக்காட்டுப் பாடலொன்றைக் காண்போம்:

குறளடி வஞ்சிப்பாவின் எடுத்துக் காட்டுப் பாட்டு:

தட்டைவானிலே வழக்கம்நிறை
மொட்டைமாடியாம் அதன்மீதிலே
படுத்துறங்கிடும் கார்முகிலுமே;
படுத்தேமலை முகட்டின்தனில்
வெண்முகிலுமே படுத்துறங்குமே;
வெண்முகிலதில் நீர்மேல்நுரை
வழக்கத்துடன் இணையேயென

அழகாயவை படுத்துறங்குமே;
ஆற்றில்தனில் வெள்ளமாமது
போற்றித்தொழு துறங்குமே;அது
போல்மாந்தரும் வழக்கம்என
கால்நீட்டியே இணையேயென
உறங்கிக்களைப் பெல்லாம்கலைந்
துறங்கிடவென முனைதல்நலம்
என நினைந்தே
ஒளவை வாக்கினை ஏற்றல்
ஒளசீரம் தனில்தான் மாந்தரின் அழகே!
(ஒளசீரம் - படுக்கை)

(நெருப்பலையார்)

பெரும்பாலும் பாவின் இறுதியில் ஆசிரியச் சுரிதகத்தின் ஈற்றயலடி முச்சீரடியாக வரும். நாற்சீரடியும் வருதலுண்டு. மேலேயுள்ள பாட்டில் "என நினைந்தே" என்று தனிச்சொல் வந்துள்ளதை நோக்குக. அடுத்து, சிந்தடி வஞ்சிப் பாவில் என்னுடைய ஒரு எடுத்துக்காட்டுப் பாடல் பார்ப்போம்.

சிந்தடி வஞ்சிப்பா எடுத்துக் காட்டாக ஒரு பாடல்:

மலைவாளென அருவியினையே வீசும்மலை;
உலைவாளென கொதிதன்னையே வீசுகிறதீ;
மலைவாளெனக் குத்தும்அணங் கவள்மார்பென
வலைவாளென வீசிக்கடல் மீனைக்கவர்
நிலையென்றுதான் மீனவரவர் ஒழுக்கமாகுமே;
சிலைவாளென வீசும்உளி போல்சொற்களைப்
பிறருக்குமே உதவும்நனி வழியில்உள
உறவும்எனின் உணர்வோடுதான் ஒழுக்கம்என
உணர்வோமே
நல்லறம் நற்செயல் நல்வினை நல்லுரை
இல்லந் தோறு(ம்) இருந்தால்
வெல்லும் உணர்வும் ஒழுக்கம் மிகுமே!

(நெருப்பலையார்)

முச்சீரடி எனும் சிந்தடியால் வந்து "உணர்வோமே" என்ற தனிச்சொல் பெற்று மூன்றடிக் கொண்ட ஆசிரியச் சுரிதகத்தால் முடிந்தது. வஞ்சிப்பா பயன் பாட்டில் இல்லாததால் ஓரளவு தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும் என்பதால் இப்பா வகையைப் பற்றி இத்துடன் நிறுத்திக் கொள்வோம்.

சந்திரோதயம் பதிப்பகம், மதுரை

3/422, Thiruvalluvar Street,
Dinamani Nagar, Madurai 625 018.
Mob: +91 7010997639

	நூல்கள்	விலை (Rs.)
1.	திருவிளையாடல் புராணக் கதைகள் (எளிய உரைநடையில்)	200
கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதை நூல்கள்		
1.	உன்னோடு உரையாடுதல்	100
2.	காதல் மொழி	200
3.	பார்வையில் பூத்த நிலா	100
4.	தேனடையும் வரலாறு	100
5.	நுண்கலை மருத்துவன்	200
6.	தொடரும் புழுதிக்கால்கள்	100
முனைவர் செ. இராஜேஸ்வரியின்		
எம்.ஜி.ஆர். பற்றிய நூல்கள்		
1.	வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர்.	200
2.	எம்.ஜி.ஆர். நிழல் நிஜம் நிரந்தரம்	200
3.	சிக்கு மங்கு சிக்கு மங்கு சச்ச பப்பா (எம்.ஜி.ஆர். கற்பிக்கும் குழந்தை வளர்ப்பு முறைகள்)	200
4.	வீரமகன் போராட வெற்றி மகள் பூச்சூட	200
5.	மகளிர் போற்றும் மக்கள் தலைவர் எம்.ஜி.ஆர்.	200
6.	எம்.ஜி.ஆர். ஒரு ஜீவ நதி	200
7.	எம்.ஜி.ஆர். ஒரு கலியுகப்போராளி	200
8.	ஒளி விளக்கு எம்.ஜி.ஆர்.	200
9.	வெற்றிப் படிக்கட்டில் நாடோடி மன்னன் – I	200
10.	நீங்க நல்லா இருக்கணும் [எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் -I]	200
11.	பாட்டுடைத் தலைவன் எம்.ஜி.ஆர். [எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் - II]	200
12.	இரசிகர்களின் இதய தெய்வம் எம்.ஜி.ஆர்.	200
13.	முத்தமிழ்க் காவியம் மதுரை வீரன்	200
14.	இரட்டை வேடத்தில் ஜொலிக்கும் எம்.ஜி.ஆர்.	200
15.	எம்.ஜி.ஆர். படங்களில் அறிவியல் புனைவு	200
16.	படகோட்டி, மீனவ நண்பன் ஓர் ஒப்பீடு	200
17.	Unique Fandom of MGR	200
18.	எம்.ஜி.ஆர். படங்களில் தொழில் தர்மம்	200

19.	எம்ஜிஆர் படத்தில் சண்டைக் காட்சிகளின் சுவாரஸ்யங்கள் –I	200
20.	எங்க வீட்டுப்பிள்ளை	200
21.	எம்.ஜி.ஆர். வீடும் விருந்தும்	200

முனைவர் சந்திரிகா சுப்பிரமணியன் நூல்கள்

1.	தலைமை பொறுப்பேற்கலாம்	120
2.	இணையத் தமிழ்	150
3.	ஊடகச் சட்டங்கள்	250
4.	ஆஸ்திரேலியாவில் அருந்தமிழ்	200
5.	கொசு வீட்டில் பாயாசம் (சிறுவர் நூல்)	200
6.	மாயோன் வீட்டுத் தோட்டத்தில் (சிறுவர் நூல்)	200

முனைவர் செ. இராஜேஸ்வரியின்
சமூகப்பண்பாட்டு ஆய்வு நூல்கள்

1.	பண்பாட்டு நகர்வுகள் – தமிழ் நாட்டில் இருந்து ஜப்பானுக்கு	200
2.	பெண் தெய்வ வழிபாடு	200
3.	தேவேந்திரன்	200
4.	மருதநிலப் பெண் தெய்வங்கள் (வராகி, பிடாரி, தவ்வை)	200
5.	இரு நிலத்தில் திருமுருகன்	200
6.	முன்னோர் வழிபாடு (கதிரவன், காலதேவன், நாகர் வழிபாடும்)	200
7.	வேளாண்மரபில் விதைப்பும் பூப்பும்	200
8.	யானைக்கடவுள்	200
9.	பெண் பூப்பின் புனித வழிபாடு	200

முனைவர் செ. இராஜேஸ்வரியின்
கவிதைத் திறனாய்வு நூல்கள்

1.	பாடுபொருளும் பாசப்பொருளும்	250
2.	"பூ மர நிழலி"ன் களமும் காலமும்	200
3.	"2020 தைமாதத்தில் இன்று" கவிதையில் அடிக்கருத்தியல் ஆய்வு	100
4.	கவிஞர் முத்தமிழ் விரும்பியின் **கவிதையில் காதல்**	100
5.	கவிஞர் முத்தமிழ் விரும்பியின் பயணக் கவிதைகள்	200

ஆங்கிலக் கவிதைகளின் தமிழ் மொழி பெயர்ப்பு
முனைவர் செ. இராஜேஸ்வரி

1.	எட்டுத்திக் கும் செல்வீர்	200
2.	அவன் கடவுளுக்கு நிகரானவன்	200
3.	செக்கச் சிவந்த ரோஜா	200
4.	கலீல் ஜிப்ரா னின் "மணலும் நுரையும்"	200
5.	கலீல் ஜிப்ரானின் "பாடல்கள் 14"	200

Tamil Classics in English – (Dr. C. Rajeswari)

1.	Kurunthokai	200
2.	Agananooru	200

3.	Purananooru	200
4.	Naaladiyaar	200
5.	Aasaarakkovai	200
6.	Thiru Kutraala Kuravanji	200

தற்காலத் தமிழில் சங்க இலக்கிய நூல் வரிசை

1.	குறுந்தொகைக் கவிதைகள்	200

மொழிபெயர்ப்பு ஆய்வு நூல்கள் – முனைவர் செ. இராஜேஸ்வரி

1.	மொழிபெயர்ப்பியல் ஆய்வு (ஆய்வு நூல்)	200
2.	கவிதை மொழிபெயர்ப்பு	200
3.	நவீன மொழிபெயர்ப்பு உத்திகள் *(Co-author)*	200
4.	மொழிபெயர்ப்பில் பெயரும் பொருளும்	200

தமிழ் இலக்கண நூல்

1.	தமிழில் வேற்றுமை உருபுகள்	200

சிறு கதை, கவிதை

1.	அமராவதியின் காதல் - சத்யப்பிரபா	200
2.	ரோஜா மொட்டு (சித்திரக் கவிதைகள்) - சத்யப்பிரபா	200

மாத இதழ்கள்

1.	தமிழணங்கு மாத இதழ்	200
2.	Love Thamizh	500

பேராசிரியர் முனைவர் தே.ஞானசேகரனின் நூல்கள்
ஆங்கிலத்தில் – முனைவர் செ. இராஜேஸ்வரி

Moonstone Publication, Madurai

1.	Emerging Mallarism	200
2.	Festival of lord Indra	200
3.	Role of Devendirar's in Indian war of Independence (Sundaralingam Kudumbanar)	200
4.	Re reading of Pallu literature	200
5.	Mallariyan Literature	200
6.	Frontyard without My Dad (Poem)	200

Poems of Er.Poet Muththamizh Virumbi - In English Dr. C. Rajeswari

[Moonstone Publication]

1.	Therapist of the Finest Art	200
2.	Following Dusty Feet	200

Other Books

1.	Concepts of Constitution - Dr.S. Kalai Arasu	300
2.	Aranyani By Vijeni (English Novel Part I & Part II)	200

Hutha

Health Care Products

நலம்..தரம்..சுவை..! இதுவே எங்கள் தாரகமந்திரம்.

மசாலா வகைகள்

*மஞ்சள் தூள்
*தனி மிளகாய் தூள்
* பிரியாணி மசாலா
* 4 in 1 புளிக்குழம்பு மசாலா
* சாம்பார் மசாலா
*மட்டன் & சிக்கன் பெப்பர் தொக்கு மசாலா
* மருந்துக் குழம்பு மசாலா
* முடக்கற்றான் ரசப் பொடி
*மட்டன் & சிக்கன் குழம்பு மசாலா

ஹெல்த் மிக்ஸ்

* ஹெல்த் மிக்ஸ் பவுடர்
* கர்ப்பிணிகளுக்கான ஹெல்த் மிக்ஸ் பவுடர்
* டயாகேர் ஹெல்த் மிக்ஸ் பவுடர்
* பீட்ரூட் ஊட்டச்சத்து மால்ட்

பொடி வகைகள்

* பிரண்டை இட்லிப்பொடி
*பருப்பு சாதப்பொடி
*கொள்ளுப்பொடி

சைவ தொக்கு வகைகள்

* புளியோதரை தொக்கு
* கோங்குராத் தொக்கு
* தக்காளித் தொக்கு
* மல்லித் தொக்கு
* பூண்டு தொக்கு
* முருங்கைக் கீரை சூப்
* வத்தக்குழம்பு தொக்கு
*லெமன் சாதத்தொக்கு
*பிரண்டைத்தொக்கு

பிரசவ லேகியம் (On Order)

கோதுமை இடியாப்பம் மாவு

அசைவ தொக்கு வகைகள்

*வஞ்சிரக் கருவாட்டுத் தொக்கு
*மாசிக் கருவாட்டுத் தொக்கு
*இறால் தொக்கு

Mfg & Marketed by:
HUTHA HEALTH CARE PRODUCTS
Chromepet, Chennai - 600044
PH: 9025303765